பதிவு எண் 2041

KUDI ARASU.

தனிப்பிரதி விலை { உள் நாடு 1 அணா, வெளி நாடு $1\frac{1}{2}$ அணா }

# குடி அரசு

| | | |
|---|---|---|
| வருட சந்தா முன் பணம் | ... | ரூ 3—0 |
| 6 மாத சந்தா „ | ... | ரூ 1-12 |
| வெளி நாட்டிற்கு „ | ... | ரூ 4—0 |

வாரப்பதிப்பு.
ஆசிரியர்: ஈ. வெ. ராமசாமி.

| | |
|---|---|
| வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. | 12 |
| கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. | 2 |
| நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம் | |

மாலை 3. | ஈரோடு, பிரபவ ஸ்ரீ சித்திரை மீ 3உ (15—4—28) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 51

இனாம்! இனாம்


மூனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட Self-filling பௌண்டன்பேனா இனாம்.



எங்கள் 18 காரட் ரோல்டு கோல்டு பின்புறம் விசித்திரவேலை செய்யப்பட்ட லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலேசொல்லியபடி பௌண்டன் பேனா இனாமாய் அனுப்பப்படும். கடியாரம் விலை ரூ. 4-12-0. 5வருஷம் உத்தரவாதம். உடனே எழுதுங்கள்.

CANADIAN WATCH PEOPLE,
George Town, Madras.

கையில் கட்டும் ரோல்டு கோல்டு ஸ்பிரிங் செயினும், பௌண்டன் பேனாவும் இனாம்.



நூதனமாக வரவழைத்த எங்களின் 22 காரட் ரோல்டு கோல்டு கை கெடியாரம், 5 வருஷம் உத்திரவாதம் புதுமாதிரி பார்வைக்கு அழகாயிருக்கும், சரியான காலத்தைக் காட்டும்.
விலை ரூ. 6—8—0. தபால் கூலி வேறு.
லண்டன் வாட்ச் அவுஸ்.
3, பார்க் டவுன், (தா) சென்னை.

சிரிப்பு! சிரித்து சிரித்து வயிறு சிரிப்பு!
புண்ணாய் விட்டதென்று ஒருவர் எழுதுகிறார்.


## முத்துமாமா.

நேயர்களே! இந்தக் கதையைப் படித்துவிட்டால் நீங்கள் சாப்பிடும் போதும் சிரிப்பீர்கள், தூங்கும்போதும்கூட சிரிப்பீர்கள். வேண்டுவோர் $4\frac{1}{2}$ அணா ஸ்டாம்பு அனுப்பவும். எந்த தேசத்து ஸ்டாம்பாயிருந்தாலும் அனுப்பலாம்.

வாஸன் புஸ்தகசாலை,
97, அண்ணாபிள்ளைத் தெரு, மதராஸ்.

டேபில் டைம்பீஸ் இனாம் !!!

எங்கள் 22 காரட் ரோல்ட் கோல்ட் "கோல்டன்" கைக்கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேஜையின் பேரில்வைக்கக்கூடிய ஒரு அழகான டேபில் டயம்பீஸ் இனாமாக சேர்த்து அனுப்பப்படும். இரண்டும் 5 வருஷம் உத்திரவாதம். மூன்றுங்கள் விலை ரூ. 7-8-0 தபால் கூலி பிரத்தியேகம்.



வி. பி. சட்டமில்லாத வெளிநாட்டு நேயர்கள் இதற்கு 8-8-0 முன் பணம் அனுப்பவேண்டும்.
தி. பான்ஸி வாட்சு அவுஸ்,
15 A-பீட், ஜி. டி மதராஸ்.

முன் விலை ரூ. 14 இப்பொழுது ரூ. 7.
22 காரட் ரோல்டு கோல்டு புது மாடல் கைக்கடியாரங்கள்



மேற்கண்டபடி எந்த ஷேப்வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி. கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம் போல் இருக்கும். ஒவ்வொருகடியாரத்திற்கும் ரோல்டுகோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனாமாய்ச்சேர்த்து அனுப்பப்படும். 5வருஷம் உத்திரவாதம். ரூ. ஏழுமட்டும்.

CANADIAN WATCH PEOPLE
George Town, Madras.


## மூன்றுமாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

(1916 ஸ்ரீ ஸ்தாபிக்கப்பட்டது)

மோட்டார் வண்டிகளை ஓட்டவும் பிரிக்கவும் பூட்டவும் கற்றுக்கொடுக்கப்படும், தேர்ச்சியடைந்தபின் கவர்மெண்ட் லைசென்ஸ் வாங்கிக்கொடுப்போம். மற்ற விபரத்திற்கு நேரில் எழுதவும்.
மதராஸ் தென்னிந்தியா மோட்டார் இஞ்சினியரிங்வொர்க்ஸ்,
மைலாப்பூர், மதராஸ்.

நூதன ஜெர்மன் எலக்ட்ரிக் விளக்கு.

இதை மேஜையின் பேரிலும், சுவற்றிலும் வைக்கலாம். இராத்திரியில் படுக்கையிலிருந்தபடியே விளக்கை இதில் கண்ட கயிற்றின் (wire) உதவியால் நிறுத்தவும் செய்யலாம். புயற்காற்றடித்தாலும் எரியும். பிரகாசம் கண்ணைப் பறித்துக்கொண்டு போகக்கூடியது. விசேஷ காலங்களில் வைத்தால் திரளான ஜனங்கள் அதிசயத்தைப் பார்க்கக் கும்பலாகக்கூடி விடுவார்கள். மிக ஜாக்கிரதையாக பாக்கிங் செய்தனுப்பப்படும். குறைந்த விலை 4—8—0. தபால் செலவு 0—8—0.



தி. பான்ஸி வாட்சு அவுஸ்,
15 A-பீட், ஜி. டி. மதராஸ்.

இனாம்! இனாம்!!

சாரவிவேகி சதாநந்தன் சம்பாஷணை 'கிழவன் குமாரனானன்' இவ்விரண்டு கதைகள் அடங்கிய புத்தகம் தங்கள் விலாசம் தெரிவித்தால் இனாமாக அனுப்புவோம்,
ஸ்ரீ சர்து இரத்தினசற்குரு புத்தகசாலை,
பார்க் டவுன் போஸ்டு, சென்னை.

## கணித சோதிடம்

பரசித கணிதப்படி கணிதஞ்செய்து பலன்கள் கூறப்படும். ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன்கள் திட்டமாயும் விவரமாயும் எழுதி அனும்ப ரூபாய் இரண்டு. ஆருடம் 5 கேள்விகளுக்கு விவரமான பதில் எழுதி அனுப்ப ரூபாய் ஒன்று. விவாக விஷயம் ரூபாய் ஒன்று. விவாக விஷயத்தைப்பற்றி ஈர்கள் எழுதி அனுப்புவதைக் கொண்டு பெண்ணுக்குப் புருஷனும், புருஷனுக்குப் பெண்ணும் இன்னாரென்று பலவகை சுலபமாய் நிச்சயிக்கலாம். எங்களிடம் அருமையான பூர்வீக சோதிட நூற்கள் பலவுள்ளதால் நாங்கள் எழுதி அனுப்பும் பலன்கள் பொதுப்பலன்களாயிராமல் விவரமாகவும் சாஸ்திரீகமாகவுமிருக்கும். உங்கள் ஜாதக நகலையாவது கடிதம் எழுதும்நேரத்தையாவது தெரிவியுங்கள்.

தே. ஆறுமுகம் செட்டி,
முதலியார் பேட்டை, புதுச்சேரி.

1928 1928

# இந்துசமயக் காலண்டர்

ஒரே காலண்டரில் அழகான 14 படங்களுள்ளது!

ஒவ்வொரு படமும் புராணங்களில் சொல்லப்பட்டிருக்கும் தத்துவங்களை விளக்கிக் காட்டுவது.

நேர்த்தியான ஆர்ட் பேப்பரில் கண்ணாடி போடத் தகுந்ததாய் அச்சிடப்பட்டுள்ளது.

இக்காலண்டரில் அடங்கியுள்ள 14 படங்களின் விவரம்:—

1 திருமகள்
2 கலைமகள்
3 ஆண்டாள் சூடிப்பார்த்தல்
4 உமை சிவலிங்கத்தைத் தழுவியிருத்தல்
5 பார்வதி பரமேஸ்வரன்
6 மகாவிஷ்ணு
7 ஷண்முகம்
8 பாலகிருஷ்ணன்
9 இராதாகிருஷ்ணன்
10 சிவபெருமான் கங்கையைத் தரித்தல்
11 முருகன் சிவபெருமானுக்கு உபதேசித்தல்
12 காளிங்கமர்த்தனம்
13 துருவன் அருள்பெறுதல்
14 ஸ்ரீராமர் பட்டாபிஷேகம்

விலை அணா 8. தபாற்கூலி வேறு.

இம்பீரியல் டிரேடிங் கம்பெனி,

585, பைகிராப்ட் ரோட், திருவல்லிக்கேணி, சென்னை.

# உண்மையான மதத்தை வெளிப்படுத்துவதே

## ‘குடி அரசின்’ பிரசாரம்.

6-ஆம் கட்டுரை.

(கைவல்ய சாமியார் எழுதுவது,)

‘குடி அரசின்’ எழுத்தும் நாயக்கர் பிரசாரமும், இதைக்குற்றஞ் சொல்லுகிறவர்களின் பத்திரிகைகளும், சங்கங்களும், அவைகள் எழுதிக்கொண்டு வருவனவும் உங்கள் முன்னால் நிற்கின்றன. தங்கள் தங்கள் சுயகாரியங்களும் ஆசைகளும் யுக்திதந்திரங்களும் எத்தனை சாமார்த்தியத்துடன் தோன்றினாலும் சனசமூகங்களான உங்களிடமே தீர்ப்புக்கிடக்கிறது. மனிதன் அடைந்திருப்பவைகளுள் அறிவு மிகச் சிறந்தது. அந்த அறிவு ஒவ்வொருவரிடமும் உண்டு. அது இந்திரிய வியாபாரங்களோடு பேதாபேதமின்றிக் கலந்திருப்பதால் அது அவனை வெகு காலம் காப்பாற்றுவதில்லை. திடத்துடன் மனதை விவேகத்தோடு சேர்த்தால் அப்பொழுது தான் மனிதனிடத்தில் வெகு ஆச்சரியமாக விளங்கிக் கொண்டிருக்கும் சிந்தனா சக்தியின் உதயம் உண்டாகும். அப்பொழுதுதான் பிரபஞ்ச அறிவு விருத்தியாகி நாம் மேலான நிலைமையடைய முடியும். இந்தச் சிந்தனாசக்தியின் அறிவைத்தான் தெய்வத்தின் விதி என்றும் மாற்ற முடியாதென்றும் சொல்லுவது. அந்த விதி நித்தியமானதென்பதும் சத்தியம். அதை நம் அறிவால் கண்டு செய்கையில் பயன் படுத்தலாம். எத்தனைக்கெத்தனை அந்த விதியை ஸ்வீகரிக்கிறோமோ அத்தனைக் கத்தனை நமது பாதையில் உள்ள தடைகள் விலகும். அந்த சக்தியை ஸ்வீகரிக்க மனம் ஒரு வழியில் நின்று விவேகத்துடன் ஒட்டவேண்டும். இந்தக் கருத்தை உத்தேசித்தே ஆலய வழிபாடும் ஆராதனை அனுஷ்டானங்களும் ஏற்படுத்தியதாகச் சொல்லப்படுகிறது. அவ்வழி பூராவும் அடைபட்டு இப்பொழுது ஆலயவழிபாடும் ஆசார அனுஷ்டானங்களும் தற்பெருமையாகவும் உயர்வாகவும் கொடுமையாகவும் குஜிலிக் கடையாகவும் மாறிவிட்டதனால் தான் அநேக காலமாக நாம் செய்யும் பூசை கைங்கரியங்களினால் யாதொரு பயனுமடையவில்லை. அந்தச்சக்தியைப் பயன் படுத்திக்கொள்ள அந்தச் சக்தியை எத்தனையோ தெய்வங்களாகப் பூஜித்தும், எத்தனையோ தேவர்கள் பிதிர்களாகப் பாவித்து எத்தனையோ கர்மங்கள் செய்தும், எத்தனையோ பாப்பானுக்குத் தானம் கொடுத்தும் நாம் ஒரு பயனுமடையவில்லை. முன் சொன்ன சக்தியான விதியின் ஞானமே இயற்கை நூல் என்று சொல்லப்படும். அதையே மேனாட்டார் ‘ஸயன்ஸ்’ என்கிறார்கள். இந்த ஸயன்ஸ் வலிமையால் அன்றோ ஐரோப்பா தற்காலத்தில். “பூமியில் விஷக்காய்ச்சல் இல்லாமல் செய்து விடுவேன். மனிதர்களின் வீடுகளில் சோற்றுப் பஞ்சமும் கல்விப் பஞ்சமும் இல்லாமல் செய்து விடுவேன். ராஜ்யத்தின் பொது நன்மைக்கும் தனி மனிதனுடைய ஸ்வதந்திரத்திற்கும் முரண்படாமல் செய்வேன்” என்று துணிவுடன் கூறி, பஞ்சபூதங்களும் அவர்கள் பால் வசப்பட்டது போல் நினைக்கும் படியாக உயர உயரப்பறக்கும் வானம்பாடியைப் போல் சுயேச்சையாகப் பாடிக்கொண்டு ஆகாயத்தில சஞ்சரித்து தாம் அனுபவிப்பதை வாயாரச்சொல்ல முடியாமலும் ஒளிக்க முடியாமலும் இருக்கும் அனுபவம் வரும்படி பிரபஞ்சத்தோடு கலந்து பிரபஞ்சமுமாகி நின்று ஆனந்திக்கும் அற்புதத்தைக்கண்டு ஆசியாக்காரர்களில் சிலர் அதற்கு ஆசைப்பட்டு அவர்கள் பால் சென்று அதைக்கற்றுத் தம் இயற்கை சக்தியால் அதை யடைந்து இவர்களும் அவர்கள் கூடப் பறந்து நம் மூதாதைகளான சூரிய சந்திரனுடைய எல்லை உனக்கா? எனக்கா? என்று பாத்யதையும் கொண்டாடுகிறார்கள். இத்தனைக்கும் காரணம் அவர்கள் சிந்தனா சக்தியே அல்லாமல் நம்மைப் போல எந்த தேவர்களை முன்னிருத்தி மந்திரம் ஜெபிக்கிறார்கள். பால்பாயசமும் பஞ்சாமிர்தமும் அறுபது காலம் அடிசில் சாதமுமா தெய்வங்களுக்குப் படையல் போடுகிறார்கள்? சூரியனும் சந்திரனும் நேற்று செத்தான் இன்று பிழைத்துக்கொண்டானென்று கிரகணத்தைக் காட்டி ஏடெழுதி வீடு வீடாகத் தானம் வாங்க எந்தப் பாப்பான் அவர்களில் திரிகிறான்? பெட்ரோலும் நீராவியும் இல்லாமல் எல்லா மிஷின்களையும் சூரியனுடைய உஷ்ணத்தினாலேயே ஓட்டலாமென்று சொல்லி ஓட்டவும் பிரயத்தினம் செய்து கொண்டிருக்கும் அமெரிக்கா எடிசன், உழைப்பில்லாமல் வெட்டியாகக் கிடைக்கும் சோற்றை உண்டு இரு வேளையும் சூரியனைக் கும்பிட்டு எழும் கூட்டத்தைச் சேர்ந்தவர்களைப் போல் எத்தனை தரம் சூரியனைக் கும்பிட்டெழுகிறார்.’ தினமும் காலைமாலை சூரியனைப் பற்றிச் சொல்லும் காயத்திரி மந்திரங்களெல்லாமெங்கே? சூரியன் மரபில் தோன்றிய ராமரும், சூரியனுக்கு நேர் பிள்ளையான சுக்ரீவனும், சூரியனுடைய பிரதம சிஷ்யனான அனுமானும் தங்கள் பாத்தியதைகளையெல்லாம் மேனாட்டார்களுக்கு எழுதிவைத்துவிட்டாபோனார்கள்? ராமர் நமக்குத் தெய்வம். மகாராஜா வென்று இதிகாசத்தில் சுக்ரீவனைத் தவிர வேறு யாரையும் ஒத்துக்கொள்ளவில்லை. அனுமார் தெய்வமும் நம் மதப்பிரிவில் ஒரு மதத்துக்குக் குருவுமாவார்.

ராமருக்கு நாம் செய்யும் ஆசார அபிஷேகத்துக்குக் கணக்குவழக்கில்லை. திருப்பதிக்குப் போகும் காணிக்கையில் வழிக்கொள்ளை, மகந்துகொள்ளை, தரகன் கொள்ளை, கொண்டுபோவோன் கொள்ளை முதலியவை போக மீதம் கொடாரம் கொடாரமாக நிறைகின்றதென்றால் அதன் கணக்குயாருக்குத் தெரியும்! சீரங்கத்து ராமருக்கு நெய் விளக்குத்தான் எரியவேண்டும். எண்ணெயானால் சூரியன் ராமர் சேவைக்கு சீரங்கத்திற்கு வரமாட்டாராம். எரிந்த நெய், வடிந்த நெய், வழிந்தொடுக்கும் நெய் முன்பின் திருடும் நெய், காப்பணியும் நெய், கல்லில் ஊற்றும் நெய், கல்குடிக்கும் நெய், பணம் கொடுப்பவர்கட்குப் பதிவான நெய், அர்ச்சகப் பெருமாள்கள் உண்ணும் நெய், அவர்கள் தூணில் முதுகைத் தேய்த்தால் தூணிலிருந்து கசியும் நெய், இத்தனை நெய்க்கும் ஆயிரமாயிரமாகப் பணம் செலவு செய்தும் அதிலும் பெருமாளுக்குப் பசியடங்காமல், சட்டத்திற்குச் சூதல்லவென்று தப்பினாலும் சமூதாயத்தில் பெரிய சூதுக்கும் வஞ்சனை மோசத்திற்கும் ஏதுவான லாட்டரி ஒன்று போட்டு அவரவர்கள் பாத்யதைக்குத் தகுந்த படி எடுத்த மிச்சம் முப்பதினாயிரம் ரூபாயுக்கு பூமி வாங்கிவிட்டதாகச் சொல்லிக்கொண்டு, அதிலும் பெருமாள் வயிறு திருப்தியடையாமல் இரண்டு லட்சம் ரூபாய் சீட்டுப்போட்ட பெருமாள் ‘உத்தரவு’ கொடுத்து ஊர் ஊராக உத்தியோக அதிகாரம் முன்னாலே, பெருமாள் கட்டளை பின்னாலே இருந்து வசூலும் நடக்கிறது. இதைப்பற்றி இன்னொரு வியாசத்தில் எழுதுவோம். இத்தனை அனுபோகத்தையும் பெற்றுக் கொள்ளும் ராமருக்கு ராமகதை படிக்காத இடமுண்டா? அங்கு அனுமாருக்கு ஆசனம் விதிப்பிரகாரம் போடாமல் விட்டதுண்டா? எந்தக்கல்லிலாவது குரங்கு ரூபத்தைப் பார்த்தால் குங்குமம் மஞ்சள் சந்தனம் அப்பாமல் விட்டதுண்டா? இப்படியெல்லாம் இவர்களுக்குப் பணிவிடை செய்கையில் இவர்களுக்குப் பாட்டனும் அப்பனும் குருவுமான சூரியன் நம்மைவிட்டுவிட்டுத் தானும் தன் ஆகாச வெளியும் தன்னால் காக்கப்படும் உலகத்தையும் மேனாட்டாருக்கல்லவோ விட்டு விட்டான். இவை நம் தெய்வங்களின் பூர்வீகச் சொத்தல்லவா? சூரியனிடம் அனுமார் வித்தை கற்றுக்கொண்டார். அந்த வித்தையை நமக்கு உபதேசம் பண்ணாமல் அமெரிக்கா தேசத்திலிருக்கும் எடிசனுக்கு ஏன் உபதேசிக்கவேண்டும்? நம்மையெல்லாம் விட்டுவிட்டு இவர்கள் பூர்வீக சொத்தை மேனாட்டாருக்கு ஒப்புவிக்கக்காரணம் வேண்டுமே? இவர்கள் ஒன்றோ நன்றிகெட்டவர்களாகயிருக்கவேண்டும்; அல்லது நாம் இவர்களைப் பின்பற்றினவழி அறியாமையும் மூடத்தனமும் நிறைந்ததாகவிருக்க வேண்டும். எதை யாவது ஒத்துக்கொள்ள வேண்டும். எதை ஒத்துக்கொண்டாலும் ‘குடி அரசின்’ கொள்கைகளையும் ஒத்துத்தான் தீரவேண்டும். இரண்டல்லாமல் மூன்றாவ தொன்றிருந்தால் அதை விபரமாக எங்களுக்கு எடுத்துச் சொல்லட்டும். அதை விட்டு “மத ஆராச்சியில்லாதவர்கள், மதத்தை அழிக்க வந்திருக்கிறவர்கள், நாஸ்திகர்கள்” என்று குற்றம் சொல்லுவதால் சனசமூகம் என்ன தெரிந்து கொள்ளும். மத ஆராச்சி யுடைவர்களின் ஆராய்ச்சியைத்தாய் “குடி அரசு” தெரிந்து கொள்வது எப்பொழுது?

முன் சொன்ன அறிவால் நமக்கு ஆகாயத்தில் வாணிபம் நடத்தவும், மலைகளைப் பிளக்கவும், சமுத்திரத்தை அடக்கவும், மின்னலையுண்டாக்கவும், சூரியனை நிறுத்தவும் சக்திகள் உண்டாகலாம். அவைகள் மோட்சத்திற்கு என்ன பலனைக்கொடுக்குமென்று நமது சாஸ்திரிகளும் பண்டிதர்களும் கேட்கலாம். இவர்கள் படிப்பும் கேள்வியும் ஒரு கோப்பை காபி சூடாயில்லாவிட்டால் தலைவலி வந்துவிடுகிறது. சுறுசுறுப்பில்லை என்கிறார்கள். பிராமணார்த்தம் முதல் வைதீக கர்மங்களுக்கு புரோகிதர் காபி குடிக்காவிட்டால் மந்திரம் ஓடுவதில்லை. வைதீகத்தில்காபிகுடிப்பது சாஸ்திரத்தில் ஒரு சட்டமாகச் சேர்க்கப்பட்டு அதையெல்லாரும் ஆமோதித்து அனுபோக பாத்யதையாகவும் ஆய்விட்டது. வைதீக சாப்பாட்டிற்குப்போகும் போது சாஸ்திரிகள் மிட்டாய், வருவல், பழம் இவைகளை மறைத்து எடுத்துக் கொண்டு வருவதும் அநேகமாகச் சகஜமாக நடப்பது. அந்த வீட்டுப் பிரபுக்களிடம் குளிருக்குச் சால்வையும், மடிக்கு பட்டும், இவைகளை வைக்க தோல் பெட்டியும், பையன்களை பட்டணமனுப்பப் பணமும், இத்தனையும் தானமாகக் கேட்கவும் செய்கிறார்கள். இவையனைத்தும் மோக்ஷ உலகத்திற்கு வழியனுப்பும் சாதானம் போலும்!

வெங்காயம் சத்துவகுணப்புசிப்பன்று. அதனால் பாப்பானுக்கு வெங்காயம் சாஸ்திரத்தில் தள்ளப்பட்டிருக்கிறது. வெங்காயத்தைப் பாப்பான் தின்றால் ஜாதியை இழந்து விடுகிறான் என்று ஸ்மிருதி சொல்லுகிறது. அப்படியிருந்தாலும் வெங்காயச் சாம்பாருக்கும் உருளைக்கிழங்கு பொடிமாசுக்கும் ஞாயிற்றுக்கிழமை தோறும் தேடித்திரியும் பாப்பாருக்கு மோக்ஷம் எந்த உலகத்திலிருக்கும். வெங்காயம்காரமும் கெட்டவாசனையுமுடையது. உருளைக்கிழங்கு இங்கிலிஷ் கிழங்குகளில் மட்டமானது. இதன் ருசியைக்கண்டே சாஸ்திரங்கள் அட்டாலையேறி அண்ணாந்து பார்ப்பதனால் இந்தக் காலத்து நாகரீகத்தில் இனியும் எத்தனையோவித ஆகாரங்களும் அதன் பதார்த்தங்களும் இவர்கள் பக்கம் வந்து கொண்டிருக்கையில் மோக்ஷம் மோக்ஷம் என்று எல்லாருக்கும் சொல்லி அவர்கள் தலையில் உட்கார்ந்து கொண்டிருந்தால் தானே வந்து கொண்டிருக்கும் நாகரீகத்திற்கு மரியாதை செய்ய முடியும்!

## பாட புத்தகத்திலும்
# பார்ப்பனப் பிரசாரம்.

கோவில்பட்டி தமிழ் பண்டிதர் இ. ஸ்ரீ. கோவிந்தய்யங்கார் அவர்களால் 'பாலர் நன்மதிக் கதைகள்' என்னும் மகுடஞ் சூட்டப்பட்டு எழுதப்பட்ட சிறு புத்தகத்தைப் பார்வையிட்டேன். இவ்வளவு சிரமப்பட்டு சிறு குழந்தைகளுக்கு நீதிகற்பிக்கும் உயரிய நோக்கத்துக்கு வந்தனங்கூற என் மனம் முற்பட்டாலும், அதில் தவறாதலாகவோ, அல்லது வேண்டுமென்றோ ஆசிரியர் செய்துள்ள குற்றங்களைக் கூறாமலிருக்க என் மனம் இடந்தரவில்லை. தமிழ் நாட்டில் தற்காலத்தில் பிராமணர், அல்லாதார் என்ற இரு வகுப்பார் இருப்பதும், அல்லாதார், பிராமணரென்று சொல்லிக் கொள்பவரால் எவ்வாறு அழுத்தப் பட்டிருக்கிறாரென்பதும், அவ்வாறு மேழமிதித்து தேய்க்கப்பட்டிருக்கும் அடிமைத்தனத்திலிருந்து தங்களை மீட்டுக்கொள்ள அல்லாதார் எவ்வளவு முயற்சி செய்கிறார்களென்பதும் தெரிந்த விஷயமே. அப்படியிருக்கமேற்படி புத்தகத்தில் மேன்மேலும் பிராமண ஆதிக்கத்துக்கும், பிறப்பினால் உயர்வு தாழ்வு என்னுங் கொள்கையை திறப்படுத்துவதற்கும், ஆசிரியர் எவ்வாறு முயன்றிருக்கிறார் என்பதை வாசிக்குங் கால், உண்மைப்பிராமணனல்லாதான் மனது எவ்வாது துன்புறுமென்பதை யாவருமறிவர். இப்புத்தகத்தை காருண்ய கவர்மெண்டார் அங்கீகரித்துவிட்டார்கள். ஆசிரியர் தான் பிராமணன் என்பதையும், அதிலும் ஐயங்கார் என்பதையும் தெளிவாகக் காட்டியுள்ளார்.

அப்புத்தகத்தில் எண்ணில் உதாரணங்களிருந்த போதிலும், ஏதோ ஒன்று இரண்டு உதாரணங்களை எண்டு எடுத்துக் கொண்டாராய்வோம். 'பெரியாரை வழிபடு' என்ற தலைப்பின் கீழ் எழுதப்பட்ட கதையில் "ஒரு கிராமத்தில் வேத விற்பனனாகிய ஓர் பிராமணர் வீட்டில் ஓர் சூத்திர ஸ்த்ரீ வேலை செய்து கொண்டிருந்தாள்" என்றும், பிராமணர்களைத் தெய்வமென்று கருதி அவர்களை வழிபட்டு வந்தாள்" என்றும், அவர்கள் உண்ட பின் எஞ்சியவற்றை அவர்களது அனுமதியின் பேரில் தானும் உண்டுவந்தாள் என்றும் ஆசிரியர் எழுதியிருக்கிறார். முதலாவது வாக்கியத்தில் "சூத்திர ஸ்திரீ" என்ற பதத்திற்குப்பதில் வேலைக்காரி என்று எழுதியிருக்கலாம். ஆனால் செவியையும், மனதையும் புண்படும்படி செய்யும் இந்தப்பதத்தை ஒரு புத்தகத்தில்-அதுவும் பாலர்களுக்காக ஏற்பட்ட புத்தகத்தில் உபயோகித்திருப்பதானது பார்ப்பனத் திமிரைக் காட்டுகின்றதே யொழிய வேறில்லை. இதைவாசிக்கும் சிறார்களின் மனப்பான்மை எவ்வாறு இருக்குமென்பதை வாசகர்கள் சற்று சிந்தித்துப் பார்ப்பாராக. இவ்வித ஆசிரியர், தமிழ் பண்டிதராக இருந்து வரும் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்கு எவ்வாறு சுயமரியாதை வரும் என்பது சந்தேகத்திற்கு இடமாயிருக்கிறது. இப்போதுவருணாச்சிரம தர்மிகள்கூடி ஒரு கூட்டத்தில் 'பிராமணன், சூத்திரன் என்ற இரண்டு பிரிவுகளே மனிதவகுப்பில் இருக்கின்றன' என்று தீர்மானமும் நிறைவேற்றிவிட்டார்கள். மேலும், பிராமணர்களுக்கு நீதிநூலாகிய மனுசாஸ்திரத்தில் 'சூத்திரன்' என்ற பதத்திற்குப் பொருள் என்னவென்பதைப் பார்த்திருப்பாராயின், எவ்வளவு இழிவான அர்த்தத்தையுடைய பதம், ஆசிரியரால் இப்புத்தகத்தில் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறதென்பதை அறியலாம்.

பின்பு, இரண்டாவது வாக்கியத்தை எடுத்துக்கொள்வோம். அதில் 'பிராமணர்களைத் தெய்வமென்று கருதி வழிபட்டுவந்தாள்' என்று இருக்கிறது. இதை வாசித்தவுடன், இதகாரும் ஒற்றுமையாகவும் பேதமான நினைவுமில்லாத பிராமணச் சிறுவனும், மேல் கீழ் என்னும் அபிப்பிராயம் கொள்வானா அல்லவா என்பதை யோசித்துப்பாருங்கள். இந்த வாக்கியத்தால், பிராமணன் மேலென்பதும் அவனை பேனையோர் தெய்வமென வணங்கவேண்டுமென்பதும சொல்லாமலே பெறப்படுகின்றது. மேலும், இரண்டாவது வாக்கியத்திற்கு விசேட மகிமைகொடுப்பது போல, கதைச்சுருக்கத்தில், 'ஆதிகாலத்தில் கடவுளருங்கூடப் பெரியோரை வழிபட்டிருக்கிறார்கள்' என்றும் எழுதிவைத்துவிட்டார். ஆதலால் பிராமணர்களை கடவுள் கூட வணங்கினரென்று, அல்லாத வகுப்பைச்சேர்ந்த பிள்ளைக்கு இது எவ்வளவுதூரம் அடிமைத்தன்மையையும், பிராமணச் சிறுவனுக்கு பாலியமுதலே தான் உயர்ந்தவன் என்னும் இறுமாப்பையும் உண்டாக்குகிறது என்பதை வாசகர்கள் உணர்ந்துகொள்ள வேண்டுகிறேன். இவ்வாறு பாலியத்தில் இருவருக்கும், வித்தியாசமான எண்ணத்தை உண்டுபண்ணி, பிராமணரல்லாதாரிடம் மூடநம்பிக்கையை வளர்த்து அதனால் சுயமரியாதை உணர்ச்சியை அடக்கிவிடலாமென்று ஆசிரியர் எண்ணியிருப்பாராயின் அவ்வெண்ணம் ஆரிய உண்மை கண்டனமென்வே முடியும்.

மூன்றாவதாக, "அவர்கள் உண்டபின் எஞ்சியவற்றை அவர்களது அனுமதியின் பேரில் தானும் உண்டுவந்தான்" என்ற வாக்கியம் இருக்கிறது. இது கொடுமையினும் கொடுமை. தெருவில் அலையும் நாய்கூட எச்சிலைத் தின்பதற்கு ஒருவரிடம் அநுமதி கேட்பதில்லை. அல்லாதவகுப்பைச் சார்ந்த இந்தச்சிறுவன், இந்தப் பெரியோர்களுக்கு "அவர்கள் ஏவியவற்றை யெல்லாம் புரிந்தும்" அவர்கள் சாப்பிட்டு எஞ்சிய உணவை உண்ண அவர்களுடைய அநுமதி பெறவேண்டியதாயிற்று. என்னே பார்ப்பனனின் கொடுமை.

இனிமேலாவது, நூலெழுதப் புகுவோர் இம்மாதிரிக் கதைகளை எழுதாமல், ஒருவருக்கும் மனம் புண்படாதவிதமான கதைகளை எழுதி பாலர்களின் அறிவு, சுயமரியாதை உணர்ச்சி முதலியவைகள் வளர்ந்தோங்கச் செய்வார்கள் என்றும் நம்புகிறேன். நீதி புகட்ட முன் வருபவர், பொதுப்படக்கூற வேண்டுமேயல்லாது மனு அதர்ம சாஸ்திரத்தைப்போல ஒரு வகுப்பாரைத் தாழ்த்தியாவது, உயர்த்தியாவது எழுதுவது நீதிக்கழகல்ல.

பிராமணன், தன்இன முன்னேற்றத்திற்கு இவ்வளவு தூரம் பிரயத்தனப்படும்போது, அவற்கு உதவியாக இந்தப் புத்தகத்தை அச்சிட்டு விற்பனை செய்ய முற்பட்ட அல்லாதார் வகுப்பைச் சார்ந்த P. N. சிதம்பர முதலியார் பிரதர்ஸ் அவர்களின் சுயமரியாதைதான் என்னே! திரு சிதம்பர முதலியார் பிரதர்ஸ், இம்மாதிரி மீளா அடிமைத்தனத்தைப் போதிக்கக்கூடிய புத்தகங்களை விற்பதினாலாகும் ஊதியத்திற்கு ஆசைப்பட்டு எண்ணில் கோடி சிறுவர் சிறுமிகளை கெடுத்தல் சாலாது "பழியஞ்சிப் பாத்தூணுடைத்தாயின் வாழ்க்கை வழியெஞ்ச லெஞ்ஞான்றுமில்"

இப்புத்தகத்தை ஏற்று பாடசாலைகளில் படிக்கவரும் பால்மாணவர் அருச்சிறார்களுக்கேற்ற புத்தகமென அங்கீகரித்த துறைத்தாரின் மனப்பான்மைதானென்னே! என்னே!!

முடிவாக மாணவர்களின், ஏன் பிற்கால இந்தியாவின், முன்னேற்றத்தையே கருதும் ஆசிரியர்களும் பள்ளிக்கூட மேனேஜர்களும இத்தகைய புத்தகங்கள் தங்கள் பாடசாலையில் இடம் பெறாதிருக்க சாவதானமாயிருக்குமாறு மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன். பாரத தேவியின் மீது ஆணையிட்டு அவ்வாறே நடக்கக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

"நலம் நாடுவோன்."

---

முழுதும் பிரபஞ்ச விஷயங்களை அறியமுடியாதென்று சொன்ன இறந்த தத்துவசாஸ்திரியான காண்ட் என்பவரும், நான் அளவிட்டு அறிய முடியாது, சாகரத்தின் கரையில் சிப்பி முதலியவைகளைப் பொறுக்கி ஆனந்தித்துக் கொண்டிருக்கும் குழந்தைக்கு நிகரே ஒழிய வேறில்லை என்ற நியூட்டனும், ஒரு காகிதத்துண்டில் ஒரு துளி தண்ணீரை இழுத்து அதில் உண்டாகும் மாறுதலைக் கண்ணுற்று ஆச்சரியமடைந்த டார்வின் என்ற பிரகிருதிசாஸ்திரியும், அந்தகாகிதத்துண்டை நிறுத்துப்பார்த்து அநேகஜந்துபூரணஜீவனோடும் உணர்ச்சியோடும் சுறு சுறுப்போடும் மனிதன் தனது தொழிலை எவ்வளவு ஆவலுடனும் சுதந்தரத்துடனும் நடத்துகிறானோ அவ்வாறே தமது தொழிலையும் நடத்திகொண்டிருப்பதைக்கண்டு ஆச்சரியப் பட்ட டின்டெல் என்ற பிரகிருதி சாஸ்திரியும், இவர்களையும் விட்டு முன்னே சென்ற சாக்ரடீஸ் என்ற மகானும், இவரையும் தாண்டிச்சென்ற நம் நாட்டு யோகிகளும், அதையும் தள்ளிவிட்டுச் சென்ற ஞானிகளும், இத்தனை பேரையும் எடுத்துக்காட்டின கிருஷ்ணனும், காலசக்தியால் உண்டாகும் கஷ்ட நிஷ்டூரங்களையும் அடக்கியாள்பவராது அக்கிரமத்தையும் மதட்டேப் பிடித்தவர்களால் உண்டாகும் மானபங்கத்தையும் வெறுக்கப்பட்டகாதலியை மைத்துயரங்களையும் நியாயஸ்தலங்களில் சேரும் காலக்கழிவையும் அதிகாரிகளின் கர்வத்தையும் அயோக்கியர்களிடமிருந்து யோக்கியர்கள் பொறுமையுடன் அநுபவிக்கும் அவமானங்களையும் போதிக்கவேண்டாமென்பட்டார்கள். அதையே மோட்சமென்றும் நினைத்தார்கள்.

# சமூகஊழியம்

## கட்டுரை 3

# மக்களும் சங்க நூல்களும்

சாமி சிதம்பரனார் எழுதியது

நமது கட்டுரைகளைப்படித்தவர்கள் 'மக்களும் சங்க நூல்களும்' என்னுமிக்கட்டுரையில் என்ன எழுதப்போகிறேனென்பதை ஒருவாறு உய்த்துணரலாம். வெறுக்கத்தக்கனவற்றை அஞ்சாது வெறுக்கவேண்டுமென விளம்பும் நம்மீது பலர் வெறுப்படையக்கூடும். தமிழ்க்கலைவளர்ச்சியிலீடுபட்டவர்களும் தமிழ் மொழியிற் பெரும் பற்றுடையவர்களும் நம்மைத் தாய் மொழிப்பற்றில்லாதவரென்றோ, தாய் மொழிக்குத் தீங்கு செய்கின்றவரென்றோ, கூற முன்வரலாம். நாம் தமிழ்க்கலைகளில் உள்ள வெறுக்கத்தக்க—ஒதுக்கத்தக்க—மக்கள் மாண்பைக்கெடுக்கத்தக்க—கொள்கைகளையே கண்டிக்கின்றோம். இதனால், தமிழ்த்தாயைப் போற்றுவதிலோ, தமிழ்மொழிக்குத் தொண்டு செய்வதிலோ, தமிழ்க்கலைகளின் சிறப்புக்களை வெளியிடுவதிலோ, தமிழ்க்கலைகளின் உயர்வைக்கொண்டாடுவதிலோ, எந்தவகையிலும் நாம் மற்றைய தமிழ்த்தொண்டர்களுக்குப் பின்னடைந்தவரல்லோமென்பதை முதலில் அறிவித்துக்கொள்ளுகின்றோம். நாம் தமிழ் மொழியில் உள்ள எல்லா நூல்களையும், மொழியினிமை கருதிப் போற்றப்பின்னிடமாட்டோம். ஆனால், ஆரியக்கலப்பால், மக்கள் மானத்தைக் கெடுக்கக்கூடிய செய்திகள் கலந்திருப்பதை அகற்றுவதற்குச் சிறிதும் அஞ்சமாட்டோம். தமிழ் நூல்களில் அகற்றக்கூடியன எவை என்பதற்குஞ் சில உதாரணங்கள் கூறுகின்றோம்.

பழந்தமிழ் நூல்களை, ஐம்பெருங்காப்பியம், பத்துப்பாட்டு, எட்டுத் தொகை, பதினெண்கீழ்க்கணக்கு எனப்பிரித்திருக்கின்றனர். இவையே சங்க இலக்கியங்களென்று கூறப்படுவன. இவை தவிரப் பண்டைத்தமிழிலக்கணமாகிய தொல்காப்பியமென்னும் நூலுமிருக்கின்றது. மேற்கூறிய நூல்களாலேயே, நமது நாட்டின் பண்டைய உயரிய நிலையையும், தமிழ்மக்களின் வீரத்தின் மாண்பையும், அவர்களின் சுயமரியாதைத்தன்மையையும், தெளிவாகத் தெரிந்து கொள்ளுகின்றோம். ஆயினும் அப்பழைய நூல்களிலும், புனைந்துரைகளும், ஏமாற்றுரைகளும், ஆரியக்கொள்கைகளும், மனித சக்தியைத்தடுக்கும் கொள்கைகளுங் கலந்திருக்கின்றனவென்பதிற் சிறிதும் ஐயமில்லை. அத்தகைய செய்திகளையறிந்து அவற்றில் மக்களுக்கு நம்பிக்கையில்லாமலும் அவற்றை யொழிக்கும் படியும் செய்யவேண்டுமென்பதுதான் நமது கொள்கையாகும்.

முதலில் ஐம்பெருங் காப்பியங்களை யெடுத்துக் கொள்ளுவோம். ஐம்பெருங்காப்பியங்களெனபன, சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி, குண்டலகேசி, வளையாபதி என்பனவாம். இவற்றுள் இப்பொழுது நமக்குக்கிடைப்பன சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி இம்மூன்றுமேயாகும். மற்றைய குண்டலகேசி, வளையாபதி இரண்டும் இறந்தொழிந்தனபோலும். மேற்கூறிய மூன்று காவியங்களையுங்கற்றவர் தமிச்சுவையருந்தி இன்பமடைவார்கள். அந்நூல்களிற் கூறப்படும் உயர்ந்த இயற்கைப் புகழ்ச்சிகளும், சிறந்த நீதி மொழிகளும் வேறு எம்மொழி நூல்களினுங் காணப்படாத இயல்புள்ளனவாகும். அவை கற்போர் நெஞ்சைச் கனியச்செய்து, தம்பால் ஈர்க்குந் தன்மையுடையன வென்பது யாரும் மறக்கவொண்ணாததாகும். அந்நூல்களின்றேல் தமிழ் மொழிக்கு ஒரு சிறிதும் பெருமையில்லை யென்பது நமது முடிந்தகொள்கையாகும். ஆனால் அந்நூல்களிற் கூறப்படுங் கதைகள் முழுவதையும் உண்மையெனக் கொள்ளுவதில் தான், நாம் மற்றத் தமிழன்பர்களுடன் மாறுபடுவோம்.

சிலப்பதிகாரவரலாறும், மணிமேகலை வரலாறும் உண்மையாகவே ஏறக்குறைய கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் தமிழ் நாட்டில் நடந்தவையென்பதில் யாவருக்கும் ஐயமில்லை. அந்நூல்களையெழுதிய புலவர்களாகிய இளங்கோவடிகளும் கூலவாணிகன், சீத்தலைச்சாத்தனாரும், வரலாறு நடந்த காலத்திலிருந்தவர்கள். அக்காலத்திலேயே அவர்கள் சிலப்பதிகாரத்தையும், மணிமேகலையையும் எழுதி முடித்து விட்டார்கள். ஆயினும் அவைகளிலும், பலவகையான புனைந்துரைப்பொருள்களும் கட்டுக்கதைகளும் தெய்வத்தன்மை கற்பிக்கப்பட்ட நிகழ்ச்சிகளும் காவிய இலக்கணங் கருதிச் சேர்க்கப்பட்டு விட்டன வென்பதை ஒப்புக்கொண்டு தான் ஆகவேண்டும். சிந்தாமணிக் கதையோ தமிழ்நாட்டு கதையன்று. வடநாட்டுக் கதையைத் தமிழிற் செய்ததாகும். மொழிவளங்கருதியே அந்நூலைத் தமிழ் மக்கள் எவற்றிலும் சிறந்ததாகப் போற்றுகின்றனர். சிந்தாமணி சைன மத நூலென்னும் பொறாமை மேற்கொண்டு சேக்கிழார் பெரிய புராணத்தைச் சிந்தாமணிக் கெதிராகச் செய்தாராயினும், சிந்தாமணியின் பெருமை குறைவடைந்ததோ? அதன் செந்தமிழ்த் தீஞ்சுவை நுகரவேண்டி அதனைப் போற்றாதார் யாருளர்? மேற் கூறிய மூன்று கதைகளிலுங் கொள்ளத்தக்கன எவை? தள்ளத்தக்கன எவை என்பதை ஒருமுறை படித்துப்பார்ப்போர் நன்கறிந்து கொள்ளலாம். இயற்கைக்கு மாறான நிகழ்ச்சிகள்யாவும் பொய்யுரையென்று புறக்கணிப்பதற்குரியதாகும். இயற்கையோடியைந்தவையனைத்தும் உண்மை யென்று உணரலாம்.

இனி பத்துப்பாட்டென்னும் நூலை எடுத்துக் கொள்ளுவோம். திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப் பாட்டு, மதுரைக் காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் ஆகிய பத்துப்பாட்டுகள் சேர்ந்த ஒரு நூலுக்கு பத்துப் பாட்டென்று பெயர்.

பத்துப்பாட்டாதிமனம் பற்றினார் பற்றுவரோ
எத்துணையும் பொருட்கிசையும் இலக்கணமில்
கற்பனையே

என்ற மனோன்மணீய நூலாசிரியர் கூறியிருப்பது உண்மையென்பதில் ஒரு சிறிதும் ஐயமில்லை. இயற்கையின் இன்பங்களை உள்ள படியே துய்க்க வேண்டுமாயின் பத்துப் பாட்டிற்றன் செல்ல வேண்டும். அங்கே ஆறுகளின் சிறப்பையும், மலைகளின் மாண்பையும், காடுகளின்தோற்றத்தையும், நாடுகளின் செழிப்பையும், நகரங்களின் வளத்தையும், ஐந்திணை நிலங்களின் காட்சியையும், அந்நிலத்துறைவோர்கள் உண்மை நாகரிகவொழுக்கத்தையும் தெளிவாகத் தெரிந்துகொள்ளலாம். ஆயினும் பத்துப் பாட்டிற்கூறப்படும் செய்திகள் முழுவதையும் உண்மையென ஒப்புக் கொள்ள முடியாது. பொய்யுரைகளுஞ் சில புகுந்திருக்கின்றன. அநாகரிக வழக்கங்கள் சிலவும் காணப்படுகின்றன. அவையெல்லாம் அறவே யொதுக்கத்தக்கனவாகும். அவற்றால் அக்கால வழக்கம் இன்னதென்பதையறிந்து கொள்ளலாமேயன்றி அதன்படி நடப்பதென்பது கூடாத செயலாகும். இனிச் சில உதாரணங்களைக் காட்டுகின்றோம்.

"பாம்பு படப்புடைக்கும் பல்வரிக் கொடுஞ்சிறைப்
புள்ளணி நீள் கொடிச் செல்வனும்"

என்பதனால் திருமாலைப்பற்றிக்கூறப்படுகின்றது.

வெள்ளேறு
வலவயினுயரிய பலர் புகழ்த்திணி தோள்
உமையமர்ந்து விளங்கும் இமையா முக்கண்
மூவெயின் முருக்கிய மூரண்மிகு செல்வனும்

என்பதனால் சிவனைப் பற்றிக் கூறப் படுகின்றது.

நூற்றுப்பத்தடுக்கிய நாட்டத்து நூறுபல்
வேள்வி முற்றிய வென்றடு கொற்றத்து
ஈரிரண்டேந்திய மருப்பின் எழில் நடைத்
தாழ்பெருந்தடக்கை உயர்த்த யானை
எருத்த மேறிய திருக்கிளர் செல்வனும,

என்றதனால் இந்திரனைப் பற்றிக் கூறப்படுகின்றது. இதனால் இந்திரனுக்கு ஆயிரங்கண்களிருக்கின்றன வென்றும், நூற்றுக் கணக்கான யாகங்களைச் செய்தவர்கள் இந்திரனாவார்களென்பதும், நான்கு கொம்புகளையுடைய ஐராவதமென்னும் வெள்ளை யானையை இந்திரன் ஊர்தியாகக் கொண்டிருக்கின்றானென்பதும் ஆகிய போலி ஆரியப் புராணப் புனைந்துரைகளும் அடங்கிக்கிடக்கின்றன.

தாமரை பயந்த தாவில் ஊழி
நான்முக ஒருவன்

என்றதனால் பிரமதேவனைப்பற்றியும் அவன் திருமாலின வயிற்றிலிருந்து முளைத்தெழுந்த தாமரையிலிருந்து பிறந்தானென்னும் புனைந்துரையைப் பற்றியும் கூறப்படுகின்றது.

நால்வேறியற்கைப் பதினொருமூவரொடு
ஒன்பதிற்றிரட்டி உயர்நிலை பெறீஇயர்

எனபதனால், ஆதித்தர் பன்னிருவரைப் பற்றியும் உருத்திரர் பதினொருவரைப்பற்றியும், வசுக்கள் எண்மரைப்பற்றியும், மருத்துவர் இருவரைப்பற்றியும், தேவர், அசுரர், கின்னரர், கிம்புருடர், தைத்தியர், கருடர், இயக்கர், விஞ்சையர், இராக்கதர், கந்தருவர், சித்தர், சாரணர், பூதகணம், பைசாசகணம், தாராகணம், நாகர், ஆகாயவாசிகள், போக பூமியர் ஆகிய பதினெட்டுத் தேவகணங்களைப்பற்றியுங் கூறப்படுகிறது.

மேற்கூறியவைகள் திருமுருகாற்றுப்படையில் கூறப்படுகின்றன. இப்புனைந்துரைகளை அப்படியே உண்மையென்று கொள்ளவோ, பிறருக்கு எடுத்துக் கூறவோ கூடாதென்றுதான் நாம் கூறுகின்றோம்.

மழையென மருளும் மகிழ்செய்மாடத்து
இழை யணிவனப்பின் இன்மைகளிர்
போக்கில் பொலங்கலம் நிறையப் பலகால்
வாக்குபு தரத்தா வருத்தம்வீட
ஆரவுண்டு பேரஞர் போக்கி

என்று பொருநராற்றுப்படையிற் கூறப்படுகின்றது. இதனால் பண்டைத் தமிழ் மக்கள், கள்ளுண்பதைக் குற்றமெனக் கருதாமலுண்டதும், தம்மை நாடி வந்த விருந்தினர்க்கு, வழி நடந்த களைப்புத்தீர கள்ளைவேண்டுமளவும் கொடுத்து உபசரிப்பதுமாகிய வழக்கம் வெளிப்படுகின்றது. இது பண்டைத் தமிழ் நூலிற் கூறப்படுவதனால் போற்றத்தக்க செயலென்று புகலலாகுமோ? இவ்வழக்கம் பண்டைத் தமிழர்களிடமிருந்ததால், நாமும் நமது முன்னோரைப் பின்பற்றுவது முறை என்று அவ்வழக்கத்தைக் கையாள வேண்டுமென யாராவது கூற முன்வருவரோ?

நீரும் நிலனும் தீயும் வளியும்
ஆகவிசும்போடு ஐந்துடன் இயற்றிய
மழுவாள் நெடியோன் தலைவனாக
மாசறவிளங்கிய யாக்கையர் சூழ்சுடர்
வாடாப்பூவின் இமையா நாட்டத்து
நாற்ற உணவின் உருகெழுபெரியோர்க்கு
மாற்றமரபின் உயர்பலி கொடுமார்
அந்தி விழவில் தூரியங் கறங்க.

(இதன்தொடர்ச்சி 20 ம் பக்கம் பார்க்க)

# ஸ்ரீமான் நாயக்கர்

அலசந்தாபுரத்தில் 20-3-28ல் நிகழ்த்திய

# சொற்பொழிவின் சாரம்.

சகோதரர்களே!

நான் இன்றையதினம் போல் என்றைக்கும் சந்தோஷமாயிருந்ததில்லை. இன்றயதினம் தான் என் வாழ்நாளில் ஓர்சுபதினமாகும் நான் உழைத்த உழைப்பின் பலனுக இன்று நடந்த இந்த ஒருகாரியமே என்னைச் சந்தோஷத்தில் அமிழ்த்திவிட்டது. இந்த மாதிரி ஒருவராவது நான் சொல்வது சரியென்று பட்டு தமது வாழ்க்கையை சுயமரியாதையில் திருப்பி அந்திய காலத்திலாவது பார்ப்பன சூழ்ச்சியை ஒழித்து நல்ல விஷயத்தைச் செய்ததை நோக்க நான் செய்துவரும் எல்லா ஊழியத்திற்கும் இந்த ஒரே கைமாறு போதுமென நினைக்கிறேன். இந்தமாதிரி அனுபவத்தில் காட்டக்கூடிய உணர்ச்சி அன்பர்கள் அவரவர்கட்கே உண்டாகி விட்டால் என் போன்றார் உழைப்பில்லாமலேயே நம் மக்கள் சுயமரியாதையைப் பெற்று விடுவார்கள். எனக்குப் பல வேலைகளும் உடல் நலிவும் இருந்தபோதிலும் உங்கள் அழைப்பிற்கு நான் மிகவும் சந்தோஷத்தோடு இங்கு வந்திருக்கின்றேன். இவ்வளவு பெரிய விசேஷக் கூட்டங்களுடனும் உணர்ச்சியுடனும் இக்காரியம் நடைபெறுமென்று நான் நினைக்கவேயில்லை. நான் 50 கிராமங்களுக்குச் சென்று செய்யவேண்டிய 50 நாள் வேலையை எல்லோரும் இங்கு வந்திருக்கிறபடியால் ஒரு நாளில் ஒரே மணியில் செய்து முடிக்க நேர்ந்ததே என்றும் திருப்தியடைகிறேன். துப்பாக்கி, பீரங்கி, குண்டுகள் நுழையக்கூடாத இம்மலையடைர்ந்த காட்டிற்குள்ளும் நான் சொல்லும் சிறு மொழியும் 'குடி அரசு' உபதேசமும் நுழைந்து இவ்வளவு மாறுதலையுண்டுபண்ணியிருக்கின்றதென்றால் இதன் கொள்கைகளின் உண்மைகள் எவ்வளவு மேலானதென்பதை நான் சொல்லவேண்டியதில்லை. நான் சொல்வதை பலபேர் கேட்டு நடக்க ஆரம்பித்திருக்கிறபடியாலும், நானே வந்து அவ்விஷயங்களைச் சொல்லவேண்டுமென்று கேட்கின்றபடியாலும், என்னால் சொல்லப்படுகின்ற உண்மை ஜனங்களின் உண்மையான உணர்ச்சியில் தோன்றக் கூடியதுதான் என்றும், அதுதான் சுயமரியாதையுள்ள மக்களுக்குள்ள உயர்ந்த அபிப்பிராயமென்றும், அதையேதான் நான் சொல்கின்றேன் என்றும் உணர்கின்றேன். ஆனால் நான் சொல்வதையெல்லாம் நீங்கள் கேட்டதன்படி நடக்க வேண்டுமென்று கட்டாயமில்லை. நான் சொல்வதைக் கேட்காவிட்டால் நரக தண்டனையென்று நான் மேற்கோளும் காட்ட வரவில்லை.

சங்கராச்சாரி, மடாதிபதிகள், குருக்கள், புரோகிதர்களுடைய ஊழல்களைச் சொல்லுவதனால் நான் ஷை மடாபதியாக வருவதற்கல்ல. நான் நாயனாராகவோ ஆழ்வாராகவோ ஆவதற்கல்ல. ஆனால் என் அனுபோகத்திற்கும் ஆராய்ச்சிக்கும் உண்மையென்று பட்டதை, நான் உள்ளபடி உணர்வதை உங்களுக்கும் சொல்லுகின்றேன். உங்கள் அறிவிற்கு அது சரியென்று பட்டால் கொள்ளுங்கள். அல்லவென்று பட்டால் தள்ளுங்கள்; சரியென்று பட்டபின் அதைக்கொள்ள தைரியமில்லாமல் ஊரை ஏமாற்ற, நாயக்கர் நாஸ்திகம் பேசுகிறார் என்று சொல்லி வீண் பழிபாவத்திற்கு உள்ளாகாதீர்கள். நமது சமூகத்திற்கு எதிரிகளாக இருந்து நம்மைக் காட்டிக்கொடுத்துப் பிழைக்கும் கோடாலிக் காம்புகளின் பேச்சைக் கேட்டு ஏமாறாதீர்கள். கடவுள் என்று சொல்லிக் கொண்டு கடவுள் பேரால் உயர்வு தாழ்வு கற்பித்துக்கொண்டு, கடவுள் பேரால் விபசாரம் செய்து கொண்டு, கடவுள் பேரால் தீண்டாமையை உற்பத்தி செய்து கொண்டிருப்பதையெல்லாம்தான் நான் கண்டிக்கிறேன். கடவுளை நம்புகிறவன் யோக்கியமாய் இருக்கவேண்டியது அவசியம். கடவுளை நம்பி யோக்கியமாய் இருக்கமுடியவில்லையானால் கடவுளைப்பற்றி கவலைப்படாமலாவது நீங்கள் யோக்கியர்களாய் இருக்கவேண்டுமென்பது தான் என் கோரிக்கை. எல்லாரையும் சமமாயும் சகோதரராயும் பாவிக்கவேண்டும். எல்லாரிடத்திலும் அன்புசெலுத்துதல் வேண்டும். தீண்டாமையை அறவே ஒழிக்கவேண்டும். தாசித் தொழில் ஒழியவேண்டும். பாலிய விவாகம் ஒழிந்து நமது பெண்கள் எப்பொழுதும் சுகமாயிருக்க வேண்டும். பொய் சொல்லக்கூடாது. திருடக்கூடாது. யோக்கியமாய் சுயமரியாதையுடன் வாழவேண்டுமென்று இதுபோல் சொல்லி வருகின்றேன். இதைச் சில அயோக்கியர்களும் அவர்தம பத்திரிகைகளும் பொறாமை, சுயநலம், அற்பபுத்தி காரணமாக நாஸ்திகம் என்று பேசியும் எழுதியும் வருகின்றன. இவையெல்லாம் நாஸ்திகமாயின் பின் ஆஸ்திகம்தான் என்ன?

கடவுள் பேரால் பொட்டுக்கட்டி விபசாரத்திற்கு விடுதலும், கடவுள் பேரால் தீண்டாதாரைக் கோயிலுக்குள் கும்பிட விடாமலும், கடவுள் பேரால் இளங்கன்னிகைகளாக கல்யாணம் செய்து அறுதலியாக்குவதும், கடவுள் பேரால் 100க்கு 96½ பேர் முட்டாளாகவும் 3½ பேர் படிக்கவும் கடவுள் பேரால் ஒரு வகுப்பார் உட்கார்ந்து சாப்பிடவும் மற்றொரு வகுப்பார் உப்பில்லாமல் ஓடி யுழைக்கவும், கடவுள் பேரால் பொய் சொல்லவும், திருடவும், பலியிடவும், யாகங்கள் செய்யவும், ஏமாற்றவும் செய்தால் இது தானா ஆஸ்திகம் என்று கேட்கின்றேன். அப்படியானால் இந்த ஆஸ்திகத்தை ஒழிப்பதே உலகுக்கு நன்மை பயக்குமல்லவா. உங்கள் அறிவை விளக்கி, இம்மாதிரி ஆஸ்திகப்பேச்சைவிட நான் சொல்லும் பேச்சில் ஆஸ்திகம் அதிகமிருக்கிறதா நாஸ்திகம் இருக்கிறதா என்று பகுத்தறிந்து பின்பற்றுங்கள். அயோக்கியர்கள் உங்களை நீண்டகாலம் ஏமாற்ற முடியாது. இம்மாதிரி குக்கிராமத்திலேயே ஒரு வயது சென்ற பெரியார் அந்தி காலத்தில் சுயமரியாதை உணர்ச்சிபெற்று பார்ப்பனீயத்தை ஒழிக்க முற்பட்டதும் அதையும் பக்தியுடன் நிறைவேற்றிய அவர்தம் புதல்வரையும் நோக்க இந்த சுயமரியாதைக் கிளர்ச்சியின் பலம் எதிரிகளுக்கு விளங்காமற் போகாது. இதற்காக அப்பெரியாரையும் போற்றி அவர் தம் குமாரனையும் ஆசீர்வதிக்கிறேன்.

மதத்தின் பேரால் பார்ப்பனர்களின் பொய், புரட்டு, வேதம், புராணம், சாஸ்திரம் முதலியவைகளில் நம்மக்கள் பல்லாயிரக்கணக்கான வருஷங்களாக அடிமைப்பட்டு விட்டனர். சுயமரியாதையே இல்லாது போய் விட்டது. சுயமரியாதை இல்லாது போனால் சுயராஜ்யம் எங்கேஇருக்கும்?

கிறிஸ்துவமதத்திற்கு ராஜ்யமிருக்கிறது. புத்த மதத்திற்கு ராஜ்யமிருக்கிறது. முகமதியமதத்திற்கு ராஜ்யமிருக்கிறது. அந்தந்த ராஜ்யம் அந்தந்த மதத்தார்களால் ஆளப்படுகிறது. ஆனால் பழைய தொன்மையான ஹிந்து மதத்திற்கு அநாதி காலந்தொட்டு ராஜ்யமுமில்லை. இருக்கிற ராஜ்யத்தையும் ஹிந்துக்கள் ஆளாமல அன்னியர் ஆளுகின்றனர். ஒவ்வொரு மதத்திற்கும் ஜனத்தொகை பெருகுகின்றது. நம் பழமையான ஹிந்து மதத்திற்கு ஜனத்தொகை குறைகின்றது. இந்தியாவில் உள்ள இந்துமதச் சம்பிரதாயப்படியுள்ள தீண்டாமையென்னும் கொடிய வழக்கத்தால் சுமார் 7, 8 கோடி முகமதியர்களாகவும் கிறிஸ்தவர்களாகவும் ஆகிவிட்டனர். இன்னும் தீண்டாமை ஒழியாவிட்டால், முகமதியராகவும் கிறிஸ்தவராகவும் ஆவதற்காக 6 கோடி பேர் காத்துக் கொண்டிருக்கின்றனர், இந்துவாக இருந்து முகமதியராக மாறினவர்களுக்கும் துருக்கி சுல்தானுடனும் ஆப்கன் அமீருடனும் சமத்துவமாக நின்று தொழவும் குரான்படிக்கவும் உணவு அருந்தவும் சமத்துவமான சுதந்திரம் உண்டு. இதுபோல் கிறிஸ்துவ மதத்திலும் புத்த மதத்திலும் உண்டு. ஆனால் பழைய ஹிந்துமதத்தில் கடவுளைப்பார்க்கக்கூடாத ஒரு சாதி, கிட்டே போகாதசாதி, இந்துவேதத்தைப்படிக்கக்கூடாதசாதி உண்டு. ஆனால் அதை ஒப்புக்கொள்ளுகிறவன்தான் ஹிந்து இதெல்லாம் வெறும புரட்டும், மக்களை ஏமாற்ற எழுதிவைத்ததும், தற்கால வாழ்விற்கு வேண்டாததும் ஆகியவைகளா இல்லையா என்று தான் கேட்கின்றேன். ஆதலால் இந்தப்புரட்டையெல்லாம் உதறித்தள்ளி நல்ல சமயத்தில் பற்றிக் கொண்டு நல்ல காரியத்தைச்செய்யுங்கள் என்றால் நாஸ்திகம் என்று குறுக்கே சொல்லவந்து விடுகிறார்கள். பிறகு கடவுள், மதம், சடங்குகள், முதலியவற்றால் சுயநலங்கொண்ட ஒரு சாதியார் எப்படி மக்களை ஏமாற்றிப் பிழைத்து வந்தார்கள் என்பதை சாங்கோபாங்கமாக எடுத்துரைத்து தமது ஆசனத்தமர்ந்தார்.

பின்னர் ஸ்ரீமான் என் தண்டபாணிப்பிள்ளை விஷபத்தைத் தழுவி பாபத்தைப் போக்கக் கூலி பெறும் பார்ப்பனர் தான் பாபிகள் என்றும் பாபத்தைப் போக்கிய பார்ப்பனர் அல்லாதார்கள் எல்லாம் புண்ணியவான்கள் என்றும், ஆதலால் புண்ணியவான்கள் புண்ணியவான்களாகிய பார்ப்பனரல்லாதாருக்கே இனி தானதருமங்கள் செய்ய வேண்டுமென்றும், பாவிகளாகிய பார்ப்பனர்களுக்குச் செய்த 56 தேச ராஜாக்கள், சேர சோழ பாண்டியர்கள், தஞ்சாவூர் மராட்டிய ராஜா, மதுரை திருமலை நாயக்கர், மங்கம்மாள் போன்றவர் இருந்த இடம் தெரியாமல் புல்முளைத்துப் போய்விட்டதென்றும், ஆகவே, அந்தப் பார்ப்பனப்பாவிகளை சேர்க்கக்கூடாது என்றும் பிரசாரம் செய்து வரும்ஜஸ்டிஸ் கக்ஷியினருக்கு மந்திரி பதவிகள் கிடைப்பதும், பனகால் போன்றவர்கள், ராஜாக்கள் ஆவதும் கைமேற்பலனாக அனுபோகத்தில் காண்பதால் இனி எல்லோரும் சுபா சுப சடங்குகளில் புண்ணியவான்களாகிய நமது இனத்தார்களைக்கொண்டு காரியம் நடத்தவேண்டுமென்றும் சுமார் 1 மணி நேரம் பேசினார்.

பின்னர் திரு. கண்ணப்பர் பார்ப்பனர்கள் செய்யும் யாகங்களின் நோக்கமும் தன்மையும் என்பது பற்றியும், அரசியல் பார்ப்பனர்களின் அயோக்கியப் புரட்டுகளையும், பஞ்சாங்கப் பார்ப்பனர்களின் படுமோச சூழ்ச்சிகளையும் விளக்கமாக அரை மணி நேரம் உபந்யாசித்தார். மாலைமரியாதைகளுடன் இரவு 9 மணிக்கு வந்தனோபசாரம் சொல்ல கூட்டம் கலைந்தது. திராவிடன் பத்திராதிபருக்கு திருவண்ணாமலை கோயில் வழக்கு நிதிக்காக ரூ. 10 நன்கொடையளிக்கப்பட்டது. உடனே உபந்யாசகர் மூவரும் புறப்பட்டு ஸ்ரீ நாயக்கர் ஈரோட்டிற்கும் மற்றிருவர் சென்னைக்குமாகப் போய்விட்டார்கள்.

பிரசங்கம் கேட்ட எல்லா கிராமவாசிகளும் இந்தப் பெரி குடும்பத்தில் நடந்த கரும காரியங்களையும் நேரில் பார்த்தும் கேட்டும் விட்டபடியால் அவை பசுமரத்தாணிபோல் உள்ளத்தில் பதிந்து இனி எல்லாரும் பார்ப்பனீயத்தை ஒழித்து சுயமரியாதை பெற்று சகல கருமங்களையும் பார்ப்பனீயத்தை ஒழித்து செய்ய வேண்டுமென்று முடிவு செய்து அவரவர்கள் போஜனம் உண்டு ஊருக்குச் சென்றனர்.

ஒரு நிருபர்.

# தென் இந்திய பௌத்தர் மூன்றாவது மகாநாடு.

## திரு. ஈ. வெ. ராமசாமி நாயக்கர் மதங்கள் என்பதுபற்றி நிகழ்த்திய சொற்பொழிவு.

எப்ரல் 7மாலை 1 மணிக்கு தென்னிந்திய பௌத்தர்களின் மூன்றாவது மகாநாடு சென்னை சிந்தாதிரிப்பேட்டை ஹைஸ்கூலில் அமைக்கப்பட்டுள்ள பந்தலில் ஆசிரியர் லக்ஷ்மி நரசு அவர்கள் தலைமையில் மிக்க விமரிசையாக நடந்தேறியது. மகாநாட்டிற்கு அநேக பிரதிநிதிகளும விஜிட்டர்களும் வந்திருந்ததுடன் பல மாதர்களும் வந்திருந்தார்கள்.

### வரவேற்புப்பிரசங்கம்.

கடவுள் வணக்கம் நடத்தப்பட்டபின் "தமிழன்" ஆசிரியர் திரு அப்பாதுரையார் அவர்கள் மகாநாட்டுப் பிரதிநிதிகளையும் மற்றவர்களையும் தென்னிந்திய பௌத்தர்களின் சார்பாகவும் மகாநாட்டு வரவேற்புக் கழகத்தின் சார்பாகவும் வரவேற்றுத் தமது வந்தனத்தையும் நன்றியறிதலையும் தெரிவித்து ஒருவரவேற்பு உபன்யாசம்செய்தார். பின்னர் பெருந்த கரகோஷத்தினிடையே மகாநாட்டுத் தலைவர் ஆசிரியர் லக்ஷ்மிநரசு அவர்கள் அக்கிராசனராகப் பிரேரேபிக்கப்பட்டு ஓர் அறிய அக்கிராசனப் பிரசங்கம்செய்தார். பின்னர்,

### மற்றைய பிரசங்கங்கள்.

அக்கிராசனர் முடிவுரை யானதும், 'குடி அரசு' ஆசிரியர் திரு. ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்கள் 'மதம்' என்பது பொருளாகவும், பிறகு 'நவசக்தி' ஆசிரியர் திரு. வி. கல்யாணசுந்தர முதலியார் அவர்கள் 'தமிழ் நூல்களில் பௌத்த மதம்' என்பது பொருளாகவும், முடிவில் 'திராவிடன்' ஆசிரியர் திரு. ஜெ. எஸ். கண்ணப்பர் அவர்கள் 'ஜாதி' என்பது பொருளாகவும் அரிய சொற்பெருக்கிட்டனர். உபந்நியாசங்கள் முடிந்தபின் அக்கிராசனர் சுருக்கமாக முடிவு கூறி வந்தனோபசாரத்துடன் மகாநாடு இரவு 7-மணிக்கு மேல் நிறைவெய்தியது.

### திரு. ஈ. வெ. ராமசாமி நாயக்கர்.

'மதம்' என்பது பற்றி பேசியதின் சாரம்:—

தலைவரே! தாய்மார்களே! அன்பர்களே! இன்று என்னை மதம் என்பது பற்றி சில வார்த்தைகள் சொல்லும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றது. அக்கட்டளையை சிரமேற்கொண்டு என் அறிவிற்கு எட்டிய சில முக்கிய விஷயங்களை மட்டும் எடுத்துக்கூற விரும்புகிறேன். அதனை நீங்கள் அப்படியே நம்பி ஒப்புக்கொள்ளவேண்டுமென்றோ, நான் ஓர் பெரிய அறிவாளி, ஆராய்ச்சிக்காரன் என்றோ சொல்லவரவில்லை. நான் சொல்வதை நன்காராய்ந்து உங்களுக்குச் சரியெனத் தோன்றுவதை எடுத்துக்கொண்டு சரியல்ல வெனத் தோன்றுவதை ஒதுக்கி விடும்படிதான் நான் உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். நான் பெரிய சீர்திருத்தக்காரனும் உபதேசக்காரனுமல்ல. ஆனால் என் அறிவுக்கெட்டிய வரை தீயவைகளாகத் தோன்றுவதைக் கண்டித்து நல்லவைகளை எடுத்துக்காட்டி பொது ஜன உபயோகமான துறையில் செலவிட வேண்டுமென்பது தான் என் முக்கிய நோக்கமும் விருப்பமுமாகும். என்னுடைய அறிவுக்கு எது தீயதென்றும், எது ஒழிந்துபட்டு மறைந்தொழிய வேண்டுமென்றும் பட்டிருக்கின்றதோ அதனைப் பல தலைப்புகளின் கீழ் பல விடங்களிலும் எடுத்துச் சொல்லிவருகின்றேனேயன்றி வேறல்ல. அதைத்தான் இங்கும் மதம் என்பதன் பெயரால் நான் உங்கள் முன்னிலையில் சொல்ல வந்திருக்கின்றேன்.

நான் என் மதம் என்பதைப்பற்றி பேசி வருகிறேன் என்றால் நான் எதோ சிறிது நேரமாயினும் பொது நன்மைக்கென்று செலவிட்டுக்கொண்டு வந்த வரையில் சில விஷயங்கள் நம் நாட்டுக்கு மட்டுமன்றி மனித சமூகத்திற்கேமுன்னேற்றத் தடைகளாயிருப்பது மதத்தின் பெயரால் செய்யப்படுபவைகள்தான் என்று நான் அபிப்பிராயப்படுகிறபடியால்தான். ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு மதமிருக்க வேண்டுமென்றும் சொல்லப்படுகிறது. அப்படியானால் அம்மதம் அவன் வாழ்நாளில் உபயோகமான நன்மைகளைச் செய்யக்கூடியதாயிருத்தல் வேண்டியது அவசியம். ஆயினும் நம் நாட்டில் ஒரு மனிதனின் மதம் என்பது அவன் வாழ்நாளில் அவனுக்கு எவ்வளவு உபயோகமில்லாததாயினும் அதன் கற்பனைகளுக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டியதா யிருப்பதைக் கண்கூடாகக் காண்கின்றோம். மகம்மதிய, கிறிஸ்துவ, இந்து, சைவ, வைஷ்ணவ சமயங்களெதுவாயினும் எல்லாம் ஒரே மாதிரி பல நிர்ப்பந்தங்களையுடைய மதங்களாகத்தா னிருக்கின்றன. அந்த நிர்ப்பந்தங்களின்படி அந்தந்த மதஸ்தர்கள் நடக்க வேண்டுமென்ற கட்டுப்பாடுகளு மிருக்கின்றன. என்னுடைய அனுபவத்தில் எந்த மதத்தினரைக் கேட்டாலும் இதற்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டுமென்றும் அதற்கு மீறி நடக்கக்கூடாது என்றும் ஏதோ சில நிர்ப்பந்தங்களைச் சொல்லுகின்றார்களேயன்றி அதில் உள்ள ஒழுக்கத்தை பின்பற்றுவதென்பது ஒருசிறிதும் இல்லை. மனிதன் தன் அறிவிற்கெட்டிய உண்மைப்படி நடக்க வேண்டும் என்று ஒரு மதமும் சொல்லுவதில்லை. மேலும் அவர்கள் அக்கட்டுப்பாட்டிற்கு மாறாக எண்ணினால் பாவம், பேசினால் மதத் துவேஷம். என்றும் சந்தேக நிவர்த்திக்கு ஏதாவது ஒரு சிறிது முயற்சித்தால் அதை நாஸ்திகமென்றும் சொல்லுகின்றார்கள். இதனால் அறிவின் தன்மைக்கும் இயற்கைக்கும் ஒத்தமாதிரி ஏற்றவாறு நடக்க இடம கொடுக்கும் படியான மதம் உலகில் மிக அருமையாகத் தானிருக்கின்றது. உண்மையில்,

மதமென்பது என்னவென்பதையும் அதன் அவசியத்தையும் அறிந்திருப்போர் வெகு சிலர்; அது என்னவென்றே யறியாது பழமை என்பதனாலும் முன்னோர்களுடையது என்பதனாலும் பழக்க வழக்கங்களினாலும் கண்மூடித்தனமாகப் பின்பற்றிக் கொண்டுமிருப்பவர்கள் பெரும்பாலோர். பெரும்பாலோருக்கு அவர்கள் அனுசரித்துவரும் கொள்கைகளைப்பற்றியோ அல்லது தங்கள் மீது சுமத்தப்பட்டுள்ள நிர்ப்பந்தங்களைக் குறித்தோ ஒன்றுமே தெரியாது. ஆனால் அத்தகையோர் "பெரியோர்கள் சொன்னபடி கேட்க வேண்டும் அவர்கள் சென்றவழி செல்ல வேண்டும். இல்லாவிட்டால் பாவம், தோஷம்" என்று ஏதோ சமாதானம் சொல்லுகின்றார்களே யன்றி அதன் உண்மையை யறியும் விஷயத்தில் ஒரு சிறிதும் முயற்சியில்லாமல் தானிருக்கின்றனர். என்ன காரியத்திற்காக மதம் இருக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறதோ அந்த காரியத்திற்காக மதம் உபயோகப்படுவதாய் காணப்படவில்லை. ஒருவரை உனக்கு மனைவி மக்களுண்டா? எவ்வளவு படித்திருக்கின்றீர்கள்? என்ன சொத்து சுதந்திர மிருக்கின்றது? என்று விசாரிப்பது போலத்தான் ஒருவனை உன் மதம் என்னவென்று கேட்பதும் ஒரு சொத்தாய் மதிக்கக் கூடியதாயிருக்கின்றது. மதம் என்று சொல்வது எதற்காக? அது எப்போது ஏற்பட்டது? அது ஒரு நிலையாயிருக்க வேண்டுவதா? அல்லது அடிக்கடி மாறக்கூடியதா? அல்லது புதிதாக உண்டாக்கிக் கொள்ளக்கூடியதா? என்பனவற்றை ஆலோசிப்போமாயின் மற்ற தோற்றங்கள் மாறக்கூடியதாயிருப்பது போன்றே மதமும் அறிவிற்கு ஏற்றவாறு மாறக்கூடியதற்கு இடந்தரவேண்டும் என்பது புலனாகும். அன்றியும் ஒருவனுக்கு ஒரு மதமென்பது நித்தியமானதென்றும், அது என்றைக்கும் மாறக்கூடாதென்றும் சொல்வதற்கு இடமில்லை. மதமானது அவ்வப்போதைய காலதேச வர்த்தமானத்திற் கேற்றவாறும், மக்களின் வாழ்க்கையை எப்படி நடத்துவதென்பதன்படியும், சரீர பலத்தினாலோ புத்தி பலத்தினாலோ அவரவர்கள் புத்திக்கு ஏற்றவாறு பல கொள்கைகளையும் கட்டுப்பாடுகளையும் நிர்ணயித்து அதைத்தான் மக்கள் பின்பற்றி நடக்க வேண்டுமென்றும் கட்டுப்படுத்தி நிர்ப்பந்தித்து வருவதையே தான் இப்போது மதம் என்று சொல்லப்படுகிறது. ஆனால் இதற்குப் பல ஆதாரங்களையும் அற்புதங்களையும் சொல்லி விடுகிறார்கள். அவைகள் ஒரு சமயம் அந்தக்காலத்திற்கு தகுந்ததாக ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பினும் இப்போது அவை ஒன்றும் ஒப்புக்கொள்ளக்கூடியவைகளா என்பதை ஒரு சிறிதும் கவனிப்பதில்லை. ஒவ்வொருமதத்திலும்கடவுள், கடவுள் அவதாரம், கடவுள் மகன், கடவுள் மூலமான தூதன் என்று பலவாறு மதத்துடன் கடவுளை இணைத்து சொல்லப்படுகிறது. அக்காலத்து நிலைமையை உத்தேசித்து மக்களுடைய நன்மையை முன்னிட்டு அவ்வாறான பிரமாணங் கற்பனை செய்யப்பட்டதென்று சொல்வது ஏதோ ஒருவாறு ஒப்புக்கொள்ளலாம். அப்படிக்கின்றி கடவுள் அவதாரமாகவோ பிள்ளையாகவோ தோன்றி இதைச்சொன்னார் அதைச் சொன்னார் என்பதும், ஆழ்வார்கள் ஆச்சாரியார்கள் நாயன்மார்கள் முதலிய பல பெயர்களுடையவர்கள் தோன்றி பல அற்புதங்கள் செய்து காட்டி இதைச்சொன்னார் அதைச்சொன்னார்என்பதும் தான் இவ்வுலகத்திற்குப்பெரியகஷ்டத்தையும் துன்பத்தையும் தரக்காரணமாயிருப்பதுடன் மக்களை முழு மூடர்களாக்கிக் கொண்டும் வருகின்றது (கரகோஷம்) உலகவாழ்வில் மற்றொருவனுக்கு இம்சையின்றி பிறருக்கு எப்படி உபயோகப்படுவது என்பதையேதான் முக்கியகொள்கையாகக் கொண்டுடைப்பவனுக்கு வேறு மதம் வேண்டுவதில்லை என்பதுடன் தேவகுமாரனும், நபியும், ஆழ்வாரும், ஆச்சாரியர்களும், நாயன்மார்களும்தெய்வீகமும், அற்புதங்களும் வேண்டியதில்லை என்பதே என் முடிவு. அம்மாதிரி தருமத்தையே அனுபவமாக்கத்தக்க விதமாய் இப்போது போதிக்கத்தக்க மத மெதுவுமிருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. அப்படிக்கு இருப்பதாக இப்போது சொல்ல வருவதெல்லாம் ஏதோ செல்லரித்த ஏட்டை எடுத்துக்கொண்டு வந்து இதோபார் நீ சொல்வதெல்லாம் இதில் எழுதியிருக்கிறது என்று காட்டப்படுவதன்றி சமூகவாழ்க்கையிலனுபவத்திலிருக்கின்றதெனச்சொல்லப்படும் மதமோ சமயமோ ஒன்றுமில்லை. இவ்வளவு மதங்கள்சமயங்

கள் இருந்தும் அனுபவத்திற்கும் இயற்கை இன்பத்திற்கும் ஒத்தது எது, அவசியமானது எது, என்று கண்டு பிடிக்கத்தான் வேண்டியிருக்கின்றதே ஒழிய தாராளமாய் பின்பற்ற ஒரு சமயமும் இடங் கொடுக்கவில்லை. அந்த விதமான ஒரு நிலைமை மனித சமூகத்திற்கு ஏற்பட்டாலொழிய மனித சமூகம் ஒற்றுமையுடனும் அன்புடனும் சுதந்திரத்துடனும் வாழ்வது கஷ்டந்தான். நாளுக்குநாள் புதிய மதங்கள் உற்பத்தியாவதும், பழைய மதங்களுக்குப் புதிது புதிதான பாஷியமும் பொருளும் சொல்லிப் பிரசாரங்கள் மிகுந்துகொண்டுமிருக்கின்றனவே யன்றி மனித சமூகத்தின் அவசியம், தன்மை, கடமை முதலியவை என்னவென்றும், இத்தகைய பாஷியங்களும் மதமும் அவற்றிற்கு ஏற்றவைகளா யிருக்கின்றனவா வென்றும் ஆலோசிப்பார் யாருமில்லை. அக்கிராசனர் சொல்லியதுபோல் ஆயிரக்கணக்கானவர்கள் பல ஆயிரக் கணக்கான கொள்கைகளையும் தர்மங்களையும் எழுதி வைத்திருக்கலாம். அதைப்பற்றி நமக்குக் கவலையில்லை. எந்த மனிதனுக்கும் அவசியமெனச் சொல்லும் எக்கொள்கையும் அனுபவத்தில் எளிதாக அனுசரிக்கப் படுவதற்கு ஒத்ததாயிருக்கின்றதோ—அனுசரித்தே தீரவேண்டியதாயிருக்கின்றதோ அதனைத்தான்உத்தமமும் உண்மையுமுள்ள கொள்கை யென்று சொல்ல வேண்டும். இல்லாமல், இப்படியிருக்கவேண்டும் அப்படி யிருக்கவேண்டுமென்ற கட்டுப்பாடுகளும் நிர்ப்பந்தங்களும் மாத்திரம் ஏற்படுத்திக்கொண்டு அதை சிவன் சொன்னார், விஷ்ணு சொன்னார், கிருஸ்து சொன்னார், நபி சொன்னார், புத்தர் சொன்னார், ரிஷி சொன்னார், முனி சொன்னார், மநு சொன்னார் என்பதாக சொல்லிக்கொண்டு காரியத்தில் நடைபெற முடியாமல் இருக்கும் மதங்கள் எவற்றினாலும் உலகம் ஒருநாளும் உய்யப் போவதில்லை. மனிதனுடைய இயற்கை தத்துவத்திற்கும் அனுபவத்திற்கும் விரோதமானதைப் புகட்டும எந்த மதத்தையும் சுருட்டிக் கட்டி மடக்கி சமுத்திரத்தில் போட வேண்டியதுதான். புண்ணியம், பாவம், மதம், கொள்கை, முதலிய இவற்றின் பெயரால் ஜன சமூகத்திற்கு ஏற்பட்டிருக்கும் கஷ்டங்களும் துன்பங்களும் இவ்வளவு என்று சொல்ல முடியாது. உலகத்தில் அநீதிகளும் மக்களுக்கு விரோதமான காரியங்களும் எவ்வளவு இருக்கக் காண்கிறோமோ அவ்வளவும் மதத்தின் பேராலும் தெய்வத்தின் பேராலும்தான் ஏற்படுகின்றதென்பதை உறுதியாய்ச் சொல்லுவேன். திருட்டுக்கும், விபசாரத்திற்கும், பொய், கொலை முதலிய தீத்தொழில்களுக்கும், குடிக்கும், சர்வ சதாகாலமும் மக்களை வஞ்சித்து பிறருடைய உழைப்பினால் சாப்பிட்டுக்கொண்டு சோம்பேறிகளாய் காலங்கழித்துக் கொண்டிருப்பதற்கும் மதங்களும் தெய்வங்களும் சம்மதப்பட்டு இடங்கொடுத்துக் கொண்டிருப்பதாய்ச் சொல்லி புராணங்களும் இதிகாசங்களும் எழுதி வைத்திருப்பதுடன், கடவுளுக்கும் அது இஷ்டந்தான் என்றும் கடவுளும் அவற்றில் ஆசைப்பட்டு நடந்திருப்பதாயும் எழுதி வைக்கப்பட்டு இருக்கின்றது. (கரகோஷமும் நகைப்பும்) குடிப்பதே சில கடவுள்களுக்கு இன்பம். மற்றும் விபசாரம் திருட்டு முதலிய பல தீச் செயல்கள் செய்வதே சில கடவுளுக்கு விருப்பம்; ஏழைகளை வதைத்து அவர்கள் உழைப்பினால் சுகமாக வாழ்வதே சில கடவுளுக்குச் சந்தோஷமென்று மதத்தின் பேரால் பலவாறுக ஆபாசமான கற்பனைகளும் புராண ஆதாரங்களும் வேதங்களு மேற்பட்டிருக்க வில்லையா! மக்களுக்கு உபயோகமற்றதும இம்மாதிரி இயற்கைக்கு விரோதமானதுமாகிய கடவுளும் மதம் முதலியவைகளும் உலகத்தை விட்டொழியுமபோதுதான் மக்களுக்குக் சுகமுண்டாகும். மனிதனுக்கும் இத்தகைய சுகத்தைப் பெறுவதற்கான வழியைத் தேடுவதற்கு வேண்டிய தைரியம் வந்தால்தான் அந்த எண்ணமும் உதயமாகும். ஆனால் அந்த எண்ணம் உதயமாகு முன்பே அந்நெறியிலிருந்து மனிதனை வலை வீசி இழுத்து பாழ்படுத்த பல முட்டுக் கட்டைகளும் நிர்ப்பந்தங்களு மிருக்கின்றன. மனிதன் இம்முயற்சியில் மனிதன் இவற்றிலிருந்து விடுபட வேண்டுமானால் எந்த விதமான கட்டுப்பாட்டுக்கும் அடங்கியவனாக இருக்கக் கூடாது. எதையும் உடைத்தெறிந்து கலகம் செய்யத் தயாராய் இருக்கவேண்டும்.

மனிதன் தன்னுடைய அயலானுக்கு கஷ்டம் கொடுக்காமலும் எந்த விதத்தில் உதவிசெய்யலாம் நாமும் இன்பமாய் வாழலாம் என்ற நோக்கமுடையவனாயும்வாழவேண்டும். மற்றப்படிசிறு கூட்டங்களின் சுய நன்மைக்காகப் பலவித கட்டுப்பாடுகளையும் நிர்ப்பந்தங்களையும் வைத்துக் கொண்டு மக்களையும் ஏமாற்றித் திரியும் மதங்களையும் கொள்கைகளையும் வெட்டி ஆழப் புதைக்கவேண்டும் ஆதாரங்களை சுட்டுப்பொசுக்கி சமுத்திரத்தில் கரைத்துவிட வேண்டும். (கரகோஷம்) நான் மதத்தைப்பற்றி பேசும்போது சிலருக்கு வருத்தமாகத்தானிருக்கும். ஏனென்றால் அவர்கள்பார்க்கும் கண் இந்த மதத்தின் கொள்கைகளின் மூலமானதாயும், பிறரை வஞ்சித்து மோசம் செய்வது இம்சிப்பது முதலான கொள்கைகளின் மூலமாகவும் பார்ப்பதுமாக விருப்பதனால்தான். யாருக்கு எந்த மதத்தில் பற்றிருப்பினும் அதைக் குறித்து எனக்குக் கவலையில்லை. ஆனால் அந்தமதத்தினால் நாடு என்ன நன்மை பெற்றது மனிதவர்க்கத்திற்கு என்ன பலனேற்பட்டது என்னும் கேள்வி முக்கியமானதாயிருக்கவேண்டும். புல்லாகிப் பூண்டாகிப் புழுவாகி மனிதனாகி பிறகு கடவுள் பக்கத்திலிருப்பவனென்றும் பலவாறுபரிணாமநிலைகளை (நகைப்பு)க் குறித்துச் சோம்பேறிகள் பெருமையாகப் பாடிக்கொண்டுபோவதனால் என்னபயன்? வேண்டுமானால் மூடர்கள் முன்னிலையில் ஆழ்வார்களாகவும் நாயன்மார்களாகவும் வாழலாம். (கரகோஷம்) மனிதனே புல்பூண்டு புழுமிருக முதலிய ஜீவராசிகளுக்கெல்லாம மேலான அறிவைப்படைத்துள்ளவனென்று சொல்லப்படுகிறது. ஆனால் அவற்றிலிருந்தும் மனிதவருக்கத்திற்கு அப்புல்பூண்டு புழு பூச்சிகளைவிட அறிவற்றதன்மையும் துன்பமுமே தொடர்ந்து வரக்காண்கின்றோம். ஒரு சமயம் மனிதனுக்கும் அவற்றிற்குச்சமமான அறிவு இருந்திருந்தால் துக்கம் துக்கமென்ற உணர்ச்சியில்லாமற் போயிருக்கலாமல்லவா? மனிதனுடைய உண்மையான நிலையை ஒருவருக்காவது கற்றுக்கொடுக்கக்கூடிய மதம் இல்லை. உள்ளதைக்கொண்டு திருப்தியடையுங்கள், அடுத்தவனுக்கு உபகாரியாய் நன்மை செய்யுங்களென்று எந்த மதமும் காரியத்தில் கற்பிக்கவில்லை. அதனை அறியும் வரை மனிதனும் பூச்சிப் புழுக்களைப்போல் நசுக்குண்டுதான் துன்பத்திலுழன்று கொண்டிருப்பான்.

இந்து மதமென்றாலும் வேறுமற்றெந்தமதமென்றாலும் நாட்டையும் ஜன சமூகத்தையும்பாழ்படுத்த எவ்வளவு கட்டுப்பாடுகளும நிர்ப்பந்தங்களும் நிறைந்திருக்கக் கூடுமோ அவ்வளவும் நிறைந்து வழிபடக்கூடியவைகளாகத் தானிருக்கின்றன. காரிய அளவில் இந்து மதம் என்பதும் அதன் பெயரால் கொள்ளப்படும் கொள்கைகளும் மற்றெல்லாமதங்களைவிட மனிதனை ஏமாற்றிக் கட்டுப்படுத்தி நிர்ப்பந்தங்களுக்குள்ளாக்கக்கூடியவைகளாகத்தானிருக்கின்றன. கூடியவரை புத்த மதக் கொள்கைகள் ஒரு விதத்தில் உயரியகருத்தைக் கொண்டதாக இருப்பதாய் சொல்லப்படுகின்றது மேலும் மற்றெல்லாமதங்களைவிட புத்த மதத்தில் கருத்துக்கள் விசாலமாக மனித தர்மத்திற்கும் அனுபவத்திற்கும் ஒத்ததாகவிருக்கின்றன என்று சொல்லப்படுகின்றது இதனை நான் முழு ஆராய்ச்சியினால் சொல்லுவதாகக் கருதிவிடக்கூடாது. உலகத்தில் எதாவது ஒரு நல்ல விஷயத்தைச் சொன்னால் என்ன இது புத்தமதமாயிருக்கிறதே என்று சொல்லப்படுவது இயற்கையாயிருப்பதிலிருந்துதான் இம்மதத்தின் கருத்துக்களை அனுமானித்தேன். இன்றைய தினம் இங்கு கூட்டப்பட்டுள்ள மகாநாட்டில் நீங்கள் இப்படி நடக்கவேண்டும, அப்படி நடக்கவேண்டுமென்று கட்டுப்படுத்தும் தீர்மானங்களும் செய்யப்படலாம். அதனாலேயே முடிவான நன்மைகள் விளைந்துவிடாது. உலகத்திலுள்ள பெரிய மதங்கள் என்பவை மக்களை என் உயரிய கருத்துக்களை அனுசரித்து வாழ்க்கையிலுய்யுமாறு பக்குவப்படுத்தவில்லை என்னும் கேள்விக்கும் பதில் சொல்லக் கடமைப்பட்டுமிருக்கின்றோம். அறிவுக்கும் அனுபவத்திற்கும் ஒத்ததாயுள்ள மதம் என்றால் மக்களுள் பெரும்பாலோரால் ஏன் ஏற்றுக்கொள்ளப் படவில்லை என்றால் இதற்கு "எதிரிகளின் சூழ்ச்சிகளினால்தான்" என்று பதில் சொல்லப்பட்டிருக்கிறது. எல்லா மதத்தினரும் இவ்வாறு தான் சொல்லுகின்றனர். எந்த மதம் மக்களுடைய வாழ்வைக் கைப்பற்றி அவர்களைப்பக்குவப்படுத்தியிருக்கின்றது என்று பார்ப்போமானால் ஒன்றைக் கூடச்சொல்வதற்கில்லை. மதத்தின் பெயரால் செய்யப்படும் காரியங்கள் ஒன்றாவது மக்களை மனிதத்தன்மைக்குத்திருப்புபவைகளாயிருக்கவில்லை. ஆதலால் இம்மாதிரியான மகாநாடுகள் மனிதனை மனிதத் தன்மைக்குத் திருப்புவது என்ற முயற்சிகளிலிறங்கி நிர்ப்பந்தமின்றி அனுபவத்தில் எளிதில் கைக்கொண்டனுசரிக்கத் தக்க-அனுசரித்துத்தீரவேண்டியதான கொள்கைகளை பகுப்பது உசிதமாகும். எது மனித தர்மத்திற்கு விரோதமோ, எது அறிவுக்கு விரோதமாக முட்டுக்கட்டையாக நிற்கின்றதோ அதை எல்லாம் அழிக்க தைரியமாக முன் வந்து அவ்வேலையில் ஒரு கட்டுப்பாட்டுக்கும் நிர்ப்பந்தத்திற்கும் இடங்கொடாது அவற்றை அழித்து மனிதத்தன்மையைப் பரவச் செய்வதனால்தான் இது சத்தியமாகும். உலகமும் மனிதசமூகமும் சுகமும் சுதந்தரமுமடையக்கூடும். (பெருத்த கரகோஷம்) இந்து மதமென்பதாக ஒரு மதமில்லை என்பதுதான் என் அறிவுக்கு எட்டிய முடிவு. ஆனால் பல மதங்கள் (சைவம், வைணவம் முதலியன) சேர்ந்தது இந்து மதமென்று சிலர் சொல்லுகின்றனர். இந்துமதமென்பதில் சைவம் வைணவமாகிய இத்தியாதி மதங்கள் சேர்ந்த தொடர்பெனச் சிலர் சமாதானம் கூறினாலும் அவை எவ்வித உண்மைக்கும் ஒத்ததல்லவென்பது தான் என் அபிப்பிராயம் இந்து மதம் என்பதில் சைவம் வைணவம் என்னும் இரண்டு சமையமும் வெறும் புரட்டையே அஸ்திவாரமாகக்கொண்டு கட்டப்பட்டது. மகமதிய மதமும், கிறிஸ்துவ மதமும் ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஏற்பட்டதென்றும், அதனை உண்டாக்கியவரைக் குறித்தும், கொள்கைகளைப் பற்றியும் சில ஆதாரங்களுமிருப்பதாகச் சொல்லப்படுகின்றது

ஆனால் சைவம் வைணவம் முதலிய மதங்கள் சேர்ந்த தொடர்பான இந்து மதமென்பது எக்காலத்தில், எப்படி ஏற்பட்டதென்ற அஸ்திவாரம் குறிப்பிடுவதற்கில்லாமலிருக்கின்றது. இம்மதங்களென்பது ஜனங்கள் அறியாமைகாரணமாக வளர்ந்துகொண்டு, இந்நாட்டினரை ஒன்றுபடுத்துவதற்கிடமில்லாமலிருக்கின்றது. நானும் கூடியவரை அந்தந்த மதத்தில் சம்பந்தப்பட்டவர்கள் சொல்லும் சமாதானங்களையும், அவர்கள் அபிப்பிராயங்களையும் கவனித்துக்கொண்டுதான் வருகிறேன். மதங்களால் ஒரு பெரிய சமூகம் சிதறுண்டு பல கஷ்டங்களுக்கும் துன்பங்களும் இலக்காகியிரு

இதன் தொடர்ச்சி 17ம் பக்கம் பார்க்க

# இதிகாசங்கள்.

## இராமாயணம்—பாலகாண்டம்

### 8-ஆம் கட்டுரை

**திரு. சந்திரசேகரப்பாவலர் எழுதுவது.**

விசுவாமித்திர முனிவன் வந்திருப்பதை அறிந்த சனக மன்னன் தனது புரோகிதனை சதானந்தனை அழைத்துக்கொண்டு எதிர்கொண்டு வந்து இன்சொற் கூறி வரவேற்றான். சதானந்தன் அகலிகையினுடைய மகன். அவளைக் கௌதமன் ஏற்றுக்கொண்டமைதெரிந்து அவன் மகிழ்ச்சியடைந்தான். விசுவாமித்திரனுடைய வரலாற்றை சதானந்தன் இராமனுக்குக் கூறினன். அது வருமாறு.—

காதி என்பவனுடைய மகன் விசுவாமித்திரன். அவன் அநேக ஆயிரமாண்டு ஆண்டனன். விசுவாமித்திரன் ஓர் சமயம் தன் சேனைகள் புடைசூழ பலதலங்களையும் பார்த்து வருபவன் வசிட்ட முனிவனுடைய ஆசிரமத்தை அடைந்தான். விசுவாமித்திரனுடைய தகப்பன் காதி. அவன் தந்தை குசநாபன். அவன் தந்தை குசன். அவன் தந்தை நான் முகன். ஆதலின் நான் முகனின் பேரனுக்குப் பேரன் விசுவாமித்திரன். வசிட்டனோ நான்முகனுடைய மகன். தனது ஆசிரமத்தையடைந்த விசுவாமித்திரனுக்கு வசிட்டன் தனது பசுவாகிய காமதேனுவின் உதவியால் விருந்து செய்தான். காமதேனு விசுவாமித்திரனுடைய சேனையில் எல்லோருக்கும் அவரவர்கள் விரும்பிய பொருளை எல்லாம் தந்தது. விசுவாமித்திரன் ஆசைகொண்டு அப்பசுவைத் தனக்குக் கொடுத்து விடும்படிகேட்க வசிட்டன்மறுத்தான். உடனே அரசன் அப்பசுவை இழுத்துக்கொண்டு போனான். அது வசிட்டனிடம் ஓடி வந்து முறையிட்டது. வசிட்டன் காமதேனுவை நோக்கி 'நான் பலமில்லாதவன். அரசனோ மிகவலியுடையான். அவனோ எனது விருந்தினனாக இருப்பதோடு பூமிக்குச் சொந்தக்காரனாகவு மிருக்கிறான். சேனைபலமும் அவனுக்கிருக்கிறது' என்று கூறினன். பசுவோ 'பிராமணராகிய நீர் க்ஷத்திரியராகிய விசுவாமித்திரரைவிட பலவகையிலும் பலமுடையீர். எனக்கு ஆணை தந்தால் நானே அவனை அழிக்கிறேன்' என்றது. வசிட்டனாணையால் பசு ஒரு முக்கலிட்டது. அதிலிருந்து பல வீரர் தோன்றினர். அவர்களை யெல்லாம் அரசன் அழித்தான். பின்னும் அது ஒரு முக்கலிட்டது. அதன் மடியிலிருந்து பப்பலவர்களும் காம்போசர்களும் தோன்றினர். அதன யோனியிலிருந்து யவனர்களும், குதத்திலிருந்து சகர்களும், மயிர்க்கால்களிலிருந்து ம்லேச்சர் முதலிய வீரர்களும் உண்டாயினர். அவர்கள் அரசன் சேனையை அழித்தனர். அதுகண்ட அரசன் மக்கள் நூற்று வரும் வசிட்டனோடு எதிர்த்தனர். முனிவன் அவர்களை ஒரு முகூர்த்த காலத்தில் சாம்பலாக்கினன். அது கண்ட விசுவாமித்திரன் வருந்தி சாகாமல் மீந்த ஒரு மகனை அழைத்து அரசை அவனிடம் ஒப்புவித்து இமயமலையை யடைந்து தவம் புரிந்தான். அவனுக்குச் சிவபெருமான் தோன்றி பல அம்புகளையும் அருளினர். அதனால் அகந்தை கொண்ட விசுவாமித்திரன் வசிட்டனோடு கடும்போர் தொடங்கினன்.

அது கண்ட வசிட்டன் "உனது க்ஷத்திரிய பலமெங்கே, எனது பிராமண பல மெங்கே" என்று கூறி ஒரு தடியோடு போர்செய்தான். அத்தடியின்முன் அரசன் அம்பெல்லாம்சாசமாயின. அதனால் அரசன் தோற்றனன். அத்தோல்வியால் மனமிக வருந்தி தனக்கு வசிட்டனோடு ஏற்பட்ட வீணை சண்டையைநினைத்து பெருமூச்சு விட்டு தனது மனைவியை அழைத்துக்கொண்டு "நான் இனி பிராமணத்தன்மையை அடையப் பெருந் தவம் செய்வேன்" என்று கூறித் தென் திசையை அடைந்தான். இவ்வளவில் இவ்வரலாற்றை ஆராய்வோம்.

நான்முகனுடைய மக்களில் ஒருவனாகிய வசிட்டன் பிராமணனாகவும் மற்றொருவனும் அவன் வழிப் பிள்ளைகளும் அரசனாகிய க்ஷத்திரியராகவும் இருந்தமை காண்கின்றோம். இதனால் ஒருவனுடைய மக்களில் சிலர்பிராமணராகவும், சிலர் க்ஷத்திரியராகவும், மற்றும் சிலர் மற்றைய குலத்தினராகவும் இருக்கலாமெனத் தெரிகிறது. வசிட்டனும் அவன் உடன் பிறந்த வனாகிய குசன் வழித்தோன்றலுக்கும் நிகழ்ந்த சண்டையே இது. இதனால க்ஷத்திரியர் முதலிய பல வருணத்தாரினும் பிராமணரே வலியுடையர் என்பதை விளக்குவதற்காக இக் கதை குறிக்கப் பெறுவது என அறியலாம். ஆனால் சாதாரணமாக இருந்த பிராமணரெல்லாம் இவ்வலியுடையரென இக்கதை விளக்கவில்லை வசிட்டனைப்போன்ற முனிவரே பிராமணர்; அவர்களே வலியுடையோர் என்பதுதான் இக்கதையால்-நிலைநாட்டப்பெறுவது. வசிட்டனோ பெண்டாட்டி பிள்ளைகளோடு வாழ்ந்தான். இவனுடைய செயல்களையும் இவன்போன்ற முனிவர்களுடைய செயல்களையும் பிராமணப் பெருமையையும் அடுத்தகட்டுரையில் ஆராய்வோம். பெண்டாட்டி பிள்ளைகளோடு காட்டிலிருந்த வசிட்டன் ஓர் தடியால் அரசனாகிய விஸ்வாமித்திரனை வென்றான் என்பது விந்தையாகவே உள்ளது. இவன் காமதேனுவிடம் கூறிய மொழிகளை கவனித்தால் மிகவும் பயங்காளி என்பது தெரிகிறது. இவன் விஸ்வாமித்திரனையும் அவன் சேனைகளையும் வென்றதோடு விஸ்வாமித்திரனது மக்கள் நூற்றுவரையும் எரித்துவிட்டானாம்.

விஸ்வாமித்திரன் பல தலங்களையும் சுற்றிவருபவன் வசிட்டமுனிவன் இடத்தையும் அடைந்தானென வால்மீகி கூறுகிறார். கம்பரோ அவன் வேட்டையாடச் சென்றவன் வசிட்டமுனிவனையடைந்தானெனக் கூறுகிறார். வசிட்டன் அயோத்தியை யடுத்த வனத்திலேயே இருந்தவனாவன் அது அந்நிய நாட்டுக் காடாதலால் அங்கே வேட்டை குறித்து விசுவாமித்திரன் சென்றானென்பது பொருந்தாதாகும். வால்மீகி கூறும் வரலாறே பொருந்துவதாக உள்ளது.

விசுவாமித்திரன் தனது நூறு பிள்ளைகளும் மாண்டவுடன் மீந்த ஒரு மகனுக்குப் பட்டங்கட்டிச் சிவ பெருமானை நோக்கித் தவம் செய்து பின் வசிஷ்டனோடு சண்டையிட்டுத் தோற்றான் என்று வால்மீகி கூறுகிறார். கம்பரோ இதற்கு மாறுபடக்கூறுகிறார். விசுவாமித்திரன் தன் மகனொருவனுக்குப் பட்டங்கட்டியதைக்கூற அவர் முற்றும் மறந்துவிட்டனர். மேலும் தனதுபிள்ளைகள் நூறுபேரும் இறந்தவுடன் விஸ்வாமித்திரன் வசிஷ்டனோடு சண்டையிட்டான் என அவர் கூறுகிறார். அச்சண்டை மத்தியில் விசுவாமித்திரன் சிவ பெருமானை நோக்கி வணங்கி வழுத்தவே அவர்தோன்றி ஓர் படை தந்ததாகக் கம்பர் கூறுகிறார். வால்மீகி முனிவர் இவ்வாறு கூறாது தன் பிள்ளைகள் இறந்வுடன் விசுவாமித்திரன் இமயமலையை யடைந்து தவம் புரிந்து சிவனருளால் எண்ணிறந்த படைகள் பெற்றுப் பின்னரே வந்து போர் தொடங்கினனென்பர். தோற்றவுடன் விசுவாமித்திரன் தவம்புரியத் தென் திசையையடைந்தான் என்று வால்மீகி கூறுகிறார். ஆனல் கம்பரோ அவன் கிழக்குத்திசையை அடைந்ததாகக்கூறுகிறார். ஆதலின் கம்பர் முதற்கண்,

> "தேவபாடையின் இக்கதை செய்தவர்
> மூவரானவர் தம்முளு முந்திய
> நாவினுருமையின்படி நான் தமிழ்ப்
> பாவினு லிதுணர்த்திய பண்பரோ."

எனத்தாம் வால்மீகி கூறுகிறபடி இராம கதையைப் பாடுகிறேன் என உணர்த்தியதற்கு மாறாகவே இராமாயணம் பாடுகிறாரெனத் தெரிய வருகிறது. கம்பருடைய கணக்கற்ற மாற்றங்களை அங்கங்கே குறித்து விளக்கி வந்திருப்பதை இவ்வாராய்ச்சி யுரையைத்தொடர்ந்து படித்துவரும் அன்பர்கள் நன்றாகக் கவனித்திருப்பார்கள். இனி காமதேனுவின் செயல்களை ஆராய்வோம்.

காமதேனு என்ற ஒரு பசு எண்ணிறந்தசேனைகளுக்கு வேண்டிய பொருள்களை யெல்லாம் தந்துதவியதென்பது ஆச்சரியமாகவே இருக்கிறது. இப்பசுவை விசுவாமித்திரன் கேட்டபோது வசிஷ்டன் கொடுக்கமறுத்து விடுகிறான். ஆனால் கம்பரோ இங்கு மாறுபடுகிறார். அவர் கூறுவது,

> "வற்சலையுடையன் யானோ
> வழங்கலென் வருவதாகிற்
> கொற்கன் வேலுழவநீயே
> கொண்டகல்கென்று கூற"

என்பது

அதாவது 'நான் கொடுப்பதென்ன? அது வருவதானல் நீயே கொண்டுபோ' என்று முனிவன் கூறினன் என்பர்.

காமதேனு அரசனிடமிருந்து தப்பி ஓடி வந்து முனிவனையடைந்தவிவை அவன அஞ்சியவன்போலக் கூறுகிறான். உடனே பசு முனிவனுடைய விடைபெற்றுப் பல வீரரை உண்டாக்கிற்று என்பது வால்மீகி வரலாறு. கம்பரோ முனிவன் ஆணைபெறுமலே பசு சண்டை தொடங்கிற்று என்று கூறுகிறார். பசு முக்கிற்று. உடனே அதன் மடியிலிருந்து சிலரும், யோனியிலிருந்து சிலரும், குதத்திலிருந்து சிலரும், மயிர்க்கால்களிலிருந்து சிலரும் தோன்றினர் என்று வால்மீகி கூறுகிறார். இது நான் முகன் முகத்திலிருந்து பிராமணரும், நெஞ்சிலிருந்து க்ஷத்திரியரும், இடுப்பிலிருந்து வைசியரும், காலிலிருந்து சூத்திரரும் தோன்றினர் என்று கூறும் வரலாறு போலவே மிகவும் ஆபாசமாக இருக்கிறது. ஆண்மகனாகிய நான்முகன் பிள்ளை பெற்றான் என்பதே இயல்புக்குமாறு. அதிலும் முகத்திலிருந்து சிலரையும் தோற்றுவித்தானென்பது அறிவுக்கு அடாததாகும். கோதம முனிவன் சாபத்தால் இந்திரனுக்கு உடலெங்கும் பெண் குறிகள் அமைந்தன என்று கம்பர் கூறுகிறார் எனப் போன கட்டுரையில் ஆராய்ந்தோம். இந்த நான்முகனுக்கு யார் சாபத்தால் இவ்வாறு நெற்றியிலும், மார்பிலும், இடுப்பிலும், காலிலும் பெறும் பெண்குறிகள் அமைந்தனவோ தெரியவில்லை. கரு எவ்விடம் தங்கிற்றோ? வெவ்வேறு விதமான அக் கருக்களை உண்டு பண்ணினவர்கள்தான் யாவரோ! இவ்வளவு ஆபாசமான கதையைக் கட்டிவிட்டுளர் ஆரியப்பார்ப்பனர். இச்சாதி வரலாற்றை வேறோர் சமயம் விரிவாக ஆராய்வோம் இவ்விழிந்த வரலாறு போலவே உளது இக்காமதேனுவின் மடி, யோனி, முதலிய உறுப்புகளிலிருந்து வெவ்வேறு வகையினர் தோன்றினர் என்பது. மடியிலிருந்து சிலரும், யோனியிலிருந்து சிலரும், குதத் (மலவாயில்) திலிருந்து சிலரும் தோன்றினர் என மொழி பெயர்ப்பாளரான அநந்தாச்சாரியாரும் மன்மத நாத தத்தரும் தெளிவாக எழுதினும், நடேச சாஸ்திரியார் யோனி, குதம் முதலிய உறுப்புக்களை ஆபாசமானவையென மறைத்து மடியிலிருந்து சிலரும் அதன்உடம்பிலிருந்து சிலரும் தோன்றினரெனப் பொதுப்படக்கூறினர். கம்பரோ உறுப்புக்கள் இன்னின்னவைகளிலிருந்து இன்னின்னர் தோன்றினரென்னுமல் பொது

இதன் தொடர்ச்சி 16 ம் பக்கம் பார்க்க.

# சந்தான கிருஷ்ணன் அல்லது அய்யங்காரின் கொள்ளை

ராஜமன்னார்குடி என்கிற ஊரில் ராஜகோபால சுவாமி கோவிலில் சந்தானகிருஷ்ணன் என்று ஒரு விக்கிரகத்தை வைத்துக்கொண்டு காசு பறிக்கிறார்கள் என்று கேள்விப்பட்டு நான் பார்க்கப்போனேன். அங்கே நடந்த அதிசயத்தைக் கேளுங்கள்:—

தேசாந்திரியாக இரண்டு கோடீட்டி செட்டியார்கள் தங்களுடைய பெண்டு பிள்ளைகளை அழைத்துக்கொண்டு ராஜகோபாலனை சேவித்து, பட்டாச்சார் மூலம் சந்தானகிருஷ்ணன் திருவிளையாட்டை கேள்விப்பட்டு அவர்கள் அடைந்த சந்தோஷபக்தியை பார்க்க எனக்கு ஆச்சரியமாக இருந்தது. அவர்களை அய்யங்கார் அழைத்து 'ஓய் செட்டியாரே! இப்படிவாரும், இதோ பாரும், இவர்தான் ஸ்ரீ சந்தான கிருஷ்ணன். இதற்காக தலை ஒன்றுக்கு ஒரு ரூபாய் தெட்சணை கொடுத்துவிட்டு இந்த மகானுபாவனை மடியில் வைத்து ஆலிங்கனம் செய்துவிட்டால் அடுத்த வருஷத்திற்குள் சுவர்ண விக்கிரகம் போல் ஆண் குழந்தையை அடைவீர்கள்; எடுங்கள் ஒரு ரூபாய்' என்று திருவாய்மலர்ந்தருளினார். இதைக்கேட்ட செட்டியார் என்ன செய்வார் பாபம்! வாயைப்பொத்திக்கொண்டு நின்றார். இதைப்பார்த்த செட்டியாரின் பாரியாள் ஏதோ தெலுங்கில் சில வார்த்தைகள் பேசினார்கள். உடனே செட்டியார் மயக்கி தன்னுடைய பணப்பையை எடுத்து அய்யங்கார் தட்டில் ஒரு ரூபாய் வைத்தார். அய்யங்கார் பல்லை இளித்துக்கொண்டு அச்செப்பு சாமியை எடுத்து செட்டியாரிடத்தில் நீட்டினார். செட்டியார் அண்டையில் நின்ற அம்மாளைப் பார்த்து 'வாங்கிக்கொள்' என்றார். அய்யங்கார் உரத்த சத்தத்துடன் 'நீர் வாங்குங்காணும் செட்டியாரே' என்று கத்தினார். உடனே செட்டியார் விக்கிரகத்தை வாங்கி வைத்துக்கொண்டு மிரள மிரள விழித்தார். அய்யங்கார் அச்செப்பு சாமியை வெடுக்கென்று பிடுங்கி இருந்த இடத்தில் வைத்துவிட்டு 'இன்னும் ஒரு ரூபாய் எங்கே' என்று தட்டை நீட்டினார். செட்டியார் பையை எடுக்கவில்லை. இதைப்பார்த்த அய்யங்கார் 'புருஷன் பெண்ஜாதி இருவரும் தூக்கினால்தான் பலன்கிடைக்கும் நீர்மாத்திரம் தூக்கி பிரயோஜனமில்லை' என்று சொல்ல செட்டியார் மறுபடி ஒருரூபாய் எடுத்து கொடுத்தார். அய்யங்கார் சாமியை தூக்கி அச்சகோதரியிடம் கொடுத்து வாங்கிவைத்துவிட்டு அவருடன் வந்த மற்றொரு செட்டியாரைப் பார்த்து 'ஓய் செட்டியாரே நீர் எடும் ஒரு ரூபாய்' என்றார். அச்செட்டியார் 'எனக்கு குழந்தைகள் இருக்கிறது இனிவேண்டாம்' என்றார். அய்யங்கார் 'ஓய் செட்டியாரே! குழந்தை வேண்டாமென்று சொல்லுவாருண்டா! பத்துப் பிள்ளைகள் பிறந்தால் பத்துகோடி ரூபாய் சம்பாதித்திடுங்காணும்; நீர் மெட்ராஸிலிருந்து இவ்வளவு தூரம் வந்து இந்த இரண்டு ரூபாயை முடிந்துகொண்டு போய்விட்டால் உமது தரித்திரம் நீங்கி விடுமோ? எடுங்காணும் ஒரு ரூபாய்' என்று சடுகடுப்பாக பேசினார். பார்த்தார் செட்டியார். எங்கே பாபம் வந்துவிடுமோ என்று பயந்து மற்றொரு செட்டியாரைப் பார்த்தார். முதலில் நஷ்டப்பட்ட செட்டியார் சும்மா இருப்பாரா? சந்தோஷத்துடன் 'நானே இரண்டு ரூபாய் கொடுத்து இருக்கும்போது நீர் சுவாமி விஷயத்தில் ஆயிரம் ரூபாய் செலவு செய்யலாம்' என்று சிண்டுகட்டி விட்டார். குழந்தைகளுடைய செட்டியார் மணிபாகரை எடுத்து சில்லரை இல்லை என்று ஐந்து ரூபாய்நோட்டை நீட்டினார். அய்யங்கார் தன்னிடத்தில் சில்லரை இருக்கிறதென்று நோட்டை பிடுங்கிக்கொண்டு அச்சாமியை தூக்கி இருவர் கையிலும் கொடுத்து வாங்கி அவர்களின் எட்டு வயதுள்ள பெண் குழந்தையிடமும் கொடுத்துவிட்டு பல்லைக்காண்பித்து 'இதோ நிற்கிறவர் யார்' என்று என்னைக்காட்டினார். 'நான் தஞ்சாவூர் ஜில்லா, பணம் இல்லாமல் வந்துவிட்டேன், நாளைதினம் பணத்துடன் வருகிறேன்' என்று வணக்கமாய்ச் சொன்னேன். உடனே அய்யங்கார் மனமிறங்கி அச்சாமியைத் தூக்கி என் கையில் கொடுக்க வந்தார். நான 'வேண்டாம் வேண்டாம் இன்னும் ஸ்நானம் செய்யவில்லை' என்றேன். அய்யங்கார் 'சும்மா பிடியுங்காணும் பாதகமில்லை' என்றார். நான் எட்டி வந்துவிட்டேன். அய்யங்கார் 'அதிஷ்டம் வேண்டாமா' என்று சொல்லிவிட்டு செட்டியாரிடம் இரண்டு ரூபாயை கொடுத்தார். செட்டியார் 'இன்னும் ஒருரூபாய் எங்கே' என்றார் அதற்கு அய்யங்கார் 'உமக்கு, இந்த அம்மாளுக்கு, இந்த பெண்ணுக்கு ஆக மூன்று ரூபாய்போக பாக்கி இரண்டுரூபாய் இருக்கே தெரியல்லையோங்காணும்' என்றார். செட்டியார் 'இப்பெண்ணுக்கு கூடவா ஒரு ரூபாய்? இப்பெண்ணுக்கு கல்யாணமாகவில்லை; தவிர புருஷனும் பெண்ஜாதியும் சேர்ந்து விக்கிரகத்தை வாங்கினால்தான் பலன் உண்டு என்று முன்னே சொன்னீரே' என்றார் அய்யங்கார் 'கல்யாணம் ஆகாமல் போய்விடுமோ கூடிய சீக்கிரம் கல்யாணம் ஆகிவிடும்' என்று சொல்லி வட்டிலில் இருந்த தீர்த்தத்தை எடுத்து ஆளுக்கு மூன்று கரண்டி கொடுத்துவிட்டு 'நாராயணா! கோவிந்தா!' என்று ராகம் பாடிக்கொண்டு போய்விட்டார். செட்டியார் முகத்தை சுளித்துக்கொண்டு 'கெடக்கிறது எல்லோரும் வாருங்கள்' என்று சொல்லிக்கொண்டு வெளியே வந்து விட்டோம். இது நிற்க நான் என் ஜாகாவிற்கு வந்து என் குடும்பத்தாரிடம் இச்சம்பவத்தைச் சொன்னேன், என் தாயார் என்னைக் கோபித்து 'பரிகாசமா பண்ணுதேடா; நான் அந்த சந்தான கிருஷ்ணனை தூக்கித்தான் நீ, உன் அண்ணன், உன் தம்பி பிறந்தீர்கள், ஆனதால் நீயும் உன் பெண்டாட்டியும் இரண்டு ரூபாய் வைத்து கிருஷ்ணனைத் தூக்கி மடியில் வைத்து விட்டு வரலாம் வாடா' என்றழைத்தார்கள் எனக்கு கோபம் வந்துவிட்டது. 'நான் அச்செப்புச் சாமிக்கா பிறந்தேன்' என்றேன். என் தாயார் ஆமாமென்று நீட்டினார்கள். 'நான் அந்த செப்புச் சாமிக்குப் பிறந்திருந்தால் என் அதற்குள்ள குணமெல்லாம் எனக்கிருக்குமல்லவா? உன் மருமகளைக் கூப்பிட்டு என்னைத்தூக்கி மடியில் வைத்துக் கொள்ளச் செய்தால் என்னைப்போல் கன்னங் கரேலென்று பிள்ளை பிறக்கும்' என்று நான் சொன்னேன். என் தாயார் குலுங்க சிரித்து என் அண்ணனைப் பார்த்து '[illegible] கல்வி பிள்ளைகளா' என்றார்கள். என் அண்ணன் சில சமாதானம் சொல்லி 'நாஸ்திகமாயிருக்கிறாயே! கெடக்குது போய் சாதம்போடச் சொல்' என்று போய்விட்டார்.

உண்மையான தெய்வ பக்தன்.

## நிருப நேயர்களுக்கு ஓர் வேண்டுகோள்.

'குடி அரசு'ப் பத்திரிகையில் பிரசுரிக்கும்படி நிருபர் அனுப்பும் கட்டுரைகளும் செய்திகளும் ஒவ்வொரு நாளும் வந்து குவிந்து கொண்டிருக்கின்றன. 'குடி அரசு' ஒரு வாரப்பத்திரிகையென்றும் அதில் குறிப்பிட்ட கொள்கைப் பிரசார சம்மந்தமான வியாசங்கள் தவிர மற்றவை பிரசுரிக்க இடமில்லாதது என்றும் பலதடவை எழுதி வந்திருக்கின்றோம் அப்படி இருந்தும் பலர் ஊர்ச் செய்திகளையும் வேடிக்கை விஷயங்களையும் எழுதி வருவது விந்தையாக இருக்கின்றது.

கண்டிப்பாக இனி அம்மாதிரி யாரும் அனுப்பக்கூடாது என்று கேட்டுக் கொள்வதுடன் அவைகளை கண்டிப்பாய் பிரசுரிக்க முடியாதென்றும வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம் முக்கியமான விஷயமாயிருந்தால் 'திராவிடன்' பத்திரிகைக்கு அனுப்பிவைத்தால் பிரசுரிப்பதைப் பற்றி யோசிக்க முடியும். தவிர பிரசுரிக்க முடியாத வியாசங்களை திருப்பி அனுப்பவோ காரணங்கள் காட்டவோ முடியாது என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

மானேஜர், "குடி அரசு"

## சந்தா நேயர்களுக்கு ஓர் வேண்டுகோள்.

சந்தாதாரர்கள் எழுதும் ஆவலாதிகளில் தங்கள் சந்தா நெம்பரைக் குறித்து எழுதக் கோருகிறோம். சிலர் 2041 என்னும் பத்திரிகையின் பதிவு நெம்பரை சந்தா நம்பர் என்று எண்ணி அந்நெம்பரையே குறித்து எழுதுகிறார்கள். சந்தா நம்பர் என்பது ஒவ்வொரு விலாசத்துடன் காணப்படும். நம்பரே யாதலால் அந்நம்பரைக் குறித்து எழுதப்படாத எவ்வித ஆவலாதியும் கவனிக்கப்படமாட்டாது.

சந்தாதாரர்கள் தங்கள் சந்தா காலாவதியடையவதற்கு முன் அடுத்த வருஷத்திற்குப் பத்திரிகை அனுப்ப வேண்டாமென்று எழுதாதவரை அடுத்த வருஷத்திற்கும பத்திரிகை அனுப்பும்படி கேட்டுக் கொண்டதாகவே வைத்துக் கொண்டு பத்திரிகை வி. பி. யில அனுப்பப்படும். ஆதலால் சந்தா நேயர்களின் சம்மதத்தின் பேரிலேயே அனுப்பியதாக ஏற்பட்ட வி. பி. யை கௌரவிக்க வேணுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம். மேனேஜர், "குடி அரசு"

## இன்பம் பெற வழி.

### கட்டுப்பாட்டை உடைக்கவேண்டும் குருட்டு நம்பிக்கை கூடாது

பிரம்மஞான சங்கத்தைச்சேர்ந்த, லோக குரு என்று சொல்லப்பட்ட, ஸ்ரீமான் ஜே, கிருஷ்ணமூர்த்தி அவர்கள் எப்ரல் 12 லண்டனில் "நண்பர் வீடு" என்னுமிடத்தில் செய்த பிரசங்கத்தின் சாராம்சம் பின் வருமாறு:— "நான் பேசுவது யாவற்றையும்நீங்கள் மூட பக்தியுடன் நம்ப வேண்டு மென்று நான் கூறவில்லை. அசட்டு நம்பிக்கையினால் அதை அலட்சியம் செய்து விடவும் கூடாது. நான் சொல்வதை நன்கு பரிசீலனை செய்து அதன் பிரகாரம் நடந்து கொள்ள வேண்டும் என்றே நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஒரு மனிதனுக்கு சந்தோஷம் ஏற்பட வேண்டுமானால், அவன் பல பழைய சம்பிரதாயங்களாலும் இதர பாடங்களினாலும் கட்டுப்பட்டிருக்கக்கூடாது. உலகம் ஒப்புக் கொண்டுள்ள விஷயங்களை மீறாது பின் பற்ற வேண்டுமென்ற நம்பிக்கை கூடாது. அவற்றை மீறி நடக்க முயற்சிக்கவேண்டும். இவ்விதம் மீறாமலிருந்தால் உலக வாழ்க்கையின் நோக்கங்களை அறிய முடியாது. ஆடம்பரமற்ற வாழ்வே உயர்வானது. ஆடம்பரமற்றிருக்க வேண்டுமென்றால் உலகத்தைத் துறந்து சாம்பலைப் பூசிக் கொண்டு மூட்டாட்டையுடுத்திருப்பதாகாது. மதம், கொள்கை, தத்துவம் என்பவெல்லாம் அனாவசியம்.

பந்தத்திலிருந்து நான் விடுபட்டிருப்பதனால் சந்தோஷமாக விருக்கிறேன்.

---

## எழுத்து மாறிய வார்த்தைகளின் பிரைஸ் அறிவிப்பு.

"குடி அரசு" பத்திரிகையில் நாம் முன் வெளியிட்டிருந்த எழுத்து மாறியவார்த்தைகளின் விடுவிப்பு போட்டிக்கு பல ஊர்களிலிருந்து பல அன்பர்களும் பல திருச் செல்விகளுமாக அநேக விடுவிப்புகள் அனுப்பியிருந்தார்கள். அவற்றில் சரியான பலவிடுவிப்புகளை மட்டும் 1-4-28 தேதி மாலை 4 மணிக்கு "சிவாஜி" காரியாலயத்தில் கூடியிருந்த பல பெரியார்கள் முன்னிலையில் குலுக்கிப் போட்டதில், கொழும்பு, தென் திருப்பேரையிலுள்ள சகோதரி தங்கராஜம் அம்மாள் அவர்கள் பேருக்கு பிரைஸ்விழுந்தபடியால் நாம் முன் தெரிவித்தபடி "இந்து கோவில்களின் பரிதாப நிலைமை" என்ற புஸ்தகம் 25 ம் அவர்களுக்கு அனுப்பிவைப்பதுடன் மற்ற எல்லாருக்கும் 2 புத்தகங்கள் இனாமாக அனுப்பி வைக்கிறோமென்பதை மகிழ்வுடன் தெரியப்படுத்துகிறோம்.

இராவணதாசன்,
சிவாஜி காரியாலயம் திரிச்சிராபள்ளி.

---

## சித்தவைத்தியர் ஜாபிதா.

சித்த வைத்தியர்களை ரிஜிஸ்டர் செய்வதற்கும் மகாநாடு கூட்டுவதற்கும் சித்த வைத்தியத்துக்குத் தகுந்த ஆதரவு அளிக்க வேண்டுமென்று ராஜாங்கத்தாருக்கு விண்ணப்பம் செய்து கொள்ளவும், சித்தவைத்திய சாலைகளும் கலாசாலைகளும் ஏற்படுத்தவும் சித்த வைத்திய புஸ்தகங்கள் எழுதிவெளியிடவும் இன்னும் பற்பல விதங்களில் சித்த வைத்தியத்தை நன்னிலைமைக்குக்கொண்டுவரவும் ஏற்பாடுகள் செய்ய வேண்டியிருக்கிறபடியால் இதற்கு ஆதாரமாக சித்த வைத்தியர்கள் தங்களுடைய பெயரையும் முழு தபால் விலாசத்தையும் எழுதி பின் வரும் எமது விலாசத்துக்கு அனுப்பினால் அவைகளெல்லாம் திரட்டி ஒரு சிறு புத்தகமாக அச்சிட்டு வெளியிட யோசித்திருக்கிறோம். இதைக் கண்ணுறும் சித்தவைத்தியர்கள் தங்கள் பெயரும் விலாசமும் தெளிவாய் எழுதி அனுப்பும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

எச். தேவதாஸ் பி. ஏ. எல். டி.
இந்தியன் மெடிகல் அசோசியேஷன்,
தாசர் தின்னனூர் மதராஸ்.

---

## ஆத்தங்குடி முத்துப்பட்டினம் நாவுக்கரசு நற்சபை

இச்சபையின் இரண்டாவதாண்டு நிறைவு விழா நாளது சித்திரைத் திங்கள் 13, 14ம் நாட்களில் திருநெல்வேலி உயர் திரு கா சுப்பிரமணிய பிள்ளை M.A M.L. அவர்கள் தலைமையில் நடைபெறும். பல அறிஞர்கள் உரை பகர்வார்கள். அவ்வமயம் அன்பர்கள் வரவு எதிர்பார்க்கப் பெறுகிறது என காரியதரிசி அறிவிக்கிறார்.

## சுயமரியாதைவீரர் சுற்றுப் பிரயாணம்.

காரைக்குடி சுயமரியாதை வீரர் திருவாளர் அரு. சோமசுந்தரஞ் செட்டியார் அவர்கள் பர்மா நாட்டிற்கு சுற்றுப்பிரயாணம் செய்யச் சென்றிருக்கிறார் என அறிகிறோம்.

## புரோகிதம் ஒழித்த திதி

சாக்கோட்டையில் ராஜபாளையத் தெரு ஸ்ரீமான் ராமுமாணி சுத்தியார் தம் தாயார் திதியை புரோகிதம் ஒழித்து நடத்தினர்.

கே. கணபதி நாயக்கர்.

## போரா இந்து மகாஜன சங்கம்.

### இரண்டாவது வருட நிறைவு விழா.

1928 வருஷம் ஏப்ரில் மாதம் 7 ம் 8 ம் தேதிகளில் தைப்பிங் மெயின் ரோட்டிலுள்ள போரா இந்திய சங்கத்தில் உயர் திருவாளர் வே. நடேசம்பிள்ளைஜே பி. அவர்களின் தலைமையில் போரா இந்து மகாஜனசங்கமகாநாடுநடைபெற்றது. ஸ்ரீமான்கள் ஸ்ரீ சிவத்தியாகாநந்த மகரிஷி, ஸ்ரீமான் எம். வி. கே. தங்க மீரான் சாகிப் ஏ. எம். பி. அமிர்த களஞ்சியம், மா நாராயண பிள்ளை, வீ. சுப்ரமண்ய சர்மா செ. ரா. ஐயாருமுதலியவர்கள் அறிய சொற்பொழிவு நிகழ்த்தினர்கள்.

சி. சுப்பையா, காரியதரிசி,

## அருப்புக்கோட்டை

### சுகாதார - ார சுயமரியாதை கேஸ்.

இக்கேஸ் 2—4—28 ல் ஸ்தல சப்-மாஜிஸ்திரேட் கோர்ட்டில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. எதிரிகளாகிய 11 பார்ப்பனரல்லாத வாலிபர்களின் சார்பாக மதுரை வக்கீல்கள் திருமிகு முத்து திருமேனியாபிள்ளையவர்களும், திரு நாராயண பிள்ளையவர்களும் ஆஜராகி இருந்தார்கள். (பிரசிகியூஷன்) தரப்பில் சர்கிள் இன்ஸ்பெக்டரும் சப்-இன்ஸ்பெக்டரும் ஆஜராகி இருந்தார்கள். பிரசிகியூஷன் முதல் சாக்ஷியாகிய ஹெல்த் இன்ஸ்பெக்டர் விசாரிக்கப்பட்டு 2-வது சாக்ஷியாகிய பியூனை விசாரிக்க இரவு 8 மணி ஆகிவிட்டபடியால் குறுக்கு விசாரணைக்காகவும் மற்ற சாக்ஷிகளை விசாரிப்பதற்கும் வாய்தா போடப்பட்டிருக்கிறது. கேசின் விபரமும் விசாரணை கன் விபரமும் பின்னால் வரும். ஒரு நிருபர்.

## ஓமலூர் வேலாசாமி செட்டியார் பாடசாலை மாணவர் தமிழ்ச்சங்க ஆண்டு விழா.

மேற்படி சங்கத்தின் எட்டாம் ஆண்டு விழா 31-3-28 ந் தேதி சனிக்கிழமை மாலையில் ஓமலூர் போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் திருவாளர் துடிசைக்கிழார் அ. சிதம்பரனார் அவர்கள் அவைத்தலைமையில்கொண்டாடப்பட்டது. "சங்கம்" "தம்பிரானும் நந்தாய் மொழியும்" "வறுமையிற்செம்மை" "திருக்குறள் மகிமை" முதலியவைகளைப் பற்றி பல அறிஞர்கள் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்,

சங்கத்தலைவர்.


## தூத்துக்குடி சி. வ. கலாசாலை ஆசிரியர்கள் சங்க ஆண்டு விழா.

இவ்விழா நாளது ஏப்ரல் மாதம் 23 ந் தேதி திங்கட்கிழமை கோவிற்புரி வழக்கறிஞர் திருவாளர். வ. உ சிதம்பரம் பிள்ளை அவர்கள் அவைத் தலைமையின் கீழ் நடைபெறும் அதுசமயம் மணம் பூண்டி திரு ம. ரா. குமாரசாமிப்பிள்ளை முதலியவர்களால் அரிய பெரிய சொற்பொழிவுகள் நடைபெறும் அன்பர்களனைவரும் வந்திருந்துசெவிமடுத்தின்புறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## கரந்தை தமிழ்ச்சங்கம் தஞ்சை,

திருநாவுக்கரசு சுவாமிகளாகிய அப்பாடிகளின் திருநாள். விபவ ஆண்டு சித்திரைத் திங்கள் 4-ம நாள் (16—4—28) ஆகிய திங்கட்கிழமையன்று திருவாளர் ம. உலகநாத பிள்ளையவர்கள் உதவிய அப்பாடிகள் திருவுருவப் படத்தைச் சங்கத்தில் நிலைநாட்டுதல், எளியவர்கட்கு உண்டியளித்தல், பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாரவர்கள் தலைமையில் பண்டிதர் சிலர் அப்பாடிகள் என்னும் அரிய விரிவுரையிபற்றுதல் முதலியவை நடைபெறும்.

த வே. உமாமகேசுவரன்,
சங்கத் தலைவர்.



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.


# குடி அரசு

ஈரோடு விபவ-ஹு சித்திரை-மீ 3-உ


## பார்ப்பனீய போக்கிரித்தனம்.

சென்ற ஒரு மாத காலமாக பார்ப்பனப் பத்திரிகைகளும அவர்கள் வாலைப் பிடித்து வயிறுவளர்க்கும்சில பார்ப்பனரல்லாதார்பத்திரிகைகளும் ஒரே அடியாய் சற்றும் அறிவு, மானம், வெட்கம் இன்றி பார்ப்பனரல்லாதார் கக்ஷியையும் மந்திரிகளையும் வசை பாடும் வேலையிலேயே ஈடுபட்டிருக்கின்றன. அதற் கேற்றாப்போல் வெளியிடங்களில் உள்ள பார்ப்பனர்களும் அவர்களிடம் கூலி வாங்கி வயிறு வளர்க்கும் பார்ப்பனரல்லாத வயிற்றுப் பிழைப்பு தேச பக்தர்களும் இதையே பின்பற்றிக்கொண்டு ஆங்காங்கு கூட்டம போட்டது போலவும், மந்திரிகளையும் பார்ப்பனரல்லாதார் கக்ஷியையும் கண்டித்து தீர்மானங்கள் செய்தது போலவும், மந்திரிகளை ராஜிநாமா செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்வது போலவும் பலவித பித்தலாட்டத் தீர்மானங்களைச் செய்ததாக பத்திரிகைகளில் எழுதி விடுகின்றார்கள். "மந்திரிகளின் துரோகம்" என்றும் "தேசத் துரோகம்" என்றும் மற்ற பல இழிவான வார்த்தைகளை போக்கிரித்தனமாக எழுதி பாமர மக்களை ஏமாற்றப் பார்க்கின்றார்கள்.

எனவே இவர்கள் வையும் இந்த மந்திரிகள் யார் என்றும், எங்கிருந்து வந்தவர்கள் என்றும், எந்த கக்ஷியைச் சேர்ந்தவர்கள் என்றும் சற்று யோசிப்போம்

ஸ்ரீமான்கள் சுப்பராயன், ரங்கநாத முதலியார், ஆரோக்கியசாமி முதலியார் ஆகிய மூவர்களையும் சுயராஜ்ஜியக் கக்ஷியின உதவியைக் கொண்டு ஸ்ரீமான்கள் ஸி. ராஜகோபாலாச்சாரியார், ஸி.விஜயராகவாச்சாரியார், சர். ஸி. பி. ராமசாமி அய்யர், மற்றும பல பார்ப்பனர்கள், ஆடையாறு கோஷ்டியார் ஆகியவர்கள் ஒன்று சேர்ந்து சிருஷ்டித்தார்களா இல்லையா என்று கேட்கின்றோம.

இந்தப்படி பார்ப்பன கோஷ்டியார் மந்திரிகளை சிருஷ்டித்ததற்காக மேல்கண்ட மந்திரிகளிடம் பார்ப்பனரல்லாதார் விஷயத்தில் கவலையுள்ள பார்ப்பன ரல்லாதாருக்கு உத்தியோகங்களும் ஸ்தல ஸ்தாபன நியமனங்களும் கொடுக்கக் கூடாது என்றும் பார்ப்பனரல்லாதார் கக்ஷியை ஒழித்துவிட வேண்டும் என்றும் வாக்குறுதி வாங்கிக்கொண்டு அந்த நிபந்தனையின் பேரில் ஆதரிப்பதாக ஒப்பந்தம் செய்து கொண்டது உண்டா இல்லையா என்று கேட்கின்றோம்.

அந்தப்படியே மூன்று மந்திரிகளையும் தங்கள் கையில் உள்ள களிமண் உருண்டைகள் போல் நினைத்து தங்களுக்கு வேண்டியபடியெல்லாம் பொம்மைகள் செய்து கொண்டார்களா இல்லையா என்று கேட்கின்றோம.

மற்றும் இம் மந்திரிகள் மூலம் பார்ப்பனர்கள் தங்களுக்கு வேண்டிய மாதிரி பெல்லாம் ஸ்தல ஸ்தாபனங்களில் புரட்டும் பித்தலாட்டங்களும் செய்து கொண்டு பார்ப்பனரல்லாதார் இயக்கத்திற்கும் நன்மைக்கும் தங்களால் கூடிய உபத்திரவமெல்லாம் செய்து வந்தார்களா இல்லையா என்று கேட்கின்றோம்.

சட்ட சபை தேர்தல் ஆனவுடன் ஸ்ரீமான் சத்தியமூர்த்தியை மந்திரி வேலை ஒப்புக் கொள்ளும் படிக்கும் கவர்னரை ஸ்ரீமான் சத்தியமூர்த்திக்கு மந்திரி வேலை கொடுக்கும் படிக்கும் கேட்டுக்கொள்வதாக ஸ்ரீமான் வரதராஜுலு காங்கிரஸ் வாதி என்கின்ற முறையில் தந்தி கொடுத்தாரா இல்லையா என்று கேட்கின்றோம்

மந்திரிகள் நியமனமான பிறகு மந்திரிக்கு காங்கிரஸ் கட்சித் தலைவர் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி ஒரு விருந்தளித்து தான் மந்திரிக்கு வேண்டியவர் என்று காட்டிக் கொண்டு தன்னை விளம்பரப்படுத்திக்கொண்டாரா இல்லையா என்று கேட்கின்றோம்.

ஸ்ரீமான் சத்தியமூர்த்தி இந்த விளம்பரத்தைவைத்துக்கொண்டு ஸ்தல ஸ்தாபன நியமனங்களுக்கும், உத்தியோகங்களுக்கும் மற்றும் மந்திரிகளால் ஆகவேண்டியகாரியங்களுக்கும் பீஸ் வாங்கிக்கொண்டு சிபார்சு செய்து பதினாயிரக்கணக்காக பணம் சம்பாதித்தாரா இல்லையா என்று கேட்கின்றோம்.

இம்மாதிரியெல்லாம் செய்யலாமா என்று கனம் ஸ்ரீ முத்தையா முதலியார் காங்கிரஸ் முறையில் கேட்டதற்கு 'ஆம் அப்படித்தான் செய்வோம், பார்ப்பனரல்லாதார் கட்சியை எப்படியாவது ஒழிப்பது தான் எங்கள் வேலை' என்றும், அதற்காக 'இதுவும் செய்வோம் இனியும் என்னமுஞ் செய்வோம்' என்றும் சொன்னார்களா இல்லையா வென்று கேட்கின்றோம்.

இந்த மேல்கண்ட மந்திரிகள் சுற்றுப் பிரயாணம் செய்த காலத்தில் அவர்களுக்கு செல்லுமிடங்களிலெல்லாம் பார்ப்பனர்கள் பூரணகும்பங்கள் எடுப்பது, ஆடம்பர மரியாதை செய்வது முதலிய பல காரியங்கள் நடந்ததா இல்லையா என்று கேட்கின்றோம்.

பார்ப்பனரல்லாத மந்திரிகளை பார்ப்பனர்கள் தங்கள் வீட்டிற்குள் இறக்கி வைத்துக் கொண்டு வேறொருவர் பார்க்காதபடி மூடு மந்திரங்கள் செய்தார்களா இல்லையா என்று கேட்கின்றோம்.

கவர்னர், ஸ்ரீமான்கள் அரங்கநாதம், ஆரோக்கியசாமி ஆகிய முதலியார்மார்களை வெளியில் பிடித்து தள்ளிவிட்டதற்காக இந்த பார்ப்பனர்களும் அவர்கள் கூலியாகிய ஸ்ரீமான் வரதராஜுலுவும் இந்த மந்திரிகளை கவர்னர் வெளியில் போகச்சொன்னது தப்பு என்றும் மறுபடியும் அவர்களையே மந்திரியாக நியமிக்கவேண்டும் என்றும் தங்கள் பத்திரிகையில் எழுதினார்களா இல்லையா என்று கேட்கின்றோம்.

மேற்படி முதலியார் மந்திரிகள் விலக்கப் பட்டதற்கு ஒப்பாரிவைத்து அழுதார்களா இல்லையா என்று கேட்கின்றோம். இப்பொழுது இருக்கும் மந்திரிகளை பாராட்டுவதற்காக காங்கிரஸ் பார்ப்பனர்கள் அதாவது ஸ்ரீமான்கள் ஏ. ரங்கசாமி, ஸி. வி. வெங்கட்டரமணன் முதலிய அய்யங்கார்களும் பல அய்யர் சாஸ்திரி பார்ப்பனர்களும், காஸ்மா பாலிட்டன் கிளப்பு மெத்தைக்கு போய் பாராட்டி வந்தார்களா இல்லையா? என்று கேட்கின்றோம்.

இப்பொழுதும், மந்திரிகள் தங்களுக்கும் பகுதி நாமிநேஷனும் உத்தியோகமும் கொடுப்பதாயிருந்தால் தாங்கள் இந்தக் கூப்பாடு போடாமல் வாயை மூடிக்கொண்டிருக்கிறோமென்று சொல்லி தூது அனுப்பிக்கொண்டிருக்கிறார்களா இல்லையா என்று கேட்கின்றோம். இந்த ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாச்சாரியார், அதாவது புதிய மந்திரிகள் மந்திரிவேலை ஒப்புக்கொண்டது அரசியல் நாணயக்குறைவு என்று இப்போது சொல்லுபவர் இனியும் முதல் மந்திரியிடம் தனது வகுப்புநன்மைக்கு சமாசாரப் போக்குவரத்தும் சிபார்சு போக்கு வரத்தும் வைத்துக் கொண்டிருக்கிறாரா இல்லையா என்று கேட்கின்றோம். மற்றும் பல பார்ப்பனர்களும் காங்கிரஸ் சுயராஜ்யக் கட்சி வீரர் என்பவர்களும் நியமனம், உத்தியோகம் ஆகியவைகளுக்கு இன்னமும் மந்திரிகளின் வீட்டைச் சுற்றிக்கொண்டு பல்லை காட்டிக்கொண்டும் திரிகிறார்களா இல்லையா என்று கேட்கின்றோம். ஆகவே இந்த பார்ப்பனர்களுக்கும் ஸ்ரீ வரதராஜுலுக்கும் மற்றும் காங்கிரஸ் சுயராஜ்யக்கட்சி என்று சொல்லிக்கொள்ளும் மானங்கெட்ட வீரர்களுக்கும இந்த மந்திரிகள் எந்த விதத்தில் தேசத்துரோகிகளாய் விட்டார்கள் என்று கேட்கின்றோம்,

தாங்கள் என்ன சொன்னாலும் என்ன எழுதினாலும் கேட்பதற்கும படிப்பதற்கும் நாட்டில தேவையான முட்டாள்கள் இருக்கின்றார்கள் என்கின்ற ஆணவமே யல்லாமல் இந்த மந்திரிகளை இவர்கள் குறைசொல்ல வேறு ஏதாவது உண்மையான காரணங்கள் உண்டு என்று யாராலாவது சொல்ல முடியுமா என்று கேட்கின்றோம். "எள்ளுதான் எண்ணெய்க்காக காய்கின்றது, இந்த எலிப்புழுக்கை எதற்காக காய்கின்றது" என்று ஒரு பழமொழி உண்டு. அதுபோல் பார்ப்பனர்கள்தான தங்கள் வகுப்புக்கு ஆதிக்கம போய்விடுமே, நியமனம போய்விடுமே, உத்தியோகம் போய்விடுமே என்று நினைத்துக் கொண்டு இந்த சமயம் ஊளையிட வேண்டியது அவர்களுக்கு அவசியமாகும். மற்றபடி தம்மை பார்ப்பனரல்லாதார் என்று சொல்

யிக்கொள்ளும் ஸ்ரீ வரதராஜுலுக்கு இதில் ஆமா சாமி போடவேண்டிய அவசியம் என்ன என்பதுதான் பொது ஜனங்கள் கண்டு பிடிக்க வேண்டிய ரகசியமாயிருக்கின்றது. மந்திரிகள் விஷயத்தில் ஸ்ரீ வரதராஜுலு கொள்கை என்ன? தேசிய விஷயத்தில் ஸ்ரீ வரதராஜுலு கொள்கை என்ன? தொழிலாளர் விஷயத்தில் ஸ்ரீ வரதராஜுலு கொள்கை என்ன? மத விஷயத்தில் ஸ்ரீ வரதராஜுலு கொள்கை என்ன? என்று இந்த உலகத்தில் யாராலாவது சொல்ல முடியுமா என்று கேட்கின்றோம். இம்மாதிரி தனக்கும் புத்தியில்லாமல் வேறொருவர் சொல்லுவதையும் கேட்காமல் உயிருடன் இருப்பதற்காகவே பார்ப்பனர்களின் வாலைப் பிடித்துக்கொண்டும் அவர்கள் சொல்லுவதற்கெல்லாம ஆமா சாமி போட்டுக்கொண்டும் காற்றடிக்கும் பக்கம் சாய்ந்துகொண்டும் பார்ப்பனரல்லாத சமூகத்தையே காட்டிக் கொடுத்துக்கொண்டும் இருப்பவர்களுக்கு மந்திரிகள் பேரில் ஆத்திரம் வருவதற்கு ஏதாவது அர்த்தமிருக்க முடியுமா என்று கேட்கின்றோம்.

தவிர கனம் ஸ்ரீமான் சேதுரத்னமய்யர் சுயேச்சைக் கட்சியைச் சேர்ந்தவர். மந்திரிகளுக்காகவே அக்கக்ஷி காங்கிரஸ் பார்ப்பனரால் உண்டாக்கப்பட்டது. இந்த கனம் ஸ்ரீமான் சேதுரத்னமையர் சுயராஜ்யக் கட்சியின் பேரால் அதாவது மந்திரி வேலை ஒப்புக் கொள்வதில்லை, மந்திரிகளை ஆதரிப்பதில்லை, என்கின்ற கொள்கையின் பேரால் சட்ட சபைக்கு நின்று எதிர்ப்பு இல்லாமல் வெற்றி பெற்றவர். அப்படிப்பட்டவர் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் மந்திரி வேலை ஒப்புக் கொள்ளும் கட்சிக்கு போய் விட்டாரே அந்தக் காலத்தில் இந்தப் பார்ப்பனர்களின் வாயும் கையும் என்ன செய்தன என்று கேட்கின்றோம். ஒரு பார்ப்பனராவது ஒரு பத்திரிகையாவது ஸ்ரீமான் "சேதுரத்னமைய்யர் கட்சி மாறி விட்டார்" என்று கூட சொல்ல வில்லையே; அதுவும் இல்லாமல் காங்கிரஸ் பார்ப்பனர்கள் தானே அவரை அந்தக் கட்சிக்கு அனுப்பினது. அப்பேர்ப்பட்ட ஸ்ரீமான் சேதுரத்னமய்யர் இப்போது கனம் சேதுரத்னமய்யரானவுடன் இந்தப் பார்ப்பனர்களுக்கும் அவர்களது கூலிகளுக்கும் ஏன் இவ்வளவு ஆத்திரம் வருகிறது என்று கேட்கின்றோம்.

தவிர ஸ்ரீமான் முத்தையா முதலியார் சட்ட சபை மெம்பர் ஆனவுடன் மந்திரிகளை ஆதரிப்பது காங்கிரஸ் கொள்கைக்கு விரோதம என்று தொண்டையைக் கிழித்துக் கொண்ட காலத்தில் ஒருவராவது அவருக்கு செவி சாய்க்காமலும் அவர் ஒரு காங்கிரஸ் கமிட்டி கூட்டத்தில் 'சுயராஜ்யக் கட்சியார் அயோக்கியத்தனம் செய்கிறார்கள், தேர்தல் வாக்குறுதிகளுக்கு விரோதமாய் திருட்டுத்தனமாய் மந்திரிகளை ஆதரிக்கிறார்கள்' என்று சொல்ல எழுந்தபோதெல்லாம அவரை தலையில் அடித்து உட்கார வைத்ததை ஒரு பார்ப்பனப் பத்திரிகையாவது அவர்கள் வால்களாவது கண்டிக்காமல் இருந்துவிட்டு அவர் திருட்டுத்தனமாய் வேறு ஒரு வரை ஆதரிக்காமல் நேரடியாய் தைரியமாய் ஒப்புக் கொண்டதற்கு மாத்திரம் இவ்வளவு ஆத்திரப்படுவதின் அர்த்தமென்ன என்று கேட்கின்றோம்.

முன்னால் தங்களாலேயே சிருஷ்டிக்கப்பட்டு தங்களாலேயே ஆதரிக்கப்பட்டு தங்களாலேயே பூரண குடிபம ஏற்கப்பட்டு வந்த டாக்டர் சுப்பராயனை இப்போது இவர்களுக்கு கசந்து போகக் காரணமென்ன என்பவைகளை நடுநிலையிலிருந்து யோசிக்கப்பார்த்தால் பார்ப்பனரல்லாதாட்சியை ஒழிக்க இந்த மந்திரிகள் இப்போது ஒப்புக்கொள்ளவில்லை என்கின்ற காரணம் தவிர வேறு ஏதாவது உண்டா என்று கேட்கின்றோம்.

ஆகவே பார்ப்பனர்களும் அவர்களது கூலிகளும் எதுவரையில் இம்மந்திரிகளை வைகிறார்களோ அது வரையில் இந்த மந்திரிகளை ஆதரிக்க வேண்டியதும் அவர்களை உற்சாகப்படுத்தி அவர்களிடமிருந்து பார்ப்பனரல்லாதார் நன்மைக்கு ஆன வேலை வாங்கிக் கொள்ள வேண்டியதும் ஒவ்வொரு அறிவுள்ள பார்ப்பனரல்லாதார் கடமை ஆகும் என்று தைரியமாய்ச் சொல்லுவோம். மற்றபடி பார்ப்பனர்கள் காட்டும் சுயராஜ்யம, தேசியம், தேசத்துரோகம், என்கின்ற பூச்சாண்டிகளைக் கண்டு யாரும் பயப்படக்கூடாது என்றும் மற்றபடி அவர்கள் கூலிகளையும் காலிகளையும வால்களையும் லட்சியம் செய்யக்கூடாது என்றும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

## 'தாஜுல் இஸ்லாம்'

ஈரோடு.

'தாஜுல் இஸ்லாம்' என்னும் மாதப்பத்திரிகைக்கு புதிதாக அச்சுக்கூடம் ஒன்று 13-தேதி சனிக்கிழமை சென்னை 'சைபுல் இஸ்லாம்' பத்திராதிபர் மவுலானா மவுல்வி ஜனாப் அகம்மது சைது சாயபு அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. ஸ்ரீமான் நாயக்கர் மவுலானா அவர்களை அச்சுக்கூடம் திறந்து வைக்கும்படி கேட்டுக்கொள்கையில் 'தாஜுல் இஸ்லாம்' பத்திரிகை மார்க்கத்திற்கும் தேசப்பொது நலத்திற்கும் மிகவும் உழைத்திருக்கின்றது என்றும், அதை ஆதரிக்க வேண்டியது எல்லா இந்து முஸ்லீம்களின் கடமை என்றும் 'சைபுல் இஸ்லாம்' பத்திரிகையும நாட்டிற்கும் சிறப்பாக முஸ்லீம் உலகத்திற்கும் மிகுதியும் கண்விழிப்பை உண்டாக்கியிருக்கின்றதென்றும், தமிழ் நாட்டில் 'சைபுல் இஸ்லாம்' என்கின்ற ஒரு பத்திரிகை இல்லாதிருந்திருக்குமானால் கூலிக்கு மாரடிக்கும் சில மகமதியர்களை பார்ப்பனர்கள் சுவாதீனப்படுத்திக்கொண்டு இஸ்லாம் சமூகத்தையே தங்களது அடிமைகளாகவும் அரசியலிலும் சமூக இயலிலும் மகமதியர்களை யாதொரு சுவாதீனமும் இன்றி அன்னியருக்கு தங்களது மனச்சாக்ஷியை விற்று ஜீவிக்கவேண்டியவர்களாகவும் செய்திருப்பார்கள் என்றும், வகுப்புவாரி பிரதிநிதித்துவத்திற்கு விரோதமாய் பல முஸ்லீம் பிரபுக்களும் அரசியல் வாழ்வுக்கார முஸ்லீம்களும் பார்ப்பன தாக்ஷண்ணியத்திற்கு கட்டுப்பட்டு தங்கள் சமூகத்தை காட்டிக்கொடுத்த சமயத்திலும் சைமன் பகிஷ்கார கூச்சலிலும் 'சைபுல் இஸ்லாம்' ஒன்றே தனித்து நின்று தைரியமாய் உழைத்து மக்களை விழிக்கச் செய்தது என்றும் பேசி, அச்சுக்கூடத்தை திறக்கும்படி வேண்டிக்கொண்டார். மவுலானா அவர்கள் 'குடி அரசு' இந்து முஸ்லீம் உலகத்திற்கு செய்த தொண்டைப்பற்றி புகழ்ந்து பேசி 'தாஜுல் இஸ்லாம்' வாரப் பத்திரிகை ஆகவேண்டும் என்றும, எல்லோரும் ஆதரிக்க வேண்டும் என்றும், பேசி அச்சுக்கூடத்தைத் திறந்துவைத்தார்கள். பிறகு மாலையில் அலிசவுக்கில் 'தாஜுல் இஸ்லாம்' பத்திராதிபர் மௌல்வி ஜனாப் நைனா முகமது சாயபு தலைமையில் ஒரு கூட்டம் கூடிற்று. ஸ்ரீமான் தண்டபாணி பிள்ளை, ஈ. வி. ராமசாமி நாயக்கர், பரங்கிப்பேட்டை சுப்ரமண்ய அய்யராக இருந்து இப்போது ஜனாப் ரைமான் சாயபு ஆன சனவான் முதலியவர்கள் பேசிய பின்பு இண்டிபெண்டெண்ட் கான்ஸ்டிடியூஷனல் கட்சி சார்பாக அதன் காரியதரிசியால் மௌலானா 'சைபுல் இஸ்லாம்' பத்திராதிபருக்கு, ஒரு உபசாரப்பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டது. பிறகு மௌலானா அவர்கள் தக்கபடி பதிலளித்து வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தையும் சைமன் கமிஷனையும் ஆதரித்தும் பார்ப்பனர்களின் சூழ்ச்சியை விளக்கியும் காட்டினார். பிறகு அக்கிராசனர் மவுல்வி முகமது சாகிப் அவர்கள் முஸ்லிம்களின் கடமையைப்பற்றியும் பார்ப்பன வலையில் சிக்காமல் ஜாக்கிரதையாயிருக்க வேண்டுமென்பதைப்பற்றியும் விரிவாகப் பேசினார். பிறகு காரியதரிசி ஜனாப் மைதீன் பாக்ஷா அவர்களால் உபந்நியாசகர்கள் மாலை இடப்பட்டு வந்தனம் கூறப்பட்டு இரவு 10 மணிக்கு கூட்டம் கலைந்தது.

---

## குறிப்பு

மதத்தைப் பற்றி நாம் குற்றம் கூறுவதாகக் குறை கூறும் சைவ வைணவ மதஸ்தர்களும மற்ற மதஸ்தர்களும் 17ம் பக்கம் உள்ள "இந்து மதம்" என்னும் கட்டுரையைக் கவனித்துப் படித்துப் பார்க்கக் கோருகிறோம்.

பிழைதிருத்தம்:- 'புத்த மகாநாட்டில் ஸ்ரீமான் நாயக்கரின் சொற் பொழிவு' என்னும் தலையங்கத்தின் கீழ் 17ம் பக்கத்தில் 18ம் வரியில்—சமத்துவத்திற்கு பாடுபடுவதாகச் சொல்லவில்லையானாலும்" என்றிருப்பதை "சமத்துவத்திற்காக பாடு பட்டதாகச் சொல்லப்பட்டாலும்" என்று திருத்திக்கொளளக் கோருகிறோம்.

## "ரிவோல்ட்"

"ரிவோல்ட்" என்னும் ஆங்கில பத்திரிகை ஆரம்பிக்க டிக்ளரேஷன் ஆர்டர் பெற மேஜிஸ்ட்ரேட்டிடம் இரண்டு தடவை சென்றும் இன்னும் அனுமதி கிடைக்கவில்லை. சீக்கிரம் அனுமதி கிடைக்கும் என்று எதிர் பார்க்கப்படுகின்றது.

### ஸ்ரீமான் நாயக்கர்.

15-4-28 தேதி ராசிபுரம் செல்கிறார்.

## கல்யாணமானவர்களுக்கு பள்ளியில் இடமில்லை.

கல்யாணமானவர்களை பள்ளியில்மாணவர்களாக சேர்த்துக் கொள்ளக்கூடாதென்று ஒரு தீர்மானம் ஐக்யமாகாணத்தில் நிறைவேற்றப் பட்டிருப்பதாய் அறிந்து மகிழ்வெய்துகிறோம்.

கல்யாணமானவர்களை உத்தியோகத்தில் கூட சேர்த்துக் கொள்ளக் கூடாது என்று தீர்மானித்தாலும் கூட நாம் மிகுதியும் மகிழ்ச்சி அடைவோம். ஏனெனில் கல்யாணம் செய்து கொள்ள வேண்டியவன் உலகத்தில் தன் வாழ்க்கைக்கு ஒரு வழி செய்துகொண்ட பின்பு கல்யாணம் செய்து கொண்டால் அவன் யோக்கியமாகவும் மனசாக்ஷியுடனும் சுயமரியாதையுடனும் நடந்து கொள்ள முடியும். அப்படிக்கில்லாமல் கல்யாணம் பண்ணிக் கொண்டு உத்தியோகம் தேட ஆரம்பித்தானானால் அவனுடைய அறிவையும் குடும்பப் பெருமையையும் உத்தியோகசம்பாத்தியத்திற்கு பெண்சாதியையும் கூட ஒரு யோக்யதாம்சமாய் உபயோகித்துக்கொள்ளச்செய்கின்றது. அதிலும் இந்துமத சம்பிரதாயப்படி பிராய்ச்சித்தம் தெரிந்தவர்களும் அதைப்பின் பற்றுபவர்களும் வலுக்க வலுக்க உண்மையான தனியோக்கியதை உடையவனுக்கு சரியானபடி உத்தியோகங்கள் கிடைப்பதுமில்லை; பொறுப்புள்ள உத்தியோகங்களுக்கு தக்கவர்கள் கிடைப்பதுமில்லை. ஆகையால் தனது சொந்த யோக்கியதையின் உத்தியோகசம் சம்பாதித்து தனது வாழ்க்கையை நடத்த சக்தி வந்த பிறகு கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமென்று ஒரு சட்டம் செய்து விட்டால் மேல் உத்தியோகஸ்தர்களும் யோக்கியமாய் நடந்து கொள்ள முடியும்.

## ஸ்ரீராம நவமி உத்ஸவத்தில் பகற்கொள்ளை.

சித்தூரில்கோதண்டராமசாமிக்கு 29-3-28 தேதி முதல் ஸ்ரீராமநவமி உத்ஸவம் நடந்து கொண்டு வருகிறது. 10 நாள் உத்ஸவத்திற்கும் சுமார் இரண்டாயிரம் ரூபாய்களுக்கு மேல் நமது தமிழ் மக்கள் பணம் சந்தா மூலியமாயும் உபயம் மூலியமாயும் வசூலாகி அவ்வளவும் செலவாகி விடுகிறது இந்த செலவில் பார்ப்பனர்கள் மூன்றிலொரு பங்கு பணமாகவே ஜீர்ணம் செய்து விடுகிறார்கள். உள்ளூர் பார்ப்பனர்கள் போதாது என்று காஞ்சீபுரத்திலிருந்தும், திருப்பதியிலிருந்தும் கணக்கின்றி பார்ப்பனர்கள் வந்து வேத பாராயணம் செய்வதாக சொல்லி சித்தானைக் குட்டியைப்போல் ஏராளமாக சாப்பிட்டுக் கொண்டு வளர்ந்து வருகிறார்கள். அவர்கள் செய்யும் வேத பாராயணம் பெருமாளே அறிவார். இந்த சிறிய ஊரில் ஆயிரக்கணக்கான தமிழ் யேழை மக்கள் சாப்பாட்டுக்கு படும் துயரம் அளவேயில்லை. அவர்களை கவனிப்பார் யாருமில்லை. இப்படியிருக்க நம்மைத் தீண்டப்படாது என்றும் வேசிமக்கள் என்றும் நம்மை அடிமை பந்திக் கொண்டு திரிகின்ற இந்தப் பார்ப்பனர்களுக்கு நம் மக்கள் செய்து வரும் உபசரிப்பு "தாய் தன் வீட்டில் கஞ்சிக்குத் தவிக்க மகன் கும்பகோணத்தில் கோதானம் செய்வது" போல் இருக்கிறது. பெருமாள் புறப்பாடாய் வெளியில் போகும் போதும் இந்தப்பார்ப்பனர்களை வீட்டுத் திண்ணையில் அமரச்செய்து காலில் விழுந்தும் பலஉபசரிப்பு செய்கிறார்கள். அது சமயம் ஒரு யேழை மகன் தேறுவீ என்றால் அடித்து துரத்தி அவன் நின்றிருந்த இடத்தில் ஜலத்தைக் கொட்டி அலம்புகிறார்கள். பெருமாள் கெங்கன்ன மண்டபத்தில் தங்கியிருந்த சமயம் சாப்பிட்ட பின் பார்ப்பான் ஒருவன் சர்க்கரை வழங்கினான். அதுசமயம் 5 வயதுடைய சிறிய குழந்தையொன்று நாமும் கேட்டதற்கு அந்தப் பார்ப்பான் அக்கையை அடித்து துரத்தி விட்டான். இப் பார்ப்பான் அயோக்கியதனத்தைப் பார்த்தீர்களா! எந்த ஜாதியானாலும் குழந்தைதானே. குழந்தையை அடிப்பது அயோக்கியத்தனமல்லவா? இப்படிப்பட்ட பார்ப்பானுக்கு நாம் எப்படி உபசரிக்கலாம். தவிர இன்னொரு அதிசயம் என்னவென்றால் இவ் உத்சவத்திற்கு பணம் உதவியவரும், உத்சவத்தை நடத்திக் கொடுப்பவரும், ஊர்வலம் தெருக்க பஜனை செய்து வருபவருமாகிய தமிழ்ச் சகோதரர்களுக்கு தாகத்திற்கு தண்ணீர் கொடுப்பாருமில்லை.

"பார்ப்பனர் சாப்பாடு கொண்டாட்டம் பெருமாள் வேலை திண்டாட்டம்" வேத பாராயணம் செய்ய வந்த பார்ப்பனர்கள், மிதமின்றி சாப்பிட்ட முதலை தண்ணீரில் மிதப்பது போல்-பாராயணம் செய்யாமல் வீண் காலஹரணம் செய்து வந்ததைப் பார்த்து கோவில் அதிகாரி கண்டித்து பெருமாள் வேலை செய்ய இஷ்டமில்லாவிட்டால் இன்றே ஊருக்கு போய் விடலாம் என்று கேட்டதற்கு நாங்கள் திவட்டி பிடிக்கும் சூத்திரர்களல்ல வேலை செய்ய; உங்களால் வேண்டிய உபசரிப்பு பெற்றுக் கொண்டு போகவே வந்தோம் என்று பதில் அளித்தார். இந்த பார்ப்பனர்கள் தைரியத்தைப் பார்த்தீர்களா! ஆகையால் சித்புரவாசிகளே இனியாவது இந்தப்பார்ப்பனர்களை கோவிலுக்குள் விடாமல் ஒழித்து யேழை மக்களை ஆதரிப்பீர்களாக. சாம்பசிவம்.

## முதன் மந்திரிக்கு வரவேற்பு

சென்னை மாகாண முதன் மந்திரி டாக்டர் சுப்பராயன் பார்-அட்-லா, LLD., BCL. அவர்கள் சுற்றுப் பிரயாணத்தின் போது தரங்கம்பாடிக்கு வருங்கால் அன்னவரை தஞ்சை ஜில்லா போர்டு அங்கத்தினரும் ஆப்காரி கண்டிராக்டருமான திருவாளர் வி. கனகசபை நாடாரவர்கள் வரவேற்று உபசரிப்பார்.

14-4-28 உ மாலை 7-30 மணிக்கு கோட்டைவாயிலில் வரவேற்பு. 8 மணிக்கு நாடார் பங்களாவில் விருந்து.

15-4-28 ந் தேதி காலை 7-30 மணிக்கு பொறையாறு நாடார் ஹைஸ்கூலுக்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லல். காலை 8-15 மணிக்கு நகர பிரஜைகளால் உபசாரபத்திரம் அளித்தல்.

## தஞ்சை ஜில்லா பார்ப்பனரல்லாத தொண்டர் மகாநாடு. திருவாரூர்.

வருகிற மே மாதம் 12, 13 ஆம் தேதிகளில் திருவாரூரில் நடைபெறப் போகும் தஞ்சைஜில்லாசுயமரியாதை மகாநாட்டுடன் ஜில்லா பார்ப்பனரல்லாதார் தொண்டர்மகாநாடு ஒன்று கூட்ட இருப்பதும் அதற்கு கோக்கலேஹால் சுயமரியாதை வீரர் ஸ்ரீமான் என். தண்டபாணிப் பிள்ளையை தலைமை வகிக்க தெரிந்தெடுக்கப்பட்டு இருப்பதும் நேயர்கள் அறிந்த விஷயம். மகாநாடு கூடும் தேதி நெருங்கி விட்டபடியால் ஜில்லாவில் ஆங்காங்குள்ள தொண்டர்கள் மகாநாடு நடைபெற வேண்டியதற்காக வேண்டிய ஏற்பாடுகளில் பங்கெடுத்துக் கொள்ள பிரார்த்திக்கிறேன். முதலாவது தொண்டர் மகாநாட்டிற்குப் பிரதிநிதிகளாக ஒவ்வொரு ஊரிலிருந்தும் பிரதிநிதிகளாக எவ்வளவு பேர், யார் யார் வருகின்றார்கள் என்ற விபரம் வேண்டும். இதில் பங்கெடுத்து உழைக்க ஆவல் உள்ளவர்கள் அறிவித்தால் விளம்பரங்களும் பணவசூல் ரசீதுகளும் அச்சு ஆனவுடன் அனுப்பி வைக்கசௌகரியமாகயிருக்கும் இம்மகாநாட்டில் ஜில்லா பார்ப்பனர் அல்லாத தொண்டர் சபை ஒன்று சரியான அஸ்திவாரத்துடன் ஸ்தாபிக்க எண்ணம் கொண்டுள்ளதால் ஏராளமான பிரதிநிதிகள் எதிர்பார்க்கப்படுகிறார்கள். மகாநாட்டில் தீர்மானிக்கும் விஷயங்களை திருப்பமுறுவதற்கு கொண்டு வர ஏராளமான செலவு பிடிக்குமாதலால் அதற்கு மகாநாட்டிற்காக வசூலாகும் தொகையை செலவுபோக மீதி தொகையை அதற்கான நிதியாக ஏற்படுத்தலாம். ஆனதால் நண்பர்கள் ஏராளமான நன்கொடை வசூல் செய்து திருவாரூர் மகாநாட்டு வரவேற்புக் கழகத்திற்காவது 'நா. வி. கல்யாண சுந்தரம், நாகலூர் செல்லூர் போஸ்ட்' என்ற விலாசத்திற்காவது பணங்களும் கடிதங்களும் அனுப்பப் பிரார்த்திக்கிறேன்

நா. வி. கல்யாண சுந்தரம்,
காரியதரிசி.

## இரங்கற் கூட்டம்.

தென்னிந்திய மருத்துவ சங்கத்தினர் 30-3-28 ஆம் நாள் மாலை 5 மணிக்கு சென்னையில் சங்க காரியாலயத்தில் பண்டிட் எஸ் எஸ் ஆனந்தம் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் ஒரு கூட்டம் கூடி அடியிற் கண்ட தீர்மானம் செய்தார்கள்.

பிராமணரல்லாதார்களின் தலைவர்களில் ஒருவரும், வாய்மையாளரும், தாழ்த்தப்பட்ட வகுப்பாரிடத்திலும், ஏழைகளிடத்திலும் மிகஇரக்கமுள்ளவருமான மதுரை திரு எம். டி. சுப்பிரமணிய முதலியாரவர்கள் பெருஞ் செல்வந்தராயிருந்தும் பெருமை சிறிதுமில்லாமல் ஏழைப் பங்காளராயிருந்தவர். இவர் இறந்து போனமைக்காக இச்சங்கத்தார் பெருந் துயரடைவதாக அவர்குடும்பத்தாருக்கு அறிவித்துக் கொள்வதாக தீர்மானம் ஒரே மனதாய் நிறைவேறியது.

வைக்கம் வீரர்.

## ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்களுக்கு

அம்பலூர் சமரச சன்மார்க்க சங்கத்தார் வாசித்துக் கொடுத்த

## உபசாரப்பத்திரம்.

சுயமரியாதையை விளக்கும் சோதியே!

தாங்கள் சுத்தோண்டோய தொண்டுகளுக்கிடையே எங்களது வேண்டு கோளுக்கு இணங்கி, எங்கள் குழுமியுள்ள இக்கூட்டத்திற்கு வர இசைந்த தங்கள் பெருந்தகைமைக்கு நாங்கள் யாது கைம்மாறு செலுத்த வல்லேம்! எங்கள் உள்ளத் தெழும் அன்பே வணக்கமாகத் தங்கள் முன் கொட்டுகின்றேம்.

சுயமரியாதையை பிறந்த தமிழ்நாட்டு முழுவதும் இக்காலத்தில், அதனை உணர்த்தி வைக்கத்தக்க ஒப்பிலா பெரியார் யாண்டு உளரோவெனத் தேடி ஆராய்வான் தொடங்கி அலமந்துள்ள இத்தமிழ் நாட்டு மக்களுக்கு, கோடை காலத்தில் வாடிய பைங்கூழினிக்கு தண்ணிய அமுதம் பொழியும் கண்ணிய சோனை மேகமென சொன்மழை பொழிந்து, தழைத்தோங்குமாறு புரியும் தங்கள் அறிவும் ஆற்றலும் ஒழுக்கமும் எங்களை செந்நெறியில் நடாத்து மெனும் உறுதியும் ஊக்கமும் கொண்டுளோம்.

தாங்கள் பொதுஜன ஊழியம் செய்யத் தலைப்பட்டு, காங்கிரசில் சேர்ந்து, தேசத் தொண்டில் அமர்ந்து, திறம்பட கடனாற்றி, அதன் பயனாக சிறைவாசம் செய்த தங்கள் உழைப்பிற்கு நாங்கள் என்றும் நன்றி மறக்க வல்லேம். மீண்டும் தாங்கள் வைக்கத்தில் தோன்றிய சுதந்திரப் போரில் முன்னின்று நடாத்தி இரு முறை சிறைபுகுந்து வெற்றி பெற்ற தங்கள் புகழ் இத்தேச சரித்திரத்தில் முதன்மையாக விளங்குவதென்பதை நாங்கள் உன்னி உள மகிழ்வெய்துகிறோம்.

தங்கள் வாழ்நாளில் தாங்கள் அடிப்படையாகக் கொண்டுள்ள அடியாருளுக்கும் அடக்கமும், நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கமும், ஆரவாரமின்றி ஒப்புரவும் கண்ணோட்டமும், ஓங்கிய உள்ளமும், இன்னோரன்ன தங்கள் அரிய பெரிய குணங்களே வடிவாய் அவதரித்த தோற்றம் எக்காலத்தும் எவர்க்கும் நினைப்பூட்டுகின்றன.

எங்கள் வேண்டுதலுக்கிசைந்து போந்து விண்மீன்களிடைப் பொலியும் தண்மதியமெனப் பொலிந்து காட்சியளிக்கும் தங்கட்கு மற்றுமொருமுறை எங்கள் எங்கள் வணக்கத்தைச் செலுத்துகிறோம். சமூக சேவையே பெரிதாகக் கருதி அகாலும் தொண்டு புரிந்து வரும் தங்கட்கு நீண்ட ஆயுளும் நோயற்ற பாக்கியமும் குறைவற்ற செல்வமும் வழங்குமாறு எல்லாம்வல்ல இறைவனை வழுத்துகிறோம்.

தங்கள் ஊழியர்கள்,

சமரச சன்மார்க்க சங்க அங்கத்தினர்கள்.

(நாயக்கரின் பதில் அடுத்த வாரம் வரும்.)

## முதலாவது மதுரை இராமநாதபுரம் ஜில்லாக்களின் பார்ப்பனரல்லாத இளைஞர் மகாநாடு

மதுரை கிளை பார்ப்பனரல்லாத இளைஞர் சங்கத்தார் 4—3—28ல் கூடிய கூட்டத்தில் மதுரை இராமநாதபுரம் ஜில்லாக்களில் முதலாவது மகாநாட்டை மதுரையில் மே மீ 19, 20-உ களில் சென்னை ராவ் பகதூர் டாக்டர் ஸி. நடேச முதலியார், எல் எம். அண்டு எஸ். (முனிசிபல் கவுன்சிலர், சென்னை கார்ப்பரேஷன்) அவர்கள் தலைமையில் நடத்துவதாகத் தீர்மானித்திருக்கிறார்கள். அன்பர்கள் விஜயம் செய்து மகாநாட்டை சிறப்பாய் நடத்தி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மகாநாட்டுக்கும் அதில் திரு. சுப்பிரமணிய முதலியாரின் திருவுருவப் படத்தை திறந்து வைக்கவும் பணம் வசூலிக்கும் சம்பந்தமாக மதுரை திரு. ஏ. யஸ் அருணாசலம் அவர்கள் ஒவ்வொரு ஊருக்கும் விஜயம் செய்வார்கள் எல்லா பிராமணரல்லாத தலைவர்களும் இளைஞர்களும் வேண்டிய உதவிகளை செய்து மகாநாட்டை வெற்றியுடன் நடத்தி வைக்க வேணுமாய் கேட்டுக்கொள்ளுகிறேன்.

S. இராமச்சந்திரன் சேர்வை.

## அம்பலூர் பார்ப்பனரல்லாதார் சங்கம்.

9-4-28 சுமார் ஐம்பது பிராமணரல்லாத வாலிபர்களைக் கொண்டு "பிராமணரல்லாத வாலிப சங்க" மொன்று அம்பலூரின் கண் திறுவப்பட்டது.

திரு ஏ. எஸ். அர்ஜுன கவுண்டர் தலைவராகவும், திரு ஏ. கே. ஸ்ரீரங்ககவுண்டர் திரு இ. ஜி. ஏ. ராமசாமி கவுண்டர் உபதலைவராகவும், திரு ஏ. இ. குப்புசாமி கவுண்டர் திரு ஏ. எம். விஜயரங்க முதலியார் காரியதரிசிகளாகவும், திரு ஆர் என் நடேச முதலியார் திரு ஏ டி சாமண்ண கவுண்டர் திரு ஏ கே கந்தசாமி கவுண்டர் ஷண்முக கவுண்டர் நிர்வாக கமிட்டி அங்கத்தினர்களாகவும், தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.

காரியதரிசி.

விலை சரசம்! இனாம்!! உறுதியானது!!!

கிளாஸ் பலவிதமான கலர் காலர் பொத்தான் ரூபாய் 1-க்கு டசன் 16. முன் பணம் அனுப்புகிறவர்களுக்கு தபால் கூலி இனாம். ஒரு ரூபாய்க்கு குறைந்ததும் முன்பணம் அனுப்பாததுமான ஆர்டர்கள் கவனிக்கப்படமாட்டாது.

K. பாலய்ய செட்டி, ஷாப், காரூர். S. I.

திரிமூர்த்தி உண்மை

அல்லது

தேவர்களின் இரகசியம்

முழு முதற் கடவுள் மூன்றாகி, மூன்று முப்பத்திமூன்று கோடியாக பெருகின அற்புத இரகசியத்தை அறிய விரும்பாதவரும் உண்டோ? தமிழ்நாடு இதுவரையில் கண்டிராத அற்புத நூல். சத்தியார்த்தப் பிரகாச ஆசிரியர் ஸ்ரீ எம். ஆர். ஜம்புநாதன் எழுதினது.

சூடன் அண்டு கோ., 14, பள்ளித் தெரு, சௌகார்பேட்டை, சென்னை

வியாபாரிகளே! கவனியுங்கள்!!

வியாபாரத்தின் நிலைமையை அடிக்கடி அறிந்து லாபகரமான வழியைத்தெரிந்து அவ்வழியில் தொழிலை நடத்துவதினாலேயே வியாபாரம் ஓங்கி வளரும்

லாபகரமான வழியை அறிவதெப்படி?

உங்கள் தொழிலுக்குத் தகுந்தாப்போல் சரியான கணக்குகள் வையுங்கள்

உங்களுடைய கணக்கு முறைகளை ஒழுங்காக வைத்துக்கொள்வதற்காக

வர்த்தகக்கணித நூல்

என்ற புதிதாக வெளிவந்த புத்தகத்தை வாசித்துப் பாருங்கள்

ஒரு தரம் பார்த்தவுடனேயே நமக்கு வரவேண்டிய தெவ்வளவு, நாம் கொடுக்க வேண்டியதெவ்வளவு, லாப நஷ்டமெவ்வளவு, முதல் தொகை எவ்வளவு வியாபாரத்தில் போடப்பட்டிருக்கிறது, எவ்விதமான தொழில் லாபத்தைக்கொடுக்கிறது என்று சுலபமாகப் பிறருடைய உதவியில்லாமலே ஆங்கிலேயர் எப்படித் தெரிந்து கொள்ளுகிறார்களோ அதே முறையில்தான் இப் புத்தகம் எழுதப்பட்டிருக்கிறது. மேலும், எல்லா வியாபாரிகளும் எவ்விதமான தொழிலுக்கும் இப் புத்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிற முறைப்படி கணக்குகள் வைத்துக்கொள்ளலாம். படிப்பதற்குக் கஷ்டமில்லாதபடி தெளிவான நடையில் எழுதப்பட்டிருக்கிறது.

இதன் விலை ரூ 2

வாசன் புஸ்தகசாலை. நெ. 244, தங்கசாலை வீதி, தபாற் பெட்டி நெ. 119, சென்னை

(-9ம் பக்கத் தொடர்ச்சி.)

வாகப் பசுவினிடம் இன்னின்னர் தோன்றின ரென்பர். அது வருமாறு:—

"பப்பரரெயினர் சீனர் சோனகர் முதல பல்லோர்
கைப்படை யதனினோடும் கபிலை மாட்டுதித்து"

பப்பரர் முதலிய கூட்டத்தினர் கையிலே ஆயுதங்களோடும் தோன்றினரென வால்மீகியார் கூற வில்லை. இனி தவம் செய்யச் சென்ற விசுவாமித்திரர் வரலாற்றை ஆராய்வோம்.

---


## 'சேலம் மாம்பழம்'

விற்பனைக்கு தயாராகிவிட்டது, விலை சரசம்.

தினசரி மார்க்கட் நிலவரத்திற்கு என்னுடைய சொந்த பார்வையின்மேல் பொறுக்கி எடுத்து ஜாக்கிரதையாய் பாக் செய்தனுப்பப்படும். அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.

செடிகள், விதைகள் கேட்லாக் இனாம்.

ச. கோ. இ. காதர்மீரு சாயபு,
ஹோட்கார்சரி அண்டு பழவியாபாரம், சேலம்.
தந்தி விலாசம்:— "ஸ்டோர்," சேலம்.

---

## குளிர்ச்சிபெற நேர்வழி.

ஸ்தலங்களுக்கெல்லாம் முதல்தரமானது, தேகத்திலுள்ள சூட்டைத் தணிப்பதில் நிகரற்றது. ஒரு முறை பரீக்ஷித்தால் அடிக்கடி இதனை வாங்கி ஆனந்தமடைவீர்கள்.

அயன்மஹா மூலிகை சந்தனாதி தைலம்.

3 மீ வரை வரக்கூடிய அளவு டின் 1-க்கு ரூ. 1—8—0. தபால் செலவு 0—10—0 கேட்லாக் இனாம்.

விலாசம்:—

சத்தியவேத வைத்தியசாலை,
வாகனேரி, நெ. 51, திருச்சி.

---

வைக்கம் வீரரின்

## போட்டோ படம்.

வைக்கம் வீரர் ஈரோடு உயர் திரு ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்களின் திருவுருவப் படைப்படம். கெம்பீரமான பார்வையுடன் விளங்குவது. பார்ப்பவர்கள் கண்களை கவரச்செய்யும்.

சயிஸ் 8½ x 6½ இஞ்சி. விலை படம் 1க்கு வி. பி. தபால் சார்ஜ் உள்பட ரூ. 1. ஒரு டஜன் அல்லது அதற்கு அதிகமான காப்பிகளுக்கு ஆர்டர் கொடுத்தால் காப்பி 1-க்கு அணா 12 வீதம் சார்ஜ் செய்யப்படும். அதற்கு அட்வான்சாக ரூ. 5 முன்னடி அனுப்பவேண்டும். என்லார்ஜ்மெண்டு அதாவது மிகப் பெரியபடம் வேண்டுவோர் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதி விபரம் தெரிந்து கொள்ளவும்

G. V. நாயுடு,
போட்டோகிராப்பர்,
நாகபட்டணம்.

---

தேவை! நல்ல லாபம்! தேவை!

## இன்றே வாருங்கள்!!

### நேஷனல் லைவ் ஸ்டாக் ரிஜிஸ்ரேஷன் பாங் Ltd.

ஈரோடு கிளை ஆபீஸ்,

ஈரோடு தாலூகாவிலுள்ள எல்லா கிராமங்களிலும் போய் ஷெடி பாங்கியாரால் நடத்தப்படும் 250, 500, 1000ரூ ஏலச்சீட்டுக்கு அங்கத்தினர்கள் சேர்க்கவும், கால்நடைகளை இன்ஷூர் செய்யவும் சூபர்வைசர்களும் கிராம காரியதரிசிகளும் தேவை. நல்ல சம்பளமும் பின்னிட்டு நல்ல பென்ஷனும் கொடுக்கப்படும். உடனே கீழ் கண்ட விலாசத்திற்கு நேரில் வந்து விபரம் தெரிந்துகொள்ளலாம். வேலைக்கு 30—4—28 தேதிக்குள் விண்ணப்பம் செய்து கொண்டு வேலையில் சேர்ந்துகொள்ளவேண்டியது.

N. சந்தனம் பிள்ளை, தாலூகா காரியதரிசி.
கோவிந்த நாயக்கர் மண்டிக்கு எதிர் மாடியில்,
337—339, லார்ட் நேபியர் வீதி, ஈரோடு.

---

இனாம்! இனாம்!! இனாம்!!!

எங்கள் லேஹியமானது ஸ்ரீ கொக்கோக மஹாமுனிவரால் அருளிச் செய்யப்பட்டதல்லவென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 1000 இனாம்.

ஸ்ரீ கொக்கோக மஹா முனிவர் அருளிச்செய்த அசல்

## சிந்தாமணி லேஹியம்.

(அயகாந்த செந்தூரம்)

இந்த லேகியத்தில் 196 விதக் கடைச் சரக்குகளும், வித்துகளும், யூனானி மிஸ்ரிகளும், பொன் அம்பர், பாதம் பருப்பு, பிஸ்தா, அக்ரோட், சல்கூஜா பருப்புகளும், அவைகளுடன் மலை மூலிகைகளைக் கொண்டுவந்து இயந்திரத்தின் வாயிலாய்க் கொடுத்து அதன் மூலமாய வரும் சஞ்சீவியின் சத்தை ஏராளமாகச் சேர்த்து பசு நெய், பசும் பால், மலைத்தேன் முதலியனவும் உறவாக்கி, கை பாகம், செய்பாகம் தவறாமல் செய்துள்ளோம். ஆகார விஷயத்தில் யாதும் நிர்ப்பந்தமில்லை. எல்லா காலத்திலும் எல்லா ஊரிலும் எந்த சீதோஷ்ண நிலைமையிலும் மேற்படி லேகிய செந்தூரத்தை சாப்பிடலாம். சாப்பிடுவதற்கும் வாய்க்கு அல்வாவைக் காட்டிலும் அதிக ருசியுள்ளதாயிருக்கும் என்பதையும் அறிவித்துக் கொள்ளுகிறோம். இதற்கு பத்தியம் இல்லை.

### இந்த லேகிய செந்தூரத்தை சாப்பிடுவதனால் உண்டாகும் குணங்கள்.

1. நித்திரையிலும் பெண்களோடு பேசிக்கொண்டிருக்கும்போதும் நினைத்தபோதும் உண்டாகும துரிதஸ்கலிதம் என்னும் கொடிய வியாதியை தலையெடுக்கவொட்டாமல் அடித்துவிடும்.
2. தளர்ந்து துவண்டு மெதுவுபட்ட இராஜ கருவிகளாகிய நரம்புகளை முறுக்கேற்றி கெட்டிப்படுத்தி கைகால் இடுப்பு முதலியவைகளுக்கு அதிக பலத்தைக் கொடுத்து இல்லறத்தில் அபரிமிதமான பிரியத்தைத் தரும்.
3. கிழத் தன்மையைப் போக்கி இளமையைத் திருப்பித்தரும்.
4. சரீரமானது பத்தரைமாற்றுப் பசும் பொன்னைப்போல் பளபளப்பைத் தரும்.
5. ஞாபக சக்தியை அதிகப்படுத்தி இன்பரசத்தை ஊட்டும்.
6. இன்னும் மேக சம்பந்தமான குன்மங்கள், சூலை, அண்டவாதம், குடல்வாதம், ஆண், பெண் குறிகளிலுண்டாகும் மேகங்கள், பாரிசவாய்வு, ஓடுவாதம், அஜீர்ணம் முதலியவையும் காற்றாய்ப் பறந்து உடம்புக்கு சுகத்தைக் கொடுக்கும்.

நண்பர்களே! இந்த லேகியமானது 50 வருட காலமாய் இந்தியா, பர்மா, சிலோன் ஐக்கிய மலாய் நாடுகள், ஜாவா, மோரீஸ், நேட்டால் முதலிய பல தேசங்களில் நிகரற்ற தென பிரசித்தி பெற்றது. நூற்றுக் கணக்கான சுதேச வைத்தியர்கள், ராஜாக்கள், ஜமீன்தார்கள், லாயர்கள், தேசாபிமானிகள், ஸ்கூல் உபாத்தியாயர்கள், வர்த்தகர்கள், தலைமை கங்காணிமார்கள் முதலிய கனதனவான்கள் நமது லேகியத்தை புசித்து ஆயிரக்கணக்கான நற் சாட்சிப் பத்திரங்கள் கொடுத்திருக்கிறார்கள்.

ஒரு மண்டலம் 48 நாள் சாப்பிடக் கூடிய லேகிய செந்தூரம் டப்பி ஒன்றுக்கு ரூபாய் 5. வி. பி. சட்டமில்லாத வெளிநாட்டு நேயர்கள் முன்பணம் அனுப்பும்போது தபால் செலவையும் சேர்த்து அனுப்ப வேண்டுமென்று நிரம்பவும் தாழ்மையாய் கேட்டுக் கொள்ளுகிறோம்.

எமது விலாசம்: ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி,
பிரும்ம சமாஜ கட்டடம், ஜி. டி. மதராஸ்.

8-ம் பக்கத் தொடர்ச்சி.

...க்கின்றது. மதங்கள் என்ற பித்தலாட்டங்களும், சமயங்கள் என்ற புரட்டுகளும் மக்களை அந்தகாரத்தில் ஆழ்த்தி வருகின்றன. பெரும்பகுதியான மக்களின் உன்னத நாகரீகமும் செல்வ வளர்ச்சியும் நிறைந்த நாட்டு மக்களை மக்களெனச்சொல்லமுடியாத மாக்களாக்கியிருப்பதும் இம்மதமென்ற புரட்டுகள்தான். (கரகோஷம்) பெரும் இடையூறுகளை எளிதில் கொல்லமுடியாதாயினும் சிறுமையாகவிருக்கும் தடைகளைச் சீக்கிரத்திலேயே ஒழிக்க முயலவேண்டும். 'மகாத்மா' காந்தி என்பவரும் மக்களைச் சமத்துவப்படுத்தி சகோதரத்துவத்தை நிலைநாட்ட ஊரெல்லாம் சுற்றுப்பிரயாணம் செய்ய வந்தவர் கடைசியில் விலங்கைத்தறித்து குட்டையிலடைத்துவிட்டது போல் செய்துவைத்தார். (கரகோஷம்) அவருடைய சமீபமாறுதல்களால் அவர் உலகத்திறகு பெரும் தீங்கிழைத்திருப்பது புலனாகும். ராமானுஜர் சமத்துவத்திற்குப் பாடுபடுவதாகச் சொல்லவில்லை யானாலும் அவர் மதம் இப்போது வித்தியாசமில்லாதவர்களுக்குள்ளும் வித்தியாசத்தைப் புகுத்திவிட்டது. (நகைப்பு) சங்கராச்சாரியார் மனிதனுக்கு மனிதன் பேதமில்லை என்று சொல்லி பெரும்பேதத்தை உண்டாக்கி மக்கள் வாழ்க்கையை பாழ்படுத்தி வைத்தார். இவ்வாறு மற்றும் பல மதத்தலைவர்களும்ஆச்சாரியார்களும் குழப்பத்தில்தான் கொண்டுவந்து விட்டிருக்கின்றனர். இந்து மதம் என்பதை இன்னும் பிரித்துப் பிரித்து நன்காராய்ந்தால் அதன் பெயரால் கஷ்டங்களும் ஆபாசங்களும் மிகுந்து மக்களை மேன்மேலும் கொடுமைகளுக்கும் அவமானத்திற்கும்உட்படுத்தியிருப்பது தான் தெளிவாகக் காண்கின்றன. அதனால் இதற்காக புதிதான கொள்கைகளும், மார்க்கமும், சமயமும் அவசியமில்லை. உள்ள மார்க்கத்தில் எது எது இயற்கைக்கும் அனுபவத்திற்கும் விரோதமாயும், மனிதத் தன்மைக்கு முரணாயுமிருக்கின்றதோ அவற்றை எல்லாம் உடைத்தெறியவேண்டும். அதற்காக ஒருவன் பிறக்கப் போகிறான் என்பதும் மூட நம்பிக்கையாகும். ஒவ்வொருவரும் அதை உடைத்தெறிய சுதந்தரமுடையவர்கள் என்ற கொள்கை மனித வர்க்கத்தினர் யாவருக்கும் உதிக்கவேண்டும். நிற்க மனித வர்க்கத்தில் பாதியான ஸ்திரீ வர்க்கத்தை நம் நாட்டிலும் கேவலமாகத்தான் நடத்தப்பட்டு வருகின்றது. இதைப்பற்றி எல்லா மதமும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறது. இயற்கைத் தோற்றத்திலேயே பெண் என்றால் தாழ்ந்தவர்கள் என்ற உணர்ச்சிதான் ஆண் மக்களுக்கு தோன்றுகின்றது. பல மதங்களில் பெண் மக்களுக்குத் சுதந்தரமும் உரிமைகளு மளிக்கப் பாடுபடுவதாகத் தோன்றினாலும் அவர்கள் இன்னும் பழைய அடிமைத்தனத்திலிருந்து விடுபட எந்த ஆண்மகனும் யாரும் சம்மதிப்பதாக காணவில்லை. ஆணுக்கும் பெண்ணுக்கும் எந்த நிலையாலும் எவ்வித வித்தியாசமும் கற்பிக்கப்பட்டிருக்கவில்லை என்ற தத்துவத்தை மனிதன் உணரும்போதுதான் மனிதத்தன்மை என்பது வெளிப்படக்கூடும். (கரகோஷம்) இயற்கைக்கும் அனுபவத்திற்கும் விரோதமான கட்டுப்பாடுகளை எல்லாம் உடைத்தெறியத்தக்க கொள்கைதான் மனிதவர்க்கத்திற்கு அவசியமானதென்று கருதுவதின் மூலம்தான் அவர்கள் ஒரு காலத்தில் அந்நிலைமைக்கு வரக்கூடுமென்ற நம்பிக்கையும் எனக்குப் பூர்ணமாய் ஏற்பட்டிருக்கின்றது. (கரகோஷம்) நான் இதுவரை கூறியதில் உங்களுக்குச் சரி எனப்படுவதை ஏற்றுக்கொண்டு தப்பாகத் தோன்றுவதை ஒதுக்கி என் அறியாமைக்கு என்னிடம் பரிதாபப்பட்டு என்னை மன்னிப்பீர்களென்று கேட்டுக் கொள்ளுகிறேன். (கரகோஷம்.) ஒரு நிருபர்.

# இந்துமத பிரசாரம்.

இந்து மதம் என்பது ஒரு போலி மதம் என்றும், ஒரு கொள்கையும் அற்றதென்றும், பார்ப்பனர்களின் வாழ்வுக்கும் வயிற்றுப் பிழைப்புக்குமே கடவுளின் பெயராலும், முனிகள் பெயராலும், ரிஷிகள் பெயராலும் பல ஆபாசங்களையும் சுயநலக்கொள்கைகளையும் கற்பனை செய்து அவற்றை பாமரமக்கள் நம்பும்படி பல மிரட்டுதலான நிபந்தனைகளை ஏற்பாடு செய்து அவைகள் நிலைப்பதற்குத் தகுந்த தந்திரங்களும் சூழ்ச்சிகளும் செய்து வருகிறார்கள் என்றும் அதை அறியாமல் பல தமிழ் மக்களும் சைவம் என்றும் வைணவமென்றும் அர்த்தமற்ற சில கடவுள்களின் பேரால் சமயங்கள் என்பதாக வகுத்துக்கொண்டு சிவன், விஷ்ணு என்னும் பெயர்கள் உடைய பல கடவுள்கள் இருப்பதாகவும் அவர்கள் பல ரூபங்களாகவும், பல அவதாரங்களாகவும் இருப்பதாகவும், அவற்றை வணங்குவதும் துதி பாடுவதுமே சைவ வைணவ கொள்கையென்றும் வைத்துக்கொண்டு அதன் மூலம் பார்ப்பனர்கள் சூழ்ச்சிக்கு இடம் கொடுத்து வாபடுகின்றது என்றும் நாம் பல தடவைகளில் பேசியும் எழுதியும் வந்திருக்கின்றோம். இது வரையில் நம் நாட்டில் இதைப்பற்றி தக்க காரணம் காட்டி மறுத்தோ அல்லது சமாதானமோ யோக்கியமானவழியில சொல்லவோ எழுதவோ இல்லை.

ஆனால் குருட்டு நம்பிக்கையிலும் மூட வழக்கங்களிலும் பலமாக கட்டுப்பட்ட சிலரும், மதத்தின் பேராலும் சமயத்தின் பேராலுமே தங்கள் வாழ்க்கையை நிலை நிறுத்திக்கொண்ட சிலரும் கொஞ்சமாவது தங்கள் பகுத்தறிவை உபயோகிக்காமலும் பொது ஜனங்களுக்கு என்ன சமாதானம் சொல்லுவது, எப்படி மெய்ப்பிப்பது என்பதைப்பற்றி கவலைப்படாமலும் பார்ப்பனர்கள் தங்கள் கற்பனைப் புரட்டுகளை நிலைநிறுத்த ஏற்படுத்தி வைத்துக்கொண்டிருப்பதான 'நாஸ்திக மாச்சுது'' "மதம் போச்சுது'' "கலிகாலத்தின் கொடுமை'' என்கின்ற யோக்கியமற்றதும், வஞ்சகமும், கொடுமையும் நிறைந்ததுமான ஆயுதங்களை உபயோகித்து ஏமாற்றப் பார்க்கின்றார்களே ஒழிய ஒரு வழியிலாவது சரிப்பட்டு வருகின்றதில்லை—சமீபகாலமாக சில சைவர்கள் என்போர்கள் நமமைப் பற்றி காணுத் இடங்களில் 'சைவத்திற்கு பெரிய ஆபத்து வந்துவிட்டது எலலோரும் உஷார் உஷார்' எனபதும எதாவது அருதத மற்றதும பாமரர்கள் ஏமாறத்தக்கதுமான வார்த்தைகளை அடுக்கி துண்டு விளம்பரங்கள் போடுவதும் அதை சில வயிற்றுப் பிழைப்பு பததிரிகைகளும் தனக்கென யாதொரு கொள்கையுமற்று சமயம் போல் நடந்து உயிர் வாழுவதையே முக்கிய பிழைப்பாய்க்கொண்டிருக்கும் பத்திரிகைகளும ஆசாமிகளும 'நாயககர் பிரசாரம்,' என்று விஷமத் தலைப்பின்கீழ் எடுத்துப்போடுவதும மற்றும் தாங்களே தங்கள்பேரால் எழுதுவதற்கு தைரியமற்று ஏதோ பல அனுமதேயங்களின் பேரால் "நாயக்கர் மதத்தை அழிக்கப் பார்க்கின்றார், நாஸ்திகத்தை பிரசாரம்செய்கின்றார்'' என்கின்றமாதிரி எழுதுவதுமான காரியங்கள் நடந்து வருக்கின்றது.

நிற்க, சிவனைப் பற்றியும் சிவனைக்கடவுளாகக் கொண்ட சைவசமய ஆதாரங்களான பல புராணங்களைப்பற்றியும் அதில் உள்ள புரட்டுகளைப்பற்றியும் அதுபோலவே விஷ்ணுவைப்பற்றியும் விஷ்ணுவை கடவுளாகக் கொண்ட வைண சமைய ஆதாரங்களான பல புராணங்களைப் பற்றியும் நாம் குறிப்பிடும் விஷயங்களைப் பற்றி 'மத தூஷணை' 'தெய்வநிந்தனை' என்று பேசிவிட்டு எழுதி விட்டு தங்கள் தங்கள் சமயத்தைப்பற்றி பேசும் போதும் அதைப் பெருமைப படுத்தி நினைக்கும் போதும சைவன் வைஷ்ணவத்தையும் விஷ்ணுவையும், வைணவன் சைவத்தையும் சிவனையும் எவ்வளவு தூரம் இகழ்ந்தும, இழிவாயும் ஆபாசமாயும் வேதத்தின்பேராலும் உபநிடத்தின் பேராலும் புராணங்களின் பேராலும் எழுதியும் பேசியும் வருகின்றார்கள் என்பதைப் பார்ப்போமானால் இதுவரை நாம் பேசியும் எழுதியும் வந்தது அவற்றில் பதினாயிரத்தில் ஒரு பங்குகூட இருக்காது என்றே சொல்லுவோம். உதாரணமாக

சிவ பராக்கிரமம் என்னும் புத்தகமும், சூரேச விஜயம் என்னும் புத்தகமும், ராமாயணம், பாரதம், பாகவதம், விஷ்ணு புராணம, கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடல் புராணம், அருணசல புராணம், விநாயகபுராணம் என்னும் சமய புராணங்களும் ஆகியவைகளை நடு நிலையில் இருந்து படித்துப்பார்ப்பவர்களுக்கு இதன் உண்மைகள் விளங்காமல் போகாது. நாம் சொல்வதும் எழுதுவதும் ஒவ்வொன்றும் மேல்கண்ட சமய ஆதாரங்களாகி பல புத்தகத்தில் சிவன் சொனனதாகவும், விஷ்ணு சொன்னதாகவும், பிரம்பா சொன்னதாகவும், முனி சொன்னதாகவும், ரிஷி சொன்னதாகவும் உளள விஷயங்களையே குறிப்பு காட்டி எழுதியும் சொல்லியும் வருகின்றோமேயல்லாமல் நம்மை எதிர்க்கும் சில புரட்டர்கள் சொல்வது போல் 'அதற்கு இதல்ல அருத்தம்' ,'இது சையன்சுக்கு பொருத்தம்' 'இது படியாத முட்டாளின் கருதது' 'இது குண்டர்களின் வேலை' 'ஆராய்ச்சியில்லாதவர்களின் கூற்று' என்பதான அயோக்கியத்தனமும், போக்கிரித்தனமும், பேடித்தனமும். இழிதகைமையும் பொருந்தியதான சமாதானங்களை ஒருபோதும் சொலல முன் வருவதே இல்லை.

அன்றியும் நாம் சொல்லும் விஷயங்களை சமயத்தைக் காக்கவந்ததாகச் சொல்லிக்கொள்ளும் வைணவ சைவ பக்தர்கள் சொல்லுவதையும் எடுதது இரண்டொரு உதாரணங்கள் காட்டுவோம்.

தற்சமயம் நமது பிரசாரத்தைப் பற்றி வைணவர்களைவிட சைவர்களுக்குத்தான அதிக ஆத்திரமாக இருககின்றது. அவர்களுக்குத்தான் எங்கு அவர்கள் சைவ சமயம்போய்விடுமோ என்கின்ற பயம் அதிக

மாய் பிடித்து ஆட்டி மதம் போச்சு மதம் போச்சு என்கின்ற பொய்யழுகை அழுகின்றார்கள். அவர்கள் தான் நாம் மிகுதியும் சமய நிந்தனை செய்வதாக கூப்பாடு போடுகின்றார்கள், வைணவர்களில் பெரும்பான்மையோர் இதைப்பற்றி அதிக கவலை எடுத்துக்கொண்டதாக தெரியவில்லை. ஒரு சமயம் நம்மை எதிர்க்கத்தக்க ஆதாரங்கள் தேடிக்கொண்டிருந்தாலும் இருக்கலாம். ஆனாலும் இப்போது வெளிப்படையாய் ஒன்றையுங்காணோம். சமீபத்தில் 'வைணவன்' என்கின்ற ஒருபத்திரிகை நம்மைப் பற்றி குற்றம் சொல்லப்புறப்படுகையில் ராமாயணத்தைப்பற்றி நாம் எழுதியவைகளில் தனக்கு சற்று மனதாபங்கள் இருப்பதை மாத்திரம் காட்டிக்கொண்டதே ஒழிய அது சரியா தப்பா அல்லது பொய்யா என்பதைப்பற்றி ஒரு வார்த்தையும் சொல்ல முன்வர (இஷ்டமில்லையோ அல்லது தனக்குச் சக்தியில்லையோ) வில்லை ஆனால் கடைசியாக. அப்பத்திரிகை சொன்ன சமாதானம் என்ன வென்றால் இராமாயணத்தைக்காட்டிலும் பன் மடங்கு ஆபாசமான நூல்கள் பல இருக்கின்றன என்றும்,

இராமனைக்காட்டிலும் ஆபாசமான நடை உடைய கடவுளர் பலர் இருக்கிறார்கள். அவ்வாபாசங்களைக் குறித்து இவ்வாராய்ச்சிக்காரர் ஒரு வார்த்தையேனும் கூற முன்வரவில்லை. இராமாயணமட்டும் இவர்கள் கண்களில் உறுத்திக்கொண்டிருக்கக் காரணம் என்ன' என்று கேட்டு இருக்கிறாரே ஒழிய மற்றபடி ஒரு மறுப்பும் சமாதானமும் காணவில்லை. அதற்கு நாம் அவருக்கு சொல்லும் பதில் மற்ற நூல்களுடையவும் கடவுளர்களுடையவும் ஆபாசங்கள் அதனதன் முறையில் தானாகவெளிவரும். இதிகாசங்கள் என்கின்ற தலைப்பு இராமாயணத்திற்கு மாத்திரம் ஏற்பட்டதல்ல. வரிசை கிரமமாய் எல்லா ஆபாசங்களுக்கும் ஏற்பட்டது என்பதும் 'இராமாயணத்தை முதலில் எடுத்துக்கொண்டதற்குக் காரணம் அதை பார்ப்பனர்கள் அதிகமாக நமது மக்களின் தலைசில் சுமத்தி தினமும் அதற்காக அனேக நேரமும் பொருளும் செலவாவதும் அதனால் பார்ப்பனர்கள் கொள்ளையடிப்பதும் அதிகமாயிருப்பதினால் அதை முதலில் எடுத்துக் கொண்டிருக்கிறது' என்பதுந்தான்.

சைவர்களின் மதப்பிரசாரத்தைப்பற்றியும் சிலவார்த்தை சொல்லுவோம்.

நாம் நாட்டுக்கோட்டை நகரத்திற்குப் போய்வந்த பிறகு அங்குள்ள சில நேயர்கள் ஒன்றுகூடி அவர்களுடைய சைவசமயத்திற்கு நம்மால் பெரிய ஆபத்து வந்துவிட்டதாகவும் உடனே அதற்குத் தக்க முயற்சி எடுத்துக்கொள்ளாவிட்டால் சைவ சமயமே முழுகிப்போகும் என்றும் கருதி பல ஆயிர ரூபாய்கள் ஒதுக்கிவைத்து "சிவநேசன்" என்பதாக ஒரு பத்திரிகை ஆரம்பித்தார்கள். அப்பத்திரிகையை இந்து மதத்தை காப்பாற்ற புறப்பட்டதாகச் சொல்லி மக்களிடை பரப்பினார்கள். அதன் முதலாவது ஆண்டு பதினொலாவது மலர் அனுபந்தத்தில் "கோபிசந்தனம்" என்னும் தலைப்பில் ஒரு சைவ சித்தாந்த செல்வர் எழுதுவதாவது:-

"................தேவர்கள் முதலியயாவரும் விபூதியை தரித்து மோட்சமடைய வேண்டும என்னும் கருத்தினாலேயே கடவுள் மனிதனின் நெற்றியை குறுக்காகவே படைத்திருப்பதை யாவரும் காணலாம்

இதற்கு ஆதாரம் கூர்ம புராணத்தில் சொல்லியிருப்பதானது 'ஸ்ருஷ்டா ஸ்ருஷ்டிச்சில ராஹர்தி புடைட ரஸ்ய ரசஸ்தகாம, ஸவிர்ஜசலலாடம் ஹிதிரியக் கோர்தஞ்சுவம நவர்த்துலம், ததாபி மானவை மூர்க்கா நதர் வந்திதிரி புண்டாகம்'

அதாவது பிரம்மா சிருஷ்டி தொடங்கும் போதே விபூதி மகிமை கூற அதனை அணிந்து உய்வதற்காகவே சர்வசனங்களின நெற்றிகளையும் குறுக்கே ஆகிருதியாகப் படைத்தனர். நெடுமையாகவேனும் வட்டமாகவேனும் படைத்திலர். அப்படியிருக்க சிலர் அவ்விபூதி திரிபுண்டாமணியாமல் தீவினை வயப்பட்டு உழலுகிறார்கள். என்று விளங்குதலால் அறியலாம்' என்கிறார்

இனி கோபி சர்சனத்தைப் பற்றி வாசுதேவஉபநிஷத்தில் வாசுதேவன் மகன் அதாவது கிருஷ்ணன் கூறுவதாவது.

கிருஷ்ணன் கோபிகா ஸ்திரீகளை தழுவிக் கலந்தபோது அப்பெண்கள் ஸ்தனங்களிலிருந்து கிருஷ்ணன் மேனியில் ஒட்டியபின் அவர்கள் கழுவுதலால் வழிந்தோடிய சந்தனமே கோபி சந்தனமென்று கூறப்படுகிறது. அப்பெயராலேயே அவ்வுண்மை விளங்கும். என எழுதியிருக்கிறார்

எனவே சைவர்கள் பூசும் விபூதி யாக குண்டத்தில் இருந்து வந்ததென்றும், வைணவர்கள் பூசும் கோபிசந்தனம் என்னும் நாமம் கிருஷ்ணன் கோபிகளை புணர்ந்த பிறபாடு கழுவிய தண்ணீரென்றும கருத்தை வைத்து கூறப்பட்டிருக்கிறது. இது உண்மையோ பொய்யோ என்று நாம விசாரிக்க நாம் நேரம் செலவழிக்க வில்லை. ஏனெனில் அவர் சொல்வது இன்ன இன்ன சாஸ்திரத்தில் இருக்கின்றது என்பதாக அவரே எடுத்துக்காட்டியிருக்கிறார். ஆதலால் அதைப்பற்றி அதிகமாய் சந்தேகிக்கவும் வேண்டியதில்லை. ஆனால் ஒன்று நமக்குத் தெரியவேண்டும். அதாவது:—கிருஷ்ணனும் கோபிகளும் கலந்த பின் கழுவினது தான் வைணவர் நெற்றியில் வைக்கும் கோபி நாமம் என்று இந்து மத ஆதாரங்களில் இருந்து சைவர்கள் எடுத்துக் காட்டுவது, சைவர்களுக்கு இந்து மத தூஷணையும் வைணவ சமைய தூஷணையும் அல்லவென்று தோன்றும்போது ஆண் குறியும் பெண்குறியும் சேர்ந்தபோது அறுந்து விழுந்ததின் தத்துவம் தான் லிங்கமும் ஆவுடையாரும் என்றும் அதைத் தான சைவர்கள் கடவுளாக வணங்குகிறார்கள் என்றும் வைணவர்கள் சொல்லி இந்துமத ஆதாரங்களில் இருந்தே மேற்கோள்கள் எடுத்துக்காட்டுவது இந்துமத தூஷணையும் சைவ சமைய தூஷணையும் அல்லவென்று வைணவர்களுக்குத் தோன்றும்போதும் நாம் இவ்விரண்டையும் திரட்டி எடுத்துக்காட்டும் போது மாத்திரம் நம்மை யேன் இவர்கள் இந்து மததூஷணை சமயதூஷணை நாஸ்திகம் என்று சொல்லுகின்றார்கள் என்பதுதான் நமக்குவிளங்கவில்லை.

தவிர மதப் பித்துக்கொண்ட பேயர்களைப்பற்றியோ 'வயிற்றுப் பிழைப்புக்கும் கூலிக்கும் பிரசாரம் செய்யக் கிளம்பும் மதாபிமானிகளைப்பற்றியோ நாம் ஒரு சிறிதும் கவலைப்பட வில்லை,


ஆனால் ஆராய்ச்சிக்காரர்கள் என்றும் பண்டிதர்களென்றும் வித்துவான்களென்றும பெயர்வைத்துக்கொண்டு சமய வேஷமும் போட்டுக்கொண்டு சமய வரலாற்றுக்கும் சமைய நூல்களுக்கும் தங்களையே நிபுணர்கள் என்று சொல்லிக்கொண்டு இருப்பவர்களை மாத்திரம் ஒன்று கேட்கிறோம் நாம் எழுதுவதும் பேசுவதும் நம்முடைய கற்பனையா? அல்லது இந்து மத ஆதாரங்கள் எனபவைகளில் உள்ளவைகளா? உள்ளவைகளானால் அதற்கு என்ன சமாதானம் சொல்லுகிறீர்கள்? என்றுதான் கேட்கிறோம். தக்க சமாதானம் சொல்ல முன்வராமல் சூழ்ச்சிப்பிரசாரமும் பேடிப்பிரசாரமும் செய்யாதீர்கள். நபரைக்குறித்து ஆத்திரப்படாதீர்கள். உங்களைப்போல் பல கற்றறிமூடர்கள் சேர்ந்துதான் பார்ப்பனர்களுக்கு உதவி செய்து நாட்டை பார்ப்பனர்களுக்கு அடிமையாக்கி மக்களை மூட நம்பிக்கையில் ஆழ்த்தி அறிவற்ற மிருகங்களாக்கி விட்டார்கள். இதுவரை செய்ததே போதும். இனியாவது உங்கள் ஆராய்ச்சி என்பதையும் சமய நிபுணத்துவம் என்பதையும் புதிது புதிதாக கண்டுபிடித்தல் என்பதையும் மக்களின் மனிதத் தன்மைக்கும் தன்னம்பிக்கைக்கும் சுயமரியாதைக்கும் அறிவு வளர்ச்சிக்கும் பயன் படும்படி செய்யுங்கள். முடியாவிட்டால் சப்தத்திற்கும் எழுத்துக்கும் வார்த்தைக்கும் இலக்கணம் சொல்லும் வேலையில் உங்கள் வாழ்வை நடத்திக் கொள்ளுங்கள். சமயம் என்கிற வேலையில் புகுந்து மக்களைப் பாழ்படுத்தாதீர்கள்; முட்டாள்கள் ஆக்காதீர்கள் என்றுதான் சொல்லுகிறோம்.

---


## முந்துங்கள்!

விலை ரூ. 3-8-0 தான் ரூ. 3-8-0 தான்

**110** சாமன்கள் அடங்கிய ஜெர்மன் பெட்டி



சாமான்களின் விவரம்.

18 காரட் ரோல்டு கோல்டு அழகிய நிப்புள்ள பவுண்டன் பேனா 1; 18 காரட் ரோல்டு கோல்டு இமிடேஷன் வைர மோதிரங்கள் 2; ஷெர்ட் பொத்தான்கள் செட் 12; டை கல்விழைத்த புரூச் 1; ஜப்பான் நூதன பொம்மைகள் 6; நேர்த்தியான முகம் பார்க்கும் கண்ணாடி 1; அழகிய தந்த சீப்பு 1; மடிப்புள்ள கத்தி 1; நேர்த்தியான கத்தி 1; காம்பினேஷன் நூதன சாவி வளையமும் செயின் 1; உயர்ந்த பேன்சல்கள் 12; பென்சல் கிளிப்புடன் கூடிய கவர் 1; பலாக பென் ஹோல்டர்கள் 6; உயர்ந்த நிப்புகள் 12: மணிபர்ஸ் 1; ஜெர்மன் இங்கி புட்டி 1; இங்கி மாத்திரைகள் 12; செண்ட் புட்டி 1; தேசிய டிரான்ஸ்பர் படங்கள் 12; அழகிய பலாக சேப்டி பின்கள் 25 ஆக 110 சாமான்கள் அடங்கிய ஜெர்மன் பெட்டி 1-க்கு 3—8—0. P. K. மூர்த்தி கம்பெனி தபால் பெட்டி 119, மதராஸ்.

## இராமாயணத்திற்கு வக்காலத்து பேசும் தமிழர்களே! உங்களுக்கு வெட்கமில்லையா?

திருமைலாப்பூர் அய்யங்கார் திருக்கூட்டத்திற்கு "ஆமா சாமி" போடும் நமது முத்தண்ணு ஸ்ரீ வாதராஜுலுவின் 'தமிழ் நாடு' பத்திரிகையில் "நாயக்கர் பிரசாரம்" என்பதான தலையங்கமிட்டு 'குடி அரசும், நாயக்கரும், சுவாமிகளும்-இராவண தாசனும், சேர்ந்துகொண்டு ராமாயணத்தைக் குற்றம் சொல்லுகின்றார்கள்' என சில பாமக்கள் ஒப்பாரிவைக்கின்றார்கள். அவர்களின் அறியாமைக்கு நாம வருந்துவதுடன் இனியாகிலும் அறிந்துகொள்வார்களென இதை எழுதலானோம்.

ராமாயணமென்பது பெரும்பாலும் பார்ப்பனர்களுடைய வயிற்றுப் பிழைப்புக்காக எழுதிவைக்கப்பட்ட ஒரு கதை என்பதை "குடி அரசு" பல உதாரணங்களுடன் எடுத்துக்காட்டியிருப்பதுடன் ராமாயணம் என்னும் ஒரு நூல் நமது நாட்டில் இருக்கும் வரையில் நாம் 'சூத்திரர்'களாகவே, பார்ப்பானின் வைப்பாட்டி மக்களாகவே இருக்கவேண்டுமென்பதையும தெள்ளத் தெளிய எடுத்துக்காட்டியுள்ளது.

நமது நாட்டில் நமது சமய சம்பந்தமான எவ்வளவோ நூல்கள் இருக்கும்போது ராமாயணத்தை மட்டும் என்? "குடி அரசு"ம் நாங்களும் குற்றம் சொல்லவேண்டுமென்றால் ராமாயணத்தின் மூலம் நமது நாட்டிலுள்ள ஒரு கூட்டத்தார் தீவட்டிக்கொள்ளையடிக்கிறார்கள். ராமாயணப் பிரசங்கம் செய்யும ஒருவன் பார்ப்பாரசாமியாவதுடன் பெரிய பணக்காரனாகிவிடுகிறான். ராமாயணப் பிரசங்கம் கேட்கும் ஒருவன் 'சூத்திரனும், தேவடியாள் மகனுமாவதுடன் ஏழையாகி விடுகிறான்; அடிமையாகி விடுகிறான்: முட்டாளாகி விடுகிறான். ஆ! இவற்றை நினைக்கும்போது எமது நெஞ்சம் துடிக்கிறது. ராமாயணமென்பது உண்மையாகவே ஒரு காலத்தில் நடந்ததாகவைத்துக்கொண்டாலும், அந்தக்காலத்தில் நடந்தேறிய "சீதாகல்யாண"த்திற்கு பதிலாக இக்காலத்திலும் ஒரு பார்ப்பானை "ராமனாகவும்" பார்ப்பாத்தியை "சீதை"யாகவும் வைத்து சீதாகல்யாணம செய்யவேண்டியதாக இருக்கிறது. அதற்கு செலவாகும் 1000, 2000 ரூபாய் யாருடையதென்றால் நமது ஏமாந்த சோணகிரிகளுடையது. ராமன் ஜெனனமுதற்கொண்டு ராஜ்யாபிஷேகம் வரை பார்ப்பான் சொல்லியபடி ரூபாய்களும், ஆடையாபரணங்களும் கொடுக்கவேண்டும். இல்லையேல் ராமாயணம் கேட்பதில் ஒன்றும் பலனே கிடைக்காது. ஐயகோ! என்ன மோசம்!! என்ன கொள்ளை!!! இதற்கு உதாரணமாக சென்ற சில மாதங்களுக்குமுன் திருச்சியில் நடந்த ராமாயண தீவட்டிக்கொள்ளையின் விபரம் பின்வருமாறு.

வெள்ளைக்காரரிடம் கைகட்டி ஊழியம் செய்து 75ரூபாய் சம்பளம் வாங்கி ஜீவித்து வரும் ஒரு பார்ப்பான் ஆபீசில் வேலைதீர்ந்து மாலையில் வீட்டுக்கு போகும்பொழுது இவ்வூர் டவுன் மணிக்கூண்டுக்கருகிலுள்ள கார்பொரேஷன் ஜூப்ளிக்குள் வந்து அங்கு சுகாதாரத்திற்காக வந்துகூடியிருந்த நம் தமிழ் மக்களிடம் தனக்கு ராமாயணம் சொல்லத்தெரியும், கொஞ்சம் கேளுங்கள் என அவர்களை தனது மாயவலையிற் சிக்கச்செய்து தனது அதிகப்பிரசங்கித்தனத்தை அவர்களிடம் காண்பித்து பிரதிதினமும் ஏராளமான ஜனங்களை வந்து கூடும்படியாகச் செய்து சுமார் 6-மாதகாலமாக ராமாயணம் பாரதம் முதலிய கதைகளைச்சொல்லி இடையிடையே பிராமணாள் சூத்திராள்என்பதான மொழிகளையெல்லாம் பிரயோகம செய்து நம்தமிழ் மக்களிடமிருந்து 1000க் கணக்கான ரூபாய்களையும் ஆடையாபரணங்களையும் கொள்ளையடித்துக்கொண்டுவந்தார். இதை அறிந்த இவ்வூர் சுயமரியாதை திருக்கூட்டத்தார் ராமாயணத்தின் யோக்கியதையை எடுத்துக்காட்டி அவனை அங்கு வரவிடாதபடி தடுத்துவிட்டார்கள்.

இராவணதாசன்,
திருச்சி.

---


## டிடக்டாவ்ஸ்
### அல்லது
## துப்பு இரகசியம் அறியும் கருவி.



இதன் உபயோகம் யாதெனில் இருப்பிடத்திலிருந்தே உம்முடைய காதலியையும் அவள் செய்யும் காரியங்களையும் அவள் அறிந்துகொள்ளாமலேயே இதன்மூலமாய்ப் பார்க்கலாம். உம்முடைய பின்னும் உமக்குத் தெரியாமல் நடக்கிறதை ஏககாலத்தில் இரண்டையும் இதன் மூலமாகக் கண்டுகொள்ளலாம். உமக்குத் தெரியாமல் உம்மைப்பின்தொடர்ந்து வருபவரை நீர் திரும்பிப்பார்க்காமலே இதன் மூலமாய்க் கவனித்துக்கொள்ளலாம். இன்னும் பலவித இரகசியங்களை இதன் மூலமாய் ஒருவரும் தெரிந்துகொள்ளாமல் கண்டு பிடிக்கலாம.

இத்துடன் பல கலர்களால்தயாரித்த படுக்கை அறையின் 4 அழகிய போட்டோ படங்களுடன் ஷை கருவி விலை ரூபா 2 தான்.

மலாய் நாடுகளுக்கு முன்பணம் வந்தாலன்றிக் கண்டிப்பாய் வி. பி. யில அனுப்பமுடியாது.

பாரிஸ் எம்போரியம் ஜி. டி. மதராஸ்.





நாலு தலைமுறை பரம்பரை சமஸ்தான வைத்திய நிபுணர்! பழனி சித்தவைத்தியசங்க அமைச்சர்!! தமிழ் சித்தவைத்திய கான்பரன்ஸ்களில் முதல் தர தேவ ஔஷதங்களென முதல்தர தங்கமெடல்களும் வைத்திய ஆசிரியர் பட்டமும் பெற்றவர்!!! முப்பு சேர்ந்த மருந்துகள்.

### பழனி. சி. எம். சாமி

# குரு தாளகபஸ்பம்-இருமலுக்கு

காசம், க்ஷயம், சுளை, இளைப்பு, இருமல், கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு இவைகள் எவ்வளவு நாள்பட்டதாயிருந்தாலும் சரி 9 வித காசமும் அவசியம் தீரும். 48 நாள் பஸ்பம் ரூ. 32. 24 நாளைக்கு ரூ 16. 6 நாள் புட்டி ரூ. 4. வி· பி. சார்ஜ் வேறு

ஒரு பிரபல டாக்டா சொல்வதைக் கவனியுங்கள்,

நான் தங்களிடமிருந்து தாளக பஸ்பம் அரை தோலாவும், அபச்செந்தூரம் அரைத் தோலாவும் தருவித்து அதைசுவாசகாச முடையவர் ஒருவர் இவ்வியாதியில் ரொம்பவும் கஷ்டப்பட்டுக்கொண்டு இனி பிழைப்பது அரிது என்று அழுகார். அவருக்குத் தங்களின் தாளக பஸ்பத்தைக் கொடுத்ததில் சுவாசகாசமென்னும் வியாதி தொலைந்து விட்டது. வியாதி சொஸ்தமான பின்பு அயச்செந்தூரம் பலம உண்டாவதற்காகக் கொடுத்து வந்தேன். மேற்படியாருக்கு பூரணபழையபலம்ஏற்பட்டுவியாதியஸ்தர் ரொம்பவும் தங்கள் மருந்துகளின் பெருமையையும அருமையான குணத்தையும் சொல்லி சந்தோஷப்படுகிறார். தங்கள் மருந்துகள் சித்தவைத்திய முறைப்படிக்கு முடித்த பெருமுறை மருந்துகள் என்று ரொம்பவும் சந்தோஷத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்

ஆயுள்வேத டாக்டர் எம். கிருஷ்ணசாமி நாயுடு,
அலங்கம் (வட ஆற்காடு) 16—3—27

பழனி சி, எம். சாமி குரு அப்ரேக் செந்தூரம் நீரிழிவுக்கு கைகண்டது புட்டி 15ரூ

" " நாகபஸ்பம் மூலத்திற்கு புட்டி 1க்கு 4. ரூ.
பிரமேக நிவாரணி வெள்ளை வெட்டை வியாதிக்கு புட்டி 1க்கு 2. ரூ.
பினாங்கு முதலிய அன்னிய தேசவாசிகள் ரூ அட்வான்ஸ் அனுப்பவேண்டும்.
ஏராளமான நற்சாட்சிகளை கேட்லாக்கில் பார்க்கலாம்.

## சித்த ஆயுள்வேத வைத்திய ஆசிரியர்

## C. மலையப்பசாமி
நித்தியானந்த வைத்தியசாலை
பழனி, S I.

சென்னை பிராஞ்சு ஆபீஸ்:—முருகன் ஏஜன்ஸி43அரமனைக்காரத் தெரு ஜி.டி.சென்னை.

5 ம் பக்கத் தொடர்ச்சி.

என்று மதுரைக் காஞ்சியிற் கூறப்படுகின்றது.

இதனுல் பண்டைக்காலத்தில், இக்காலத்திற் சிவகாருண்யக் கடவுளாகச் சிறப்பிக்கப்படுகின்ற பரமசிவன் முதலிய எல்லாக் கடவுளர்க்கும் உயிர்களைப்பலிகொடுத்துத் திருவிழாக் கொண்டாடிய வழக்கங் காணப்படுகின்றது. இந்நாளிலும் சிறு தெய்வங்களுக்கும், முருகன் முதலிய தெய்வங்களுக்கும் உயிர்ப்பலி கொடுத்து விழாவாற்றும் வழக்கத்தைக் காணுகின்ருேம். இத்தகைய அநாகரீகச் செயல்களை யகற்றவேண்டுமென அறிஞர்கள் முயல்கின்ற இக்காலத்தில், மேற் மேற்கூறிய பண்டைத்தமிழ் நூல் மேற்கோளை யெடுத்துக் காட்டி உயிர்ப்பலியிடும் வழக்கம் நம் முன்னோரால் கையாளப்பட்டதாகையால் நாமு ங்கைவிடக் கூடாதெனக் கூறி வழக்கிடுவோர் எவரேனுமுளரேல் அவ்வாறு வழக்கிடுவோரைச் சீர்திருத்தவாளரில் மக்களாக எண்ணமுடியுமோ!

இவ்வாறுள்ள— இக்காலத்திற்கேலாத— நாகரீகத்துக்குப் பொருந்தாத—வழக்கங்கள் பல வற்றைப் பத்துப்பாட்டிற் காணலாம். அவைகளையெல்லாம் வெறுக்கவேண்டியதே சீர்திருத்தத்திற்கு அடிப்படையாகும். பொருந்தாதனவற்றைப் போக்குவதால் பத்துப்பாட்டின் மாசற்ற முழு மணித்தமிழுக்கு யாதொரு குறைவுமுண்டாகாது. இனி எட்டுத்தொகை நூல்களைப் பற்றிச்சிறிது கூறுவோம். (தொடரும்)


## தமிழ் புக்கிப்பிங்.

விலை ரூபாய் 1.

கணக்கு வைக்கும் முறையை நன்கு போதிப்பது. ஒற்றைப்பதிவு, இரட்டைப்பதிவு இரண்டு பாகங்களுமடங்கியிருக்கின்றன. அநேக வியாபார இரகசியங்களையுமுடையது. வியாபாரிகள், மாணுக்கர்கள், கம்பெனி உத்தியோகஸ்தர்கள் எல்லோருக்கும் அவசியம்.

தேவி ஆஸ்ரமம்,

திரௌபதையம்மன் கோவில் வீதி,

புதுச்சேரி.

## புதிய கம்பளி, போர்வைகள் ரட்டுகள்.

எங்களிடத்தில், டிராவலிங் (Rugs) ரட்டுகள், சிங்கிள், டபிள், பார்ப்பதற்கு ரஞ்சிதமும், பான்சியாயும், சுற்றிலும் பூபோட்டதாயும், 60 X 90 அங்குல சயிசில் ரூ. 6—8—0 முதல் ரூ 25 விலை வரையில் இருக்கின்றன. மலை கூலியாள்களுக்கு வேண்டிய கருப்பு கம்பளிகளும் இருக்கின்றன. வேண்டிய சரக்குகளுக்கு கீழ்கண்ட விலாசத்துக்கு எழுதுங்கள்.

ஷா. தஞ்சிஜாவர்சந்த்,

தாரிவால் ஏஜன்ஸி,

சிக்கபேட்டை, பெங்களூர் சிட்டி.

## எதிர்கால சோதிடம்.

உங்கள் சாதகமல்லது கடிதம் எழுதும் நேரத்தையாவது குறித்தனுப்பினுல் எதிர்காலத்தைப்பற்றி ஒரு வருஷத்திற்கு வாராவாரம் நடக்கும் பலன்கள் தெளிவாகவும் விபரமாகவும் எழுதி அனுப்ப ரூ. 5. மாதவாரி பலன்கள் எழுத ரூ. 2. நாங்கள் எழுதும் பலன்கள் உண்மையோடுங்கூடியிருக்கும். அருட்பிரகாசர் சோதிடாலயம்,

வைத்திக்குப்பம்,

புதுவை. (பிரெஞ்சிந்தியா)

முந்துங்கள்! முந்துங்கள்!!

## ‘இந்திய-மாதா’

மிஸ். காதரைன் மேயோ என்னும் அமெரிக்க மாது தன் இந்திய—சுற்றுப்பிரயாணத்தில் கண்டவைகளையும், கேட்டவைகளையும் கொண்டு பெரும் பிரட்டாக நம்மையும் நம் சகோதரிகளையும் தூஷித்து எழுதியிருக்கும் புரட்டுப் புராண புஸ்தகத்தின் சுத்த மொழி பெயர்ப்பு.

இதை ஒவ்வொரு இந்தியரும் வாசித்து, அயல் நாட்டார் நம்மை எவ்வளவு இழிவுபடுத்தத் தயாராயிருக்கிறுர்களென்பதைத் தெரிந்து கொள்ளவேண்டும்.

பெரிய புஸ்தகம்உயர்ந்த பைண்டு.

புஸ்தகத்தின்பேரில் பாரத மாதாவின் படம் கண்ணைக் கவரும்படியாக பல கலர்களில் அச்சிடப் பட்டிருக்கிறது.

இங்கிலீஷ் பதிப்பு ரூ. 8—0—0 ஆக விற்கப்படுகிறது. தமிழர்கள் படிக்க வேண்டும் என்ற உத்தேசத்துடன் அசல் விலைக்கே விற்கிறோம். முன்பணம் ரூ. 1—8—0 அனுப்பிப் பதிவுசெய்து கொள்ளுங்கள்.

விலை ரூ. 1—8—0.

முன்பணம் அனுப்புவோருக்கு தபாற்செலவு இனும்,

கே. எஸ். முத்தையா கம்பெனி,

Book-Depot, சென்னை.

## சிருங்காரமான போட்டோ படங்கள்.

பாரிஸ் மாதர்கள், ஐரோப்பிய மாதர்கள் முதலோரின் அழகையும், அவர்களின் விநோத நடை உடை பாவனைகளையும் விளக்கும் பொட்டோ கார்டுகள் படுக்கையறையைச்சிறப்பிக்க ஒவ்வொரு வீட்டிலும் முக்கியமானவை. படங்களைப் பார்க்கப்பார்க்கப் பேரின்பம். உயர்ந்த கலர் பிளேன் படங்கள். பல ரகங்கள் கொண்ட டஜன் கார்டுகள் விலை ரூ. 1-15-0.

ப்ரேஞ்சு வாசனைக் கார்டுகள்.

வாசனைப் புட்டி வேண்டுமென்ற அவசியமில்லை. எப்பொழுதும் உயர்ந்த வாசனையோடு கூடிய ஷை கார்டுகள் டஜன் ரூ. 1 தான்.

இ: கிருஷ்ண ஏஜன்சி,

26, வெள்ளாளத் தெரு, புரசபாக்கம், மதராஸ்

பார்த்தீர்களா! இரகசிய நூல் படித்தீர்களா!!

ஹிப்னுடிஸ மெஸ்மரிஸ மென்னும்

## மனோவசிய ரகசிய சாஸ்திரம்.

இப்புத்தகம் ஆங்கில நாட்டார் செய்து அனுபவ மடைந்தது. இதில் தூங்காமல் தூங்குதல், தூக்கத்திலிருப்பவனைப் பலவித வேலை செய்வித்தல், பிறரை வசியப்படுத்தல், புலி முதலிய மிருகங்களைத் தன் வசப்படுத்தல், தூர சங்கதி அறிதல், மருந்தில்லாமல் நோய் தீர்த்தல் முதலிய பல ரகசிய மெஸ்மரிஸ சாஸ்திரம் சித்திரப் படங்களுடன் அடங்கியிருக்கிறது. விலை ரூ. 1—8—0. ஸ்ரீ பானுமதி புஸ்தகசாலை, சூளை போஸ்டு, மதராஸ்.

## மதுரை எலெக்ட்ரிக் கம்பெனி Ltd

ஷேர் 1-க்கு ரூ. 10.

தயவு செய்து ஷை கம்பெனியில் பங்குகள் எடுத்துக்கொள்ளுங்கள். மிகவும் லாபகரமானது. பிராஸ்பக்ட்டஸ்களுக்கும் விண்ணப்ப பாரங்களுக்கும் எழுதுங்கள்.

# என். தண்டபாணி அண்டு கம்பெனி.

## நம்பிக்கையான வர்த்தக ஸ்தலம்.

இங்கே கதர்த்துணிகள், சகலவித புத்தகங்கள், மருந்துகள், ஷாப் சாமான்கள் முதலியன எல்லாம் நயமாயும் நல்லதாயும் கிடைக்கும். தேவைக்கு எழுதுங்கள்

(திருப்தி இல்லாத சாமான்கள் திரும்ப வாபீஸ் பெற்றுக்கொள்ளப்படும்.)

குறிப்பு:—புத்தகங்களைத் தவிர்த்த மற்ற சாமான்களுக்கு ரூ 100க்கு 25 வீதம் முன் பணம் அனுப்புதல்வேண்டும்.

விலாசம்:—என். தண்டபாணி பிள்ளை, தபாற் பெட்டி 292, சைனாபஜார், கெ. 292, மதராஸ்

## இனாம்! இனாம்!

### ஸில்க் அங்க வஸ்திரம்.

பிரைஸ் சீட்டு.

என்ற இந்த சீட்டை ரூபாய் 1 விலைகொடுத்து வாங்கினவர்களுக்கு ஒரு ரூபாய் விலையுள்ள 5 சீட்டு அனுப்பப்படும். டி சீட்டு 5-ம் விற்று ரூபாய் 4-ம் சீட்டின் டூப்ளிகேட்டும் அனுப்பினவர்களுக்கு 4 ரூபாய் பொறுமான ஒரு சிறந்த ஸில்க் அங்கவஸ்திரம் இனாம் அனுப்பப்படும். நண்பர்களே, கவனியுங்கள். டி சீட்டு 5-ம் விற்று தாங்கள் கொடுத்த ரூபாய் ஒன்றும் எடுத்துககொண்டு மீதம் ரூபாய் நாலும் எங்களுக்கு அனுப்பிவிடவேண்டும். ஆகவே தாங்களுக்கு ஒரு நஷ்டமுமின்றி சிறந்த ஸில்க் அங்கவஸ்திரம் நீடித்த உழைப்பிற்கு உத்தரவாதமுள்ளது இனாம் கிடைப்பதை கவனியுங்கள். எட்டணா ஸ்டாம்புடன் இன்றே எழுதவும். 'ஜவுளி கேட்லாக் இனாம்' மானேஜர்,

எம். ஆர். வீவிங் பாக்டரி,
கோட்டார், திருவாங்கூர்.

## ஆநந்த குணபோதினி.

இரண்டாம் வருடம்.

இது போன்ற நவீன மாசாந்தர சஞ்சிகை இது வரை வெளிவரவில்லை. இது அபூர்வமும் சிறந்ததுமான வழியில் ஆங்கிலமாத சஞ்சிகைகளை யொப்ப உயர்தரமாய் நடத்தப்படுகிறது. எல்லாம் கருத்து, எல்லாம் களிப்பு, எல்லாம் அநுபவம், எல்லாம் புத்தி போதனைகளே. யாவும் சிந்தைக்கினிய, செவிக்கினிய அலங்கார வசன மழை. ஒவ்வொரு மாதமும் 56 பக்கங்கள் கொண்ட பெரிய பத்திரிக்கை இது ஒன்றேதான். 5000—சந்தாதார்கள்உள்ளது. வருட சந்தா ரூ.1, வெளி நாடு ரூ. 1—4—0 மாதிரி இனாம். இது பெரிய ஆஸ்தி. உடனே எழுதுங்கள்.

'ஆநந்த குண போதினி' ஆபீஸ்
302,தங்கசாலை வீதி, மதராஸ்.

## அறிக்கை.

எங்களிடம் பிரான்ஸி நல்ல சரகுள்ள வெள்ளி ஜரிகை மார்க்குகளும், பாம்பே குவாலட்டி மேல் கண்ட மார்க்குகளும், சூரத் மார்க்குகளும் கைவசமிருக்கிறது. உள்ளூர் ஜவுளி தினுசுகளும் இருக்கிறது. விலைஜாப்தா வேண்டியவர் எழுதினால் அனுப்பித்தருகிறோம்.

சி. லிங்கி செட்டி,
எஸ். வெங்கிட்டராம செட்டி,
ஜவுளி அண்டு ஜரிகை வியாபாரம்,
கோயமுத்தூர்.

ஒருமணி நேரத்தில் குணம்! ஆச்சரியமானது!!

## மன்மத ஸ்தம்பன குளிகை.

குணம் இல்லையென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 100 இனாமாகக் கொடுக்கப்படும்.

நேயர்களே! இந்த ஸ்தம்பனக் குளிகையானது முறையாகச் செய்யப்பட்டு பல பிரமுகர்களாலும் உபயோகிக்கப்பட்டு வருகிறது. பலர் பலபெயரிட்டு விளம்பரப்படுத்தியிருக்கும் மாத்திரையை நீங்கள் சாப்பிட்டிருக்கலாம், ஆனால் சொல்லியபடி நீங்கள் குணத்தைக் கண்டிருக்கமாட்டீர்களென்பது நிச்சயம். எங்கள் ஸ்தம்பனக்குளிகை அப்பேர்ப்பட்டதல்ல. அநுபவித்துப் பார்த்தவர்களுக்குத்தான் உண்மை விளங்கும். இந்த மாத்திரையை டைரக்ஷனில் சொல்லியிருப்பதுபோல் 10 நாள் சாப்பிட்டு வந்தால் ஆண் சிங்கத்தைப்போன்ற பலமும், ரோஜா புஷ்பம்போன்ற முகதேஜஸும், அழகும், தைரியமும் உண்டாகும். நீற்றுப்போன இந்திரியத்தை கெட்டிப்படுத்துவதில் இதற்கு நிகர் வேறு எதுவுமில்லை. உத்தரவாதம். உடனே எழுதுங்கள். டப்பி 1-க்கு ரூ. 2. உபயோகிக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்படும். வெளிநாடு நேயர்கள் அவசியம் முன்பணம் அனுப்பவேண்டும்.

ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி, தபால் பெட்டி 119, ஜி. டி. மதராஸ்.

மூன்றாவது வருஷம்! மூன்றாவது வருஷம்!!

தமிழ் மாத சஞ்சிகைகளில் முதன்மை பெற்றதும், பல்லாயிரக்கணக்கான சந்தாதார்களுடையதும், தமிழ் தலைவர்கள் எல்லோரும் போற்றி வருவதுமான

## ஆனந்த விகடன்

இதற்கு மூன்றாம் வருஷம் பிறந்து விட்டது. இப்பத்திரிகையில் நன்மதிப்பு நம்நாட்டு ஜனங்களிடம் நன்கு பதிந்து விட்டபடியால் புகழ்ச்சியாக நாம் ஒன்றும் கூறத் தேவையில்லை. இவ்விரண்டு வருஷங்களாக இதற்கு வருஷ சந்தா 2 ரூபாயாக இருந்தது. இந்த வருஷத்திலிருந்து இதை ஏழை முதல் எல்லோரும் படிக்கவேண்டுமென்ற கருத்துடன் ஒரு ரூபாயாக குறைக்கப்பட்டிருக்கிறது. இதில் மாசா மாதம் பல பெரிய மேதாவிகளால் எழுதப்படும் அரிய கட்டுரைகள் வெளிவரும். தேச நன்மைக்காகவும், தமிழரின் சுயமதிப்புக்காகவும் அரும்பாடுபட்டு எவருக்கும் அஞ்சாமல் தனது அபிப்பிராயத்தை சுயமே வெளியிடும் தமிழ் மாதப் பத்திரிகை இது ஒன்றேயாகும் இன்னும் விநோதமான விஷயங்களும், விகடப்பேச்சுகளும், வாழ்க்கையின் மர்மங்களும், வியாபாரக்குறிப்புகளும், வைத்திய விவசாயாதிகளும் அனுபவசாலிகளால் வரையப்பட்டு இப்பத்திரிகையில் இடங்கொள்கின்றன

### சற்று ஆலோசித்து முடிவு செய்யுங்கள்.

பிரதி மாதமும் 48 பாகங்களுடன் அடக்கமாய்ப் புஸ்தகம் போன்று வெளிவரும் இந்த அரிய தமிழ்ப் பத்திரிகைக்கு வருஷ சந்தா ரூபாய் ஒன்று தான் என்பதை யோசிப்பீர்களானால், லாபங்கருதி இப்பத்திரிகை அச்சிடப் படுகிறதில்லை யென்பதும் தமிழ் நாடெங்கும் இப்பத்திரிகை உலவ வேண்டுமென்ற பரோபகார எண்ணத்துடனேயே இது வெளிவருகிறதென்றும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல விளங்கும். இந்தியா, பர்மா, சிலோன் முதலிய இடங்களுக்கு வருட சந்தா தபால் கூலியுள்படரூ. 1—0—0 வெளி நாடுகளுக்கு முன்பணம் ரூ 1—4—0.

மாதிரி காப்பி இனாம்!

விலாசம்:— "ஆனந்த விகடன்" ஆபீஸ்,
244, தங்கசாலை வீதி, மதராஸ்.

தந்தி விலாசம்:— "விகடன்" சென்னை. டெலிபோன் 3311.

நமது வைத்தியசாலை பழனியில் ஸ்தாபித்து 26-வருஷமாகிறது. பழனியில் முதன் முதல் ஸ்தாபிக்கப்பட்டு உலகமேங்கும் நல்ல பேர் எடுத்த வைத்தியசாலை இதுவேயாகும்.

வைத்திய சாஸ்திரத்தில் மகா நிபுணர், முப்புவைக் கண்டுபிடித்தவர்.

ரிஜிஸ்டர்
TRADE MARK



இம்மருந்துகள் முதல்தரமான தேவ ஔஷதங்களென்று 1923-ல் திருநெல்வேலியில் கூடிய சித்தர் ஆயுள் வேத மெடிகல் கான்பரன்சிலும் 25—8—23-ல் சென்னையில் நடந்த மேற்படி கான்பரன்ஸ் அண்டு எக்ஸிபிஷனிலும், தங்கமெடலும் "வைத்திய ஆசிரியர்" என்று பட்டமும் பெற்றவர். ஒவ்வொரு மருந்துக்களுக்கும் கணக்கற்ற நற்சாக்ஷிப்பத்திரங்கள் வந்தவண்ணமாயிருக்கின்றன. அவற்றுள் சில அடியில் காண்பன.

# தாளகபற்பம்.

## இருமலுக்கு அனுபவத்தில் கைகண்டது. உத்திரவாத முள்ளது. புகையாது.

நமது பற்பம் முப்புவால் செய்ததால் நெருப்புக்கு ஓடாது. மற்றவர்கள் பற்பத்தை நெருப்பில் வைத்தால் புகைந்து ஓடிவிடும்.

எவ்வளவு நாட்பட்ட ரத்தகாசம், க்ஷயம், ஈளை, இருமல், கஷ்டசுவாசம், கோழை, கபக்கட்டு, பீனிசம், ஜுரம் இருந்தாலும் சரி 8 வித காசமும் இதில் அவசியம் தீரும். 20-நாள் மருந்து அனுபான சூரணத்துடன் விலை ரூ. 25—0—0 ஏழைகளுக்கு ரூ. 12—8—0.

நற்சாக்ஷி:—நமது தாளகபஸ்பம் 6 நாளைக்குள் ரத்தகாசத்தால் உயிரைக் காப்பாற்றியதாக சொல்வதை கவனியுங்கள்.

நான் 8 மாதகாலமாய் ரத்தகாச வியாதியால் கஷ்டப்பட்டு ஒவ்வொரு நாளும் சாயங்கிரம் 6 மணிக்கு இருமல் வந்துவிடும். ராத்திரிகளில் சாதம் சாப்பிட்டால் அதிக உபத்திரவத்துடன் வாந்தியாய்விடும். உடனே வீசம்படி ரத்தம் விழும். அதுமுதல் விடியும் வரைக்கும் இமைகொட்டும் நேரங்கூட இடைவிடாது இருமிக்கொண்டே கபம், கோழையாக வந்து வெளியேறிக்கொண்டே அழுகிய கோழி முட்டையைப்போல் துர்வாடையுடன் வரும். காலையில் பார்த்தால் ஒருபடி கடம் இருக்கும். தலை சாய்த்து தூங்கி 8 மாதம் ஆகிறது. சரீரம் நாளுக்குநாள் மெலிந்து விட்டது. நடக்க சக்தியில்லை. இந்த நிலைமையில் மதுரை ஆஸ்பத்திரியில் மருந்து சாப்பிடலாமென்று போனேன். செல்மிஷன் செட்டியார் நான்படும் கஷ்டத்தைப்பார்த்து, தானும் இந்தப்படியே கஷ்டப்பட்டதாயும், தங்களுடைய தாளக பஸ்பம் சாப்பிட்டு சொஸ்தமடைந்ததாயும் சொல்லி தங்கள் விலாசத்தைக்கொடுத்தார். அந்தப்படியே தங்களுக்கு எழுதி 6 நாள் மருந்து சாப்பிட்டேன். ஏழாம்நாள் நல்ல எண்ணை தேய்த்து தலைமுழுகியதில் அந்த ராத்திரி நன்றாய் தூங்கினேன். ரத்தம் விழுவதும, இருமல், வாந்தி, கடம்ஸ்மூலதும், துர்வாடை வீசுவதும அன்றே நின்றுவிட்டது. அதிலிருந்து எல்லோரும ஆச்சரியப்பட்டார்கள். நல்ல பசி எடுக்கிறது. ஆகாரம் நன்றாய்ச் சாப்பிடுகிறேன். சரீரம் நல்ல திடத்துடன் நல்ல நிலைமையிலிருக்கிறேன், தூக்கம் நன்றாய் தூங்குகிறேன். இப்படியுள்ள வியாதியில் போன உயிரைக் காப்பாற்றிய மகான் யாரோ அவரை நேரில் போய் தரிசித்து நல்ல வாக்கு வாங்கிக்கொண்டுவா என்று இவ்விடத்திலுள்ளவர்கள் சொன்னார்கள். அந்தப்படி நான் நேரில் வந்து தரிசித்தேன். ப. வீரயலை செட்டியார், சிங்கம்பிடாரி, ராமநாட்: 10—12—24.

ஆஸ்தமா என்பது தீராத ரோகம். அப்படியுள்ள ரோகத்திற்கு நமது தாளபஸ்பம், வகையரா சேர்த்து 20-நாள் சாப்பிட்டு பூரண சொஸ்தமாகி புகழ்ந்து எழுதியதைக் கவனியுங்கள்:— அகண்ட பரிபூரண மண்டாலகார சர்வ பரிபூரண சச்சிதானந்த மயமாய் விளங்கும், கதிர் வேலுக்கு எதிர் வேலில்லை என்கிற வாக்கியம் தங்களுக்கே தகுதியானது. என் சம்சாரம், கமலத்தம்மாளுக்கு 10 வருஷகாலமாயிருந்த ஆஸ்தமா என்ற வியாதி தங்களுடைய மருந்தினாலும் பழனி ஆண்டவர் அருளாலும் மேற்படி வியாதி படாபஞ்சாக பறந்துவிட்டது. (அதாவது) சூரபதமனுடைய சைமன்யங்களும், சிம்ம மகா சூரனென்ன, தாருகா சூரனென்ன, பானுகோப சூரனென்ன, இவர்களை தன் சக்தி வேலாயுதத்தினால் அந்த அசுரர்களை வென்று தேவர்களுக்கு அபயம் கொடுத்தார். அந்த வேலை நீங்கள் "தெய்வம் மானுஷ ரூபேண," என்கிற பிரகாரம் தங்களை தன்னுடைய அடிவாரத்தில், பக்தனாக வைத்துக்கொண்டு உலகப்பிரசித்தியாக்கி எங்களைப் போன்ற ஏழை எளியதுகளுக்கு தங்களை ஒரு சிரோரத்தினமாக வைத்திருக்கிறார். ஏதோ இப்படிச்செல்லாம் ஸ்துதிசெய்து எழுதினேனென்று வருத்தப்படக்கூடாது. நான் பட்ட அவஸ்தை அந்த பகவானுக்குத்தான் தெரியும். தாங்கள் அந்த அவஸ்தையை நீக்கியதால் நான் ஆனந்த கடலில் மூழ்கி ஆனந்த கண்ணீர் பெருகி இந்த கடிதத்தை எழுதினேன். தங்களை தெய்வமாக நம்பியிருக்கிறேன். ஆர் கைலாச சாஸ்திரி, பிராமண சங்க உபாத்தியாயர், 38 தெரு, 29-ம் நெம்பர் வீடு, ரங்கூன். 15—7—26.

வைத்திய ஆசிரியர்,

**ஆர். எம். கே. வேலுசாமி பிள்ளை,** சித்த வைத்தியசாலை, பழனி.

தந்தி விலாசம் "சித்தர்" பழனி

நமது பிராஞ்சு வைத்தியசாலை 29, பிராட்வே மதராஸ்.

நமது வைத்தியசாலை பழனியில் ஸ்தாபித்து 26-வருஷமாகிறது. பழனியில் முதன் முதல் ஸ்தாபிக்கப்பட்டு உலக மெங்கும் நல்ல பேர் எடுத்த வைத்தியசாலை இதுவேயாகும்.

வைத்திய சாஸ்திரத்தில் மகாநிபுணர், முப்புவைக் கண்டுபிடித்தவர்.

ரிஜிஸ்டர்
TRADE MARK



இம் மருந்துகள் முதல்தரமான தேவ ஔஷதங்களென்று 1923-ல் திருநெல்வேலியில் கூடிய சித்தர் ஆயுள் வேத மெடிகல் கான்பரென்சிலும் 25-8-23-ல் சென்னையில் நடந்த ஷை கான்பரென்ஸ் அண்டு எக்ஸிபிஷனிலும், தங்க மெடலும் "வைத்திய ஆசிரியர்" என்று பட்டமும் பெற்றவர். ஒவ்வொரு மருந்துகளுக்கும் கணக்கற்ற நற்சாக்ஷிப்பத்திரங்கள் வந்த வண்ணமாயிருக்கின்றன. அவற்றுள் சில அடியில்காண்பன

## தாதுபுஷ்டியில் மன்மதனுக் கொப்பாவர்.

பலனில்லாவிடில் பணத்தை திருப்பிக்கொடுக்கப்படும்.

நீங்கள் என்றுமழியாத இளமைப் பருவத்தை அடைய வேண்டுமானால்,

## பழனி ஆர். எம். கே.

# தங்க பஸ்பம்

## நரசிங்க லேகியத்தில் சாப்பிடுங்கள்.

இது ஒரு கற்பத்திற்கு சமானமானது. உலகப்பிரசித்தி பெற்றுவிட்டது.

தாது புஷ்டிக்கு இதற்கு நிகரான மருந்து ஒன்றுமேயில்லை! இது பிரபுக்கள் சாப்பிடவேண்டிய மருந்து!
மற்றவர்கள் சாப்பிட்டு தாங்கமுடியாது.

இதிலமைந்திருக்கும் ஓர் அபூர்வசக்தி உபயோகித்தவர்களுக்குத்தான் இதனருமை தெரியும். இதைக் காலை மாலை கோய்பலம்போல் 1, மண்டலம் உட்கொண்டால் வெகு சீக்கிரத்தில் வீரியத்தையும், பலத்தையும் கொடுத்து இழந்து போன ஆண்மைத்தனம் முழுமையும் திரும்பிவரும்படி செய்கிறது. இக்குணம் இதிலமைந்திருப்பது மகா ஆச்சரியமாயிருக்கிறது. இப்படியும் ஒரு மருந்துண்டாவென்று பிரமிக்கச்செய்கிறது. தாதை கட்டுவதில் அபாரசக்தி வாய்ந்தது. இதின் பெருமையை எழுதி முடியாது. நீரிழிவு, பிளவை, குன்மம், காசம், க்ஷயம், ஈளை, இருமல், கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு, குஷ்டம், சூலை, கிரந்தி, கருமேகம், செம்மேகம், வெள்ளை, வெட்டை, கடுப்பு, எரிச்சல், மூலம், பவுத்திரம் சகலவித கர்ம வியாதிகளையும் நிவர்த்தி செய்து, தாதுபுஷ்டியை உண்டாக்குவதில் இதற்கு மிஞ்சின ஔஷதமில்லை. பத்தியமில்லை: 100 நாளைக்கு தங்க பஸ்பமும், நரசிங்க லேகியமும் ரூபாய் 100. 50 நாளைக்கு ரூபாய் 50. 25 நாளைக்கு ரூபாய் 25.

மேகரோகம் கொடிய வியாதியில்லாதவர்கள் தாதுபுஷ்டி சரீரதிடம் அடைய தங்கபற்பத்தை அனுபானம் மகா மன்மத கேசரி அல்வாவில் சாப்பிடவும். காமகேசரி அல்வாவும் தங்கபற்பமும் 100 நாள் மருந்து ரூபாய் 50. 50 நாளைக்கு ரூபாய் 25. 25 நாளைக்கு ரூபாய் 12—8—0.

நற்சாக்ஷி:— 1-9-24ல் கோலாசெலங்கர் டிஸ்டிரிக்ட் ஹாஸ்பிடல் அஸிஸ்டெண்ட் ஸர்ஜன் நமது தங்க பஸ்பத்தைப் பற்றி புகழ்வதை கவனியுங்கள்:— அன்பார்ந்த வைத்திய ஆசிரியர் ஆர். எம். வேலுசாமி பிள்ளை அவர்களுக்கு அதிக பக்தியுடன் எழுதுவது யாதெனில், தங்க பஸ்பமும், சாலாமிசிரி லேகியமும் இரு நோயாளருக்கு 50 நாட்களாக கொடுக்கப்பட்டது. இருவரும் தங்கள் குறைகள் நீங்கி நல்ல சவுகரியத்தையடைந்திருக்கிறார்கள். தாங்கள் அருமையாகச்செய்த பஸ்பமும், லேகியமும் யாவராலும் கொண்டாடத்தக்கதே. இன்னும் 100 நாளைக்கு தங்க பஸ்பமும், சாலாமிசிரி அல்வாவும் ரூபாய் 50 க்கு வி. பி. செய்யவும். ஷை டாக்டர் அவர்களே 19-1-25ல் எழுதுவதை கவனியுங்கள்:— தங்களின் அருமையும் பெருமையுமான தங்க பஸ்பமும், சாலாமிசிரி லேகியமும் எனது நோயாளி ஒருவருக்குகொடுத்தேன். அவரின் எத்தனையோ விதமான நோய்கள் பஞ்சுபோல் பறந்து போய்விட்டது. இப்போது அவர் நல்ல திடதேகியாயிருக்கிறார். ஆகையால், அடியிற்கண்ட மருந்துகளை அனுப்பவும். தாம்பர பஸ்பம் 30-வேளை தாளிசபத்திரி சூரணம் 40-வேளை ஒருமாதம் சாப்பிடக்கூடிய நரசிங்க லேகியம், தங்க பஸ்பம் ரூபாய் 50. செலவு ரூபாய் 2. ஆக ரூபாய் 97-க்கு வி. பி. செய்யவும்.

ஷை டாக்டர் அவர்களே 2-6-25-ல் எழுதுவதை கவனியுங்கள்:— ஸ்ரீமான் வைத்திய ஆசிரியரவர்களுக்கு தங்களின் மருந்துகள்யாவும் நோயாளர் யாவருக்கும் சுகத்தையும், மகிழ்ச்சியையும் கொடுத்திருக்கின்றது. தங்கள் மருந்துகளின் அருமையையும், பெருமையையும் நான் அநேகருக்கு அநுபவமாக அத்தாக்ஷியுடன் எடுத்துக் காட்டியிருக்கிறேன். தங்கள் மருந்துகளுக்கு சர்டிபிகேட் தேவையில்லை. மருந்துகள் தாமே தங்கள் பெயரை எங்கும் விளங்கச்செய்கின்றது. ஆகையால் தாம்பர பஸ்பம், நரசிங்க லேகியம், பவள பஸ்பம் இவைகளை வி. பி. செய்யவும். (ரூபாய் 238-க்கு வி. பி. பார்சலில் அனுப்பியிருக்கிறது) P. Nagalingan Hospital C/o Disrict Hospital Kualaselenger.

வைத்திய ஆசிரியர்,

## ஆர். எம். கே. வேலுசாமி பிள்ளை,

சித்த வைத்தியசாலை, பழனி.

தந்தி விலாசம்:— "சித்தர்" பழனி.

நமது பிராஞ்சு வைத்தியசாலை 29, பிராட்வே மதராஸ்.

# குடும்பத்துக்கோர் பொக்கிஷம்.

சில மாதங்களுக்குள்

## "இல்வாழ்க்கையின் இரகசியங்கள்"

11,000 பிரதிகள் விற்பனையாகி யிருக்கின்றன. ஒருவர் வாங்கிப் படித்தால் அவர் தம் நண்பர்கள் யெல்லோரையும் வாங்கும்படித் தூண்டுகிறார். எனவே இப்புத்தகத்திற்கு உள்ள மதிப்பை நாங்கள் சொல்லாமலே தெரிந்து கொள்ளலாம்.

**இல்வாழ்வை நல் வாழ்வாக**

நடத்த உத்தேசிக்கும் ஸ்திரீ புருஷர்கள் கையில் இந்நூலின் பிரதி யொன்று இருந்தே தீரவேண்டும்.




# இல்வாழ்க்கையின் இரகசியங்கள்.

**மூன்றாம் பதிப்பு விலை ரூ. 2.**

ஒவ்வொரு ஊரிலுமுள்ள புஸ்தக வியாபாரியிடமும் கிடைக்கும். போலிப் புஸ்தகங்களை வாங்கி ஏமாறுதீர்கள். புஸ்தகத்தின் பேரில் "வாசன் புஸ்தகசாலை" என்ற பெயர் இருக்கிறதாவென்று பார்த்து வாங்குங்கள்.


எமதுவிலாசம்:—

**வாஸன் புஸ்தகசாலை,**

**244 தங்கசாலை வீதி, தபால் பெட்டி 119, மதராஸ்.**



## Photo Hand Camera



லண்டனில் புதிதாய்ச் செய்யப்பட்டது. எவரும் எளிதில் போட்டோ பிடிக்கலாம். போட்டோவின் அளவு 3½"x 2½" ஆகும், இந்த மெஷினை வைத்துக்கொண்டு மாதம் ரூ. 30 முதல் 200 வரை சம்பாதிக்கலாம். எல்லா சாமான்களுடனும் விவரங்களுடனும் குறைந்த விலை ரூ. 4—12—0.

Sole Agents ஸ்ரீதனம் அண்டு கம்பேனி,

பிரும்ம சமாஜம், ஜி. டி. மதராஸ்



## பனி! பனி! பனி!

குளிர் காலத்திற்கு அடக்கமான கம்பளிப் போர்வைகள் சுத்தமான உரோமத்தால் நம் நாட்டில் நெசவு செய்யப்பட்டவை. 6 முழ நீளம் 3 முழ அகலமும் அழகிய பல நிறங்களில் கிடைக்கும்.

| | | | | |
|---|---|---|---|---|
| நெ. 1. | 6 முழ நீளம் | 3 முழ அகலம் | ரூ. | 15. |
| 2. | ,, | ,, | | 12. |
| 3. | ,, | ,, | | 10. |
| 4. | 5 ,, | 2½ ,, | | 8. |

| | | | |
|---|---|---|---|
| கம்பளித் தொப்பி நெ. | 1 | உருப்படி 1-க்கு | 3-8-0 |
| ஷை | 2 | ஷை | 2-8-0 |
| ,, | 3 | ,, | 2-0-0 |

பட்டு பீதாம்பர கம்பெனி, காசி.



## ஞான திருஷ்டி.

இப்புத்தகத்தில் இறந்தவர்களுடன் பேசுதல், காணாமல் போனதைக் கண்டெடுத்தல், இருக்குமிடமிருந்தே தூர தேசங்களைப் பார்த்தல், மனிதர்களின் திரிகால வர்த்தமானங்களை அறிதல் முதலியன எழுதப்பட்டுள்ளன. "ஞான திருஷ்டிக் கண்ணாடி" என்னும் உபயோகிக்கும் கருவியுடன் விலை ரூ. 1—8—0. தபால் கூலி பிரத்தியேகம். பினாங்கு, சிங்கப்பூர் முதலிய வெளியூர் வாசிகள் முன் பணம் அனுப்பவேண்டும். ஆரியன் ஸைகிக் இன்ஸ்டிட்யூட், சௌகார்பேட்டை, மதராஸ்.



9-ம் பதிப்பு! வெளி வந்து விட்டது 9-ம் பதிப்பு!!

## ஆங்கில ஆசான் (ஒன்பதாம் பதிப்பு)

தமிழ் நாட்டில் சுமார் 2,50,000 இரண்டு லட்சத்து ஐம்பதினாயிரம் ஜனங்களுக்குச் சுலபமாய் இங்கிலீஷ் கற்றுக்கொடுத்ததும், இதைப்போன்ற அநேக புஸ்தகங்கள் பின்னால் பணம் பறிக்கும் பொருட்டு அநேகரால் தயார் செய்யப்பட்டாலும் முதன் முதல் வெளிவந்ததும், நிகரற்றதும், நற்கியாதியும் ஏராளமான நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்றதும் சென்னை சட்டசபை வித்யா இலாகா மந்திரி அவர்களால் நன்கு மதிக்கப்பட்டு அவரிடமிருந்து உயர்ந்த நற்சாக்ஷிப் பத்திரம் வாங்கப்பட்டதுமான எமது ரிஜிஸ்டர்டு லேடி டிரேட்மார்க் போட்டுள்ள,

ஆங்கில ஆசான் என்ற பெயர் பார்த்தும், இப்படத்தில் காட்டியுள்ள லேடி டிரேட்மார்க் இருக்கிறதா வென்று கவனித்தும் புத்தகம் வாங்குங்கள்.




800 பக்கம் முழு காலிகோ பயிண்டு விலை ரூ. 2—0—0

வி. பி. தபால் செலவு அணா 0—8—0

தி. இராஜகோபால் முதலியார், 302 தங்கசாலைத் தெரு, மதராஸ்


**பார்ப்பனீயம் ஒழிய**

**குடி அரசையும், திராவிடனையும் படியுங்கள்.**

ஸ்ரீமதி நாகம்மாளவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.